www.tamilarangam.net



# தமிழீழவியன் கவிதைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழோவியன் கவிதைகள்

கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுக் குழு

www.tamilarangam.net

# சமர்ப்பணம்

எப்போது மென்னை இயக்கி வரும் தெய்வங்களாம்
அப்பா ரெங்கனுக்கும் அம்மா சின்னப்பிள்ளைக்கும்
பெற்ற மகன் ஆறுமுகம் தமிழோவியன் தன் கவிதைகளை
உற்றநல் நூலாக உவந்தளித்தேன்

www.tamilarangam.net

முதற்பதிப்பு : டிசம்பர் 2000

© இன்பராஜ் கதிர்காமநாதன்

விலை : இந்தியா ரூ.40.00
இலங்கை ரூ.100

| | | |
|---|---|---|
| Title | : | THAMIZHOVIYAN KAVITHAIKAL |
| Author | : | **THAMIZHOVIYAN** |
| Subject | : | Verses on various subjects in Tamil |
| Size | : | 14 x 22 |
| No. of Pages | : | 152 |
| Type | : | 10 point |
| Paper | : | 16 kg creamwove |
| Binding | : | Art Board |
| Price | : | S.L.Rs.100.00, INR.40 |
| Sales in India | : | **KUMARAN PUBLISHERS**<br>3, Meigai Vinayagar Koil St,<br>Vadapalani, Chennai-600 026. |
| Publishers | : | **KALAI OLI MUTHIAH PILLAI MEMORIAL COMMITTEE**<br>39/21 Alwis Place, Kotahena,<br>Colombo-13.<br>Tel : 435652. |
| அட்டைப்படம் | : | ஓவியர் சௌந்தர் தங்க வடிவேல்,<br>டென்மார்க் |

INTERNET : www.tamil.net_project.madurai

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளடக்கம்


வெளியீட்டுரை - 6
ஆசியுரை - சைவநன்மணி அ.மு.துரைசாமி அவர்கள் - 8
அணிந்துரை - இர. சிவலிங்கம் - 9
தமிழோவியன் கவிதைகள்:
மலையகக் கலாசாரத்தளத்தில் ஓர் எதிர்ப்புக்குரல் -
-மு.நித்தியானந்தன் - 13
முன்னுரை - 30


## கவிதைகள்


நாடற்றவர்? - 33
பரதேசி ஆனேம்! - 35
வரந்தருக இறைவனே! - 36
நரகம் - 38
உரிமைக்கு ஒரு போர் - 41
தலை நிமிர... - 43
கதராடையும் கள்ளத்தோணியும் - 45
படுகொலைக்குப் பாயிரம் - 47
அகதித்தமிழர் - 50
தூசி - 51
அச்சம் தவிர் - 53
விடுதலை - 55
சிறிய வெளிச்சம் - 57
கோபுரங்களை நோக்கி - 59
கனவு கண்டேன் - 63
கனவுக்கோலம் - 66
அமைதி இல்லை - 67
பஞ்சப்படி - 69
இது பொறுப்பதில்லை - 71
புதுப்பரணி - 73
வெளியில் வந்து... - 74
களம் காண்போம் வாரீர் - 75
முத்தையா முரளிதரன் - 77
புனிதங்கள் பூத்திடட்டும் - 78
நடிகன்/மனிதன் - 80
தலைவர்+கங்காணி+முதலாளி - 81


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேயிலையே தினமும் காப்பாய் - 83
காலத்திற்கு ஒரு மனு - 85
மாவே விலை குறைந்து வா! - 87
அடிமை இருள் ஒழிய... - 89
இழிவினை நிறுத்து - 90
துயர் ஓவியம் - 92
நடிகரோ நண்பர்? - 93
கன்னம் சிவந்த கதை - 95
காதல் நினைவு - 96
மயக்கம் - 97
சொல்லில் அடங்காத சுகம் - 98
ஜீவநாளங்கள் - 99
வனிதை நீ நடிகைதானோ? - 100
இன்பச்சுவடி - 102
மோகம் - 103
தோல்வி முடிவல்ல - 104
லயத்தானை மணப்பாயா? - 107
சாதி என்றும் சதி - 109
ஆயிரம் துணையாமோ? - 112
கருகிய மலர் - 115
அக்கரைகள் பச்சை இல்லை - 117
மனிதம் தழைத்தோங்கும் மலை - 119
வெறி - 121
மண்ணும் மசானமும் - 123
கள்ளப்பேர் கணக்கப்பிள்ளை - 124
இயேசுநாதரே, எழுந்து வாருமே! - 127
கலைவாணி - 129
தந்தை செல்வா - 130
புனிதர் ராஜலிங்கம் - 131
தியாகி வெள்ளையன் - 132
தலைவர் தொண்டமான் - 134
கவிஞர் சி.வி. - 136
இர. சிவலிங்கம் - 138
தலைவர் வன்னியசிங்கம் - 141
தவத்திரு தனிநாயகம் அடிகளார் - 143
பேராசிரியர் விபுலாநந்தர் - 144
பாரதிதாசன் - 145
என்.எஸ்.எம்.ராமையா - 148
குறிஞ்சித்தென்னவன் - 149

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளியீட்டுரை

**ம**லையகத்தின் பத்திரிகைத்துறை முன்னோடியான கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவாக நாம் மேற்கொண்ட மொழி, இலக்கிய முயற்சிகள் தமிழ் அன்பர்களின் பேராதரவைப் பெற்றிருப்பது குறித்து நாம் மகிழ்வடைகிறோம்.

1994ல் நாங்கள் வெளியிட்ட ''மலையகப்பரிசுக் கதைகள்'' மலையகத்தின் பரந்த எழுத்தாளரணியின் கூட்டு மொத்தமான உழைப்பின் அறுவடை என்றே கூறத்தோன்றுகிறது. அத்தொகுப்பில் இடம்பெற்ற அல் அஸ்மத்தின் **''விரக்தி''** இந்தியாவின் **'கதா'** விருதினை அவருக்குத் தேடிக்கொடுத்திருப்பதன் மூலம் மலையக எழுத்தின் பரந்த அங்கீகாரத்தை நிரூபணம் செய்துள்ளது.

இதனை அடுத்து நாங்கள் வெளியிட்ட ''மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்'' என்ற மாத்தலை பெ.வடிவேலனின் நூல் அமரர் இர.சிவலிங்கம் அவர்கள் குறிப்பட்டிருப்பதுபோல 'அசாத்திய துணிச்சலுடன் கூடிய ஒரு தீமிதிப்பு''த்தான். மானுடவியல் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்த நூல் அதுவாகும்.

நான்கு தசாப்தங்களாகத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் மூத்த மலையகக் கவிஞரான தமிழோவியனின் கவிதைகளைச் சேகரித்துத் தொகுத்து நூலாக வெளியிடும் சந்தர்ப்பம் இப்போதுதான் கனிந்திருக்கிறது. 1983ன் ஆடிக் கலவரத்தீயில் அச்சகத்தில் எரியுண்டு சாம்பலான தமிழோவியனின் கவிதைகளுக்கு உயிர்கொடுக்கும் மனநிறைவுடன் இத்தொகுப்பினை வெளியிடுகிறோம்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பேயே இத்தொகுப்பு முயற்சியில் நாம் ஈடுபட்டபோதும் கவிதைகளைத் தேடி எடுப்பதிலிருந்து பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளால் இந்நூல் வெளியீடு தாமதப்பட்டுக் கொண்டு வந்துவிட்டது. இன்னும் ஒரு தொகுப்புக்குரிய கவிதைகள் அவரிடமுள்ளன. அவரது கவியரங்கக் கவிதைகள் தனியே ஒரு தொகுப்பாக வெளிவரத்தக்கது.

மலையகத்தின் பேராசான் திரு.இர.சிவலிங்கம் அவர்கள் அமரராவதற்கு முன் ''தமிழோவியன் கவிதைகள்'' தொகுப்பிற்கு வழங்கியிருந்த அணிந்துரையைக் கொண்டு இந்நூல் வெளிவருவது நம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாக்கியமாகும். 1996ல் அப்போது சேகரிக்கக் கிடைத்திருந்த கவிதைகளை திரு.மு.நித்தியானந்தன் கோயம்புத்தூரில் திரு.இர.சிவலிங்கத்திற்கு அனுப்பிப் பெற்றிருந்த அணிந்துரை இதுவாகும்.

தமிழோவியனின் பெரும்பாலான அனைத்துக் கவிதைகளையும் சேகரித்து, தரம்கண்டு இத்தொகுப்பினைப் பதிப்பித்ததில் மு.நித்தியானந்தனின் உழைப்பு அளப்பரியது.

சென்னையில் நடைபெற்ற ''தமிழ் இனி 2000'' கருத்தரங்க மகாநாட்டில் ''தமிழோவியன் கவிதைகள்: மலையகக் கலாசாரத்தளத்தில் ஓர் எதிர்ப்புக்குரல்'' என்ற தலைப்பில் மு.நித்தியானந்தன் சமர்ப்பித்திருந்த ஆராய்ச்சிக்கட்டுரை தமிழோவியனின் கவிதைகள் மீது ஒரு புதிய பார்வையைச் செலுத்தியிருக்கிறது.

மலையகத்தில் நன்கு அறியப்பட்டவரும் - அனைத்து எழுத்தியக்கம் சார்ந்தவர்களுடனும் நல்லுறவு கொண்டவருமான தமிழோவியனின் கவிதைகளை நூலாக்கும் பணியில் மலையக இலக்கிய அன்பர்கள் யாவரும் தமது மானசீக ஆதரவினையும் ஆசியினையும் வழங்கியிருந்தார்கள்.

தமிழோவியன் கவிதைகளைத் தமிழுலகு ஆதரித்து வரவேற்கும் என்று நம்புகிறோம்.

25.10.00 — **எச்.எச்.விக்ரமசிங்க**
கொழும்பு — கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு

சைவநன்மணி, சேவாரத்தினம்,
**அ.மு.துரைசாமி,**
39/23, நெல்சன் லேன்,

www.tamilarangam.net

கொழும்பு - 03.
15.5.2000

## ஆசிச் செய்தி

மலையகத்தின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவரான திரு.தமிழோவியன் அவர்களின் கவிதைகள் அடங்கிய தொகுதி நூலுருப்பெறுவது அறிந்து மிக்க மகிழ்வடைகின்றேன்.

திரு.தமிழோவியன் நாடறிந்த கவிஞர். மலையகத்தின் மூலைமுடுக்கெங்கும் இவர் பெயர் பரவுமளவு இலக்கியப்பணியும், சமுகக்கலைப்பணிகளும் ஆற்றி வந்துள்ளார். ஏறத்தாழ நான்கு தசாப்தங்கள் இவரது பணிகள் நீடித்துள்ளமை குறிப்படத்தக்க அம்சமாகும்.

நண்பர் தமிழோவியன் இளைஞராக இருந்த காலத்திலிருந்து நான் அவரை நன்கறிவேன். மிகுந்த துடிப்பும், ஆர்வமும் மிக்கவராக அவர் பொதுப்பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அவரது கவிதைகள் பலவகைப் பரிமாணங்களைக் கொண்டன. தான் உணர்ந்து அநுபவித்தவற்றைச் சொல்லாக வடித்தவர் இக்கவிஞர். அவரது கவிதைகள் இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் சேர்க்கப்பட்டமையே அவர்தம் கவித்திறனுக்கு மிகச் சிறந்த சான்றாகும்.

உண்மையில் திரு.தமிழோவியனின் கவிதைகள் பல நூல்களாக வெளிவந்திருக்க வேண்டும். எனினும் இப்போதாவது நூலுருப்பெறுவது கண்டு நான் மிகவும் மகிழ்கிறேன்.

கவிஞர்.தமிழோவியனின் தமிழ்ப்பணிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரியன.

இங்ஙனம்,
**ஏ.எம்.துரைசாமி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணிந்துரை

## -இர.சிவலிங்கம்-

அறுபதுகளில் அரும்பிய மலையக மறுமலர்ச்சி ஒரு புதிய பரிமாணத்தை உள்ளடக்கி இருந்தது. அதுவரைக்கும் நடைபெற்ற மலையகப் போராட்டங்கள், கிளர்ச்சிகள், எழுச்சிகள் அத்தனையுமே மலையகத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள், கோரிக்கைகள், புறக்கணிப்புகள் ஆகியவற்றை மையமாக வைத்தே நடைபெற்றன. மலையக மக்களின் மானுடம் மறக்கப்பட்டிருந்தது.

ஆனால் அறுபதுகளில் தன்மான உணர்வுகளால் செதுக்கப்பட்ட இளைஞர் இயக்கம் தரத்தாலும், தன்மையாலும் மாறுபட்டதாக இருந்தது. கற்ற இளைஞர்கள் தமது சமுதாயத்தின் தாழ்வுச் சிக்கல்களை அகற்றி தன்மான உணர்வுகளை சமுதாய சக்தியாக மாற்றத் துணிந்தனர். சமுதாய இழிவுகளைச் சாடிக் களைய போர்க்கோலம் பூண்டனர். அந்த புதிய சக்தியின் உத்வேகத்திற்கு எழுத்து ஓர் ஆயுதமாக அமைந்தது. மலையக மக்களின் இதயங்களில் நிரம்பி வழிந்த துயரங்களையும், சோகங்களையும், ஆத்திரங்களையும், எதிர்ப்பார்ப்புகளையும், நம்பிக்கை களையும், விரக்திகளையும் வெளிக் கொணர்வதற்காக கலை - இலக்கிய பரிமாணங்களை கருவியாகக் கைக்கொண்ட மறுமலர்ச்சி அறுபதுகளில்தான் மலையகம் முழுவதிலும் பரவியது.

அவர்கள் மானுட உணர்வுகளுக்கு மதிப்பளித்தனர். இதயத்தின் ஏக்கங்களுக்கு குரல் கொடுத்தனர். வாழ்வின் அவலங்களை எழுத்தில் தீட்டினார்கள். எழுத்தை ஒரு கருவியாக, ஒரு உந்து சக்தியாகப் பயன்படுத்தினார்கள்.

மலையகம் என்று தமக்கு ஒரு தன்மான மகுடம் சூட்டிக் கொண்டார்கள். மலையகக் கவிதைகள், மலையகச் சிறுகதைகள், மலையகக் கட்டுரைகள், மலையகக் கலைவிழா, மலையகக் கவியரங்கம், மலையக நாடகங்கள், மலையக ஏடுகள், வெளியீடுகள் என்று இந்த சமுதாய விழிப்புணர்வு பொலிவுடன் பவனி வந்தது. இவை மலையக மக்களின் இதயங்களையும், எண்ணங்களையும் எளிதாக ஆக்கிரமித்துக் கொண்டன. ஒரு மக்களின் எழுச்சியில் கலாசார சக்திகளுக்கு எத்தனை பங்குண்டு என்பதை இந்தப் புதிய பரிமாணங்களும், தோற்றங்களும் நிலைநாட்டின.

மலையக வரலாற்றை எழுத முனைந்த, எழுதி வடித்தவர்கள் இந்த அடிப்படை சக்தியின் உத்வேகத்தையும், பங்களிப்பையும் இருட்டடிப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்திருப்பது வேதனைக்குரியது. எனினும் கவிஞர் தமிழோவியன் போன்ற அந்த அறுபதுகளில் முளைத்த முன்னோடிகள் இந்த உண்மைகளை உறுதிப்படுத்துகின்றனர். அந்த அறுபதின் அருணோதயத்தில் பூத்த மலர்க்கொத்தைத் தான் இந்த கவிதை வெளியீடு தாங்கி வருகிறது.

அக்காலகட்டத்தில் ஒரு மலையக எழுத்தாளனின் எழுத்து எதிலாவது அச்சேறாதா என்று பலர் ஏங்கினார்கள். அந்த ஏக்கத்திற்கும் , அவர்களின் எழுத்தார்வத்திற்கும் எழுத்தாற்றலுக்கும் வழிவகுத்தது போல் 'வீரகேசரி' 'தினகரன்','தினபதி' போன்ற நாளிதழ்கள் மலையக எழுத்தளர்களுக்கு தனியிடம் ஒதுக்கின. மலையக இலக்கியம் வீறுநடை போட்டது. மலையக எழுத்தாளர்களின், புதிய பரம்பரையினரின் ஆக்கங்களை வெளியிட்டு ஊக்குவிக்க பலர் முன்வந்தார்கள். இலங்கை ஏடுகளில் மட்டுமல்ல இந்திய ஏடுகளிலும் மலையக எழுத்துக்கள் இடம் பெற்றன; பாராட்டுப் பெற்றன. மலையக மக்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் இந்த இலக்கியக் குமுறல்கள் புதிய உத்வேகத்தையும், சக்தியையும் ஊட்டின.

எல்லா ஒடுக்கப்பட்ட இனங்களும், மக்கள் சமுதாயங்களும் எழுத்தை ஒரு கருவியாகவே பயன்படுத்தி இருக்கின்றன. அமெரிக்காவில் கறுப்பு மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும், சமுதாய மறுமலர்ச்சிக்கும் எழுத்தைக் கருவியாக உபயோகித்துள்ளனர் தமிழகத்திலே கூட திராவிட இயக்கங்கள் பார்ப்பனிய சக்திகளை முறியடிக்க எழுத்தை ஓர் ஆயுதமாக பயன்படுத்தியுள்ளன. இன்று கூட தலித் இலக்கியம் ஓங்கி வரும் தலித் சக்திகளுக்கு வலிவூட்டும் ஒரு கருவியாக இருந்து வருகிறது. முக்கியமாக கவிதைகள் இந்த உணர்வுப் பிழம்புகளுக்கு உருவம் கொடுப்பதில் முதலிடத்தை வகிக்கின்றன.

கவிதை என்றால் என்ன? அது மரபு வழி நிற்க வேண்டுமா? உள்ளத்து உணர்வுகளுக்கு உயிர் கொடுத்தால் போதுமா என்றெல்லாம் முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இலக்கிய சர்ச்சைகள் ஏற்பட்டது உண்டு. இன்று அந்த நிலையில்லை புதுக்கவிதைகளும், ஹைக்கூ கவிதைகளும் கவிதைக்கு உயிரூட்டுபவன் கவிஞனே, இலக்கண மரபுகள் அல்ல என்ற நிலையை உருவாக்கி விட்டன.

கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை அவர்கள் கவிதையைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

**''உள்ளத்துள்ளது கவிதை – இன்பம்**
**உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை**
**தெளிந்துரைப்பது கவிதை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தக் கூற்றுப்படி தமிழோவியன் அவரது உள்ளத்து உணர்வுகளையும், இளமை அனுபவங்களையும் கவிதை நடையில் வடித்துத் தந்திருக்கின்றார். இக்கவிதைகள் அனைத்துமே ஒரு குறிப்பிட்ட காலத்துக்குட்பட்டன. அறுபதுக்கும், எழுபதுக்கும் இடைப்பட்ட காலத்திற்குட்பட்ட கவிதைகளே இந்நூலில் பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. அக்கால கட்டத்திற்குரிய இளைஞர்களின் குறிப்பாக மலையக இளைஞர்களின் அனுபவங்களை கவிதையாக்கியுள்ளார் தமிழோவியன். தோட்டத்து மக்களின் வாழ்க்கை அவலங்களை ஓவியங்களாகப் படைத்துள்ளார். சாதி, வறுமை, குடிப்பழக்கம், விரக்தி போன்ற உணர்வுகள் நன்கு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. பெரும்பாலும் இக்கவிதைகள் 'கதைக் கவிதைகளாகவே' அமைந்துள்ளன.

தமிழோவியனின் மலையகப் பற்றினைப் பளிச்சிட்டுக் காட்டும் சில வரிகளை குறிப்படாமல் இருக்க முடியாது.

**''கடலிடை முத்து! இன்பக்**
**காவியத் தீவு! தனது**
**உடலிலே மரகதப் பட்டை**
**உடுத்திய இலங்கை என்று**
**கடலினைக் கடந்தே வந்தோர்**
**களிப்புடன் கூறும் வண்ணம்**
**திடமிகு தமிழர் வளர்த்த**
**தேயிலை மணக்கும் நாடே**

என்ற வரிகள் உள்ளத்திலே பல்வேறு உணர்வுகளைத் தூண்டி விடுகின்றன. மலையகத் தமிழர்களை அந்நியர்களாகப் பார்க்காமல் மண்ணின் மைந்தர்களாய், சிற்பிகளாய் காணவேண்டிய கட்டாயத்தை இக்கவிதை வரிகள் பறைசாற்றுகின்றன.

நல்ல கவிதை பற்றிப் பேசுகையில் வில்லியம் வோர்ட்ஸ்வேத் என்ற ஆங்கிலக்கவிஞர், ''பொருளின் ஆழமும் மொழியின் பொலிவும் உணர்வின் கனலும்தான் அத்தியாவசியமானவையே தவிர இலக்கண அமைப்பும் நடையுமல்ல'' என்று குறிப்பிட்டார். ''கவிதையின் கண்ணீர் தேவதைகளின் கண்ணீர் அல்ல, மானுடத்தின் கண்ணீரே'' என்று வோர்ட்ஸ்வேத் கூறுகிறார். அந்தக் கண்ணோட்டத்தில் காணும்பொழுது தமிழோவியனின் கவிதைகள் மலையக மக்களின் வாழ்வைப் பொருளாகக் கொண்டு அவரது உணர்வுகளை சொற்சரமாக்கி அனுபவக்கவிதைகளை நமக்கு அள்ளிக் கொடுத்திருப்பது மலையக இலக்கியத்திற்கு அவர் அர்ப்பணிக்கும் அலங்காரக்கோவையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்போதோ வெளிவந்திருக்க வேண்டிய தமிழோவியன் கவிதைகளைத் தொகுத்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ள கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழுவிற்கு என் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

ஒரு சிற்றெறும்பின் சுறுசுறுப்புடன் என்றும் தணியாத மலையகத்துடிப்புடன் செயற்பட்டுவரும் அன்புத்தம்பி விக்கியின் பணிகள் பற்றி நான் பெருமைப்படுகிறேன்.

எத்தனை ஆயிரம் மைல் தொலைவில் வாழ்ந்தாலும் மலையகமக்கள் மீதும் மலையக எழுத்தின் மீதும் ஆர்வமும் அக்கறையும் ஆத்மார்த்தமான ஈடுபாடும் கொண்டு இந்தப் பணிகளுக்கெல்லாம் ஆதாரமான பலமாகத்திகழும் திரு.மு.நித்தியானந்தனின் சமூகப்பணி விதந்துரைக்கத் தக்கதாகும்.

தமிழோவியனின் கவிதைகள் வெளியீடு மலையகத்தின் இளங்கவிஞர்கள் ஒரு புதிய கவிப்பெருக்கையும் கலைப்பெருக்கையும் உருவாக்கத் துணைபுரியும் என்று என்போன்றோர் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழோவியன் கவிதைகள்

## -மலையகக் கலாசாரத்தளத்தில் ஒரு எதிர்ப்புக்குரல்

### -மு.நித்தியானந்தன்-

இலங்கையின் சுதந்திரவானிலே உதயஞாயிறின் ஒளிக்கிரணங்கள் வீசியபோது மலையகத்தமிழர் வாழ்விலோ அந்தகாரம் கவிந்தது. நூற்றாண்டுக்கு மேலாக தாங்கள் உதிரஞ்சொரிந்து உருவாக்கிய தேசத்தில் அவர்கள் அரசியல் அனாதையானார்கள். பத்துலட்சம் மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்ட சரித்திரம் உலகவரலாற்றில் நாம் காண முடியாத நாசகாரக் கொடுமையின் கதை.

மலைப்பிராந்தியத்தில் கொத்தடிமைகளாக அவர்கள் சிறைவைக்கப்பட்டனர். மலையகத்தமிழர் வாழ்வு மூடுண்ட காராக்கிரகமாகியது. மலையகத்தமிழர் வாழ்வை 'அடிமை இருட்சிறை' என்று குறித்தார் குறிஞ்சித்தென்னவன். 'அடிமைத்துவம் வேரூன்றிப்போன பிராந்தியம்' என்றார். சி.வி.வேலுப்பிள்ளை. 'கொத்தடிமைத்தனம்' (Bonded labour) என்று அண்மையில் வெளியான மலையகமக்கள் பற்றிய தனது நூலுக்கு தலைப்புத் தருகிறார் ஒட்வர் ஹொலப் என்ற ஆய்வாளர். மலையகமக்கள் வாழும் லயங்களை 'ஊழியச்சிறைக் கூடங்கள்' (Prison cells of labour) என்கிறார் டேவிட் செல்போன். 'இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்' என்று தன் மலையக நூலுக்கு மகுடமிடுகிறார் பி.ஏ.காதர். 'தேயிலையும் வறுமையும்' என்று தன் ஆய்வு நூலுக்கு தலைப்புத் தந்தார் நவாஸ் தாவூத். 'கடல் கடந்த இந்தியமக்களின் நிலைதான் இன்னும் இழிவகற்றப்படாததாக - இருள் சூழ்ந்ததாக இருக்கிறது' என்று ஏங்கினார் இர.சிவலிங்கம்.

ஒரு சுதந்திர உலகின் நாகரிக பிரஜைகளாக - தம்மைத்தாமே ஆளும் உரிமை கொண்டவர்களாக மலையக மக்கள் மாற்றமுறும் சரித்திரகதி திட்டவட்டமான அரசாங்கச் சட்டங்களால் நிராகரிக்கப்பட்டது. ரவுடித்தனமான அரசின் சட்டங்கள் மலையக சமூகம் நாகரிகத்தின் வாயிலில் கால்பதிக்கும் உரிமையை மறுதலித்தன. அரசியலின் பிரதான போக்கிலிருந்து அவர்கள் ஒதுக்கப்பட்டனர். ஜனநாயகமயமாக்கச் செய்முறையிலிருந்து அவர்கள் ஓரங்கட்டப்பட்டனர் சட்டங்கள் செய்வதிலிருந்து அவர்கள் தவிர்க்கப்பட்டனர். அவர்கள் தம்மை ஆளும்

www.tamilarangam.net



உரிமை கேட்பதிலிருந்து தள்ளிவைக்கப்பட்டனர். உயர்ந்த வாழ்க்கைத்தரம், உன்னதமான பொருளாதார இலக்குகள், உயரிய ஜனநாயகக் குறிக்கோள்கள்(?) என்றெல்லாம் பேரினவாத சமூகம் இயங்கியபோது, பிரஜாவுரிமையும் பறிக்கப்பட்டு, வாக்குரிமையும் இல்லாதவராய், 'நாடற்றவர்' என்ற நாமங்கொண்டு, பஞ்சம் - பசி - பட்டினி என்றும் மலையக சமூகம் இழிவுக்குள்ளானது. தொடர்ந்து மலையக மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் மனிதத்தைக் குழிதோண்டிப் புதைத்த அட்டூழியத்தின் சாட்சியங்களாகத் தொடர்ந்தன.

நிர்வாகயந்திரம் முழுதும் பேரினவாதிகளின் ஏகபோக உரிமையானது. மலையகமக்களை இழிவுபடுத்துவதை ஒரு கொள்கைபோலவே வரித்துக் கொண்டுவிட்ட அரசின் நிர்வாக யந்திரங்களில் - நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள், கச்சேரிகள், வைத்தியசாலைகள், தபால்நிலையங்கள், வங்கிகள், விதானைமார்கள், பஸ்நிலையங்கள், புகையிரதநிலையங்கள் எங்கிலும் பூரணமாக பேரினவாத சமூகத்தினரே கொலுவிருந்தனர்.

ஜனநாயக அரசியல் போக்கிலிருந்தும், நிர்வாக நடைமுறைகளி லிருந்தும் பூரணமாக ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் தோட்டத்தொழிலாளர்களின் காவலரண்களாக தொழிற்சங்கங்களே திகழ்ந்தன. தோட்டங்களின் தொழிற் தளங்களில் ஏற்படும் சம்பளம், வேலைநீக்கம் போன்ற தொழிலாளர்களின் நாளாந்தப் பிரச்சினைகளில் தீர்வு காணும் போராட்டங்களில் தொழிற்சங்கங்கள் முனைப்புக் கொண்டிருந்தன. பரந்த அடிப்படை உரிமைகள் சார்ந்த அரசியல் எழுச்சிக்கான மக்கள் இயக்கங்கள் வேர்கொள்ளவில்லை.

இந்நிலையில் சமூகவுணர்வுகொண்ட மலையக இளைஞர்களின் சமூக, அரசியற் செயற்பாடுகள் கலாசாரத்தளத்தில் செறிவுகொள்ள நேர்ந்தமையை மலையகத்தின் சமூகவரலாற்றில் காணமுடிகிறது. 'கலாசாரம்' என்கிற எண்ணக் கருவின் சிக்கல்பிக்கலான தன்மையைப் பற்றிக் குறிப்பிடும் ரேமண்ட் வில்லியம்ஸ் என்ற மார்க்ஸிய அறிஞர் கலாசாரத்தின் இரண்டு முக்கிய செய்முறைகளைப்பற்றி விபரிக்கிறார்.

1. கலாசாரம் என்பது உள்ளார்ந்த செய்முறையின் பெயர்ச்சொல்லாக அமைவது. (a noun of 'inner' process) இந்த செய்முறை 'அறிவுஜீவித வாழ்வு' மற்றும் 'கலைகள்' என்றுதான் வரித்துக்கொண்ட பகுதிகளில் விசேஷமாகச் செயற்படுகிறது.

2. கலாசாரம் என்பது பொதுவான - பரந்த ஒரு செய்முறையின் பெயர்ச்சொல்லாக அமைவது. (a noun of general process) இங்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'வாழ்க்கையின் சகல முறைமைகளையும்' ஒழுங்குபடுத்திச் செல்லும் விசேஷ தன்மையையும் கொண்டியங்குகிறது.

மலையகமக்களின் அடிப்படையான பொருண்மிய சரித்திரத்திலிருந்து எழும் சிந்தனைகள், நம்பிக்கைகள், சடங்குகள், கலை வெளிப்பாடுகள், சமயாசாரங்கள், குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கை நடைமுறைகள் என்பன கலாசாரதளத்தில் செயற்படுகின்றன. இது மலையகத்தின் உள்ளார்ந்த - ஆத்மார்த்தமான செயல்பாட்டு இயக்கமாகும். அதே சமயம் சமூக விழுமியங்கள் மற்றும் சமூக அர்த்தங்களை நெறிப்படுத்தும் நடைமுறைகள் வெவ்வேறுபட்ட - வித்தியாசமான வாழ்க்கை வழி முறைகளை சிருஷ்டிக்கும் சமூகச் செய்முறையாக விரிகிறது. இந்த சமூகச் செய்முறையாகச் செயற்படும் அர்த்தத்தில் அது சமூக, பொருளாதார, அரசியல் பிராந்தியங்களின் இடங்களை சுவீகரித்துக்கொள்கிறது. எனவேதான் மலையகத்தின் விசேஷமான சமூக உருவாக்கத்தில் கலாசாரத்தளத்தின் செயற்பாடு நமது நுணுகிய ஆய்வுக்குரியதாகிறது.

## 2

மலையகத்தின் கலாசார தளத்தில் நான்கு தசாப்தங்களுக்கு மேலாகச் செயற்பட்டு வந்திருக்கும் தனிக்கவி ஆளுமையாக தமிழோவியன் திகழ்கிறார். மலையக மக்களின் மீது தொடுக்கப்பட்ட - பிரஜாவுரிமைப் பறிப்பிலிருந்து - திட்டவட்டமான இன ஒடுக்குமுறையின் சகல கொடூரங்களையும் அவர் அனுபவித்தவர். சாதாரண மலையகத் தொழிலாளியின் குடும்பம் ஒன்று பொருளாதார நெருக்கடிக்குள்ளும், பின்தங்கிய சமூக, கல்விவளர்ச்சி நிலைகளிலும் எவ்வளவுதூரம் நின்று தாக்குப் பிடித்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு பாதுகாப்பிற்குள்தான் தமிழோவியனின் வாழ்வு ஸ்தாபிதமாகிறது. இந்த நச்சுவட்டச் சுழலில் இருந்து விடுபடல் அத்துணை லேசானது அல்ல. தனது சமூகம் ஒடுக்கப்பட்டதனை உணர்ந்து செயற்படத்துடிக்கும் ஒரு இளைஞனுக்கு அந்த அடிமை இருட் சிறையின் சில வாசல்களையே திறக்கக் கூடியதாய் இருந்தது. பதுளையில் திருக்குறள் மன்றம் அமைத்தும், தெளிவத்தையில் வள்ளுவர் கலாமன்றத்தை ஏற்படுத்தியும், கண்ணதாசன் நூல்நிலையத்தை அமைத்தும் மலையக இளைஞர்களின் விழிப்புணர்வுக்கு வழி சமைக்கும் பணிகளில் தமிழோவியன் அயராது உழைத்து வந்திருக்கிறார். இத்தகைய மன்றங்கள் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தோட்டப் பகுதிகளில் படித்த இளைஞர்களிடையே எழுச்சியை ஏற்படுத்துவதில் முக்கியபங்கினை வகித்தன. தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களிலே ஸ்தாபனப்படுத்தப்பட்டிருந்த நிலையில், படித்த இளைஞர்களின் எழுச்சியின் வெளிப்பாட்டுத்தளமாகவே இந்த சமூக, இலக்கிய, நாடக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மன்றங்கள் திகழ்ந்தன. சமூகவுணர்வு மிக்க இளைஞர்கள், மாணவர்களை ஒன்றிணைக்கும் அமைப்பாக இந்த மன்றங்களே அக்காலகட்டத்தில் அரிய பணியாற்றியுள்ளன.

''மன்றமமைத்து தோட்டங்களில்
முன்னேற்றங் கண்டிட
ஒன்றுபட்டு வாலிபர்காள்
தொண்டு செய்யுங்கள்!

என்றும்பழைய லயங்களிலே
நுடங்கிக் கிடக்காமல்
இன்றுமுதல் வெளியில்வந்து
உலகைப் பாருங்கள்''

என்று தெளிவத்தை தோட்டத்தில் தமிழோவியன் விடுத்திருக்கும் இந்த அழைப்பு மன்றங்களின் செயற்பாட்டை வலியுறுத்தும் வார்த்தைகளாகும்.

''பொது வாசக சாலைகளிலும் அடிக்கடி பல இடங்களில் நடைபெறும் கருத்தரங்குகளிலும் பொதுக்கூட்டங்களிலும் மலைநாட்டு இளைஞர்கள் பங்குபெறுவதைக் காண முடியவில்லை. நமது இளைஞர்கள் தங்களை நாங்கள் குறை கூறுவதாக எண்ணக்கூடாது. வாழ்க்கை பயன்படவேண்டுமென்று சொன்னால் அதற்கு பிரயாசையும் உழைப்பும் தேவை. மலைநாட்டினரது தலைவிதி இளைஞர் கையில் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துமுகமாக இக்கடிதத்தை எழுதுகிறேன்'' என்று ஸி.வி.வேலுப்பிள்ளை எழுதியுள்ள (வீரகேசரி,5.2.73) வாசகங்களை இங்கு தொடர்புபடுத்தி நோக்குவது உகந்ததாகும்.

தோட்டத்தில் கோயில் திருவிழாக்கள் இந்த இளைஞர்களின் மற்றுமொரு செயற்பாட்டு ஊடகமாகியது. கோயில் முன்றலிலும் பெரட்டுக் களத்திலும் தீப்பந்தங்களின் வெளிச்சத்தில் விடிய விடிய புராணக்கதைகளை கூத்துவடிவில் மேடையேற்றிய கையோடு சீர்திருத்த நாடகங்களையும் இந்த மன்றங்கள் மேடையேற்றின. தி.மு.க. பாணியிலமைந்த சமூக, சீர்திருத்த நாடகங்களையும் பின்னர் தோட்டத்துச் சூழ்நிலைகளையும் சித்திரிக்கும் நாடகங்களையும் இந்த இளைஞர்கள் மேடையேற்றினர். தோட்டப் பகுதிகளின் விழிப்புமிக்க இளைஞர்கள் நாடகமேடைகளைத் தமது சீர்திருத்தக் கருத்துகளுக்கு வழிசமைக்கும் களங்களாக மாற்றிவந்தனர்.

''தியாகி'', ''மனமாற்றம்'', ''மதிமயக்கம்'', ''ஏட்டிக்குப்போட்டி'', ''காதலின் வெற்றி'', ''பிள்ளைமனம்'', ''கலைப்பித்தன்'' போன்ற நாடகங்களை தமிழோவியன் கதை-வசனம் எழுதி, இயக்கி தோட்டங்களில் மேடையேற்றி இருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தங்களின் சிந்தனை விரிவுக்கும் புரிதலுக்கும் உட்பட்ட வகையிலே இவர்கள் ஆற்றிய சமூகப்பணியின் சாட்சியங்களாகவே இந்நாடகமேடையேற்றங்கள் அமைகின்றன.

## 3

தமிழக அறிஞர்கள், கலைஞர்களை அழைத்து மலையகமக்கள் மத்தியில் அவர்களை உரையாற்றவைத்த பணிகளை பொருளாதார வசதிகள் எதுவுமில்லாத நிலையிலும் இவர்கள் செயற்படுத்திய சாதனைகள் நினைவுகூரத்தக்கவை. கவிஞர் கண்ணதாசனை தமிழோவியன் பதுளைக்கும் தெளிவத்தை தோட்டத்திற்கும் கூட்டிச்சென்று அவர் சொற்பொழிவாற்றச் செய்த ஏற்பாடுகள் விதந்துரைக்கத் தக்கவை.

''1955ம் ஆண்டில் மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கமும் நான் செயலாளராக இருந்து பணியாற்றிய பதுளை திருக்குறள் மன்றமும் கூட்டாக இலங்கை நாட்டுக்கு முதன்முதலாக அப்போது ''தென்றல்'' பத்திரிகையின் மூலம் வாராவாரம் பெரும் இலக்கியக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்த கவிஞர் கண்ணதாசனை வரவழைத்தோம். மிகவும் சிரமப்பட்டே நிதியைத் தேடினோம்'' என்று எழுதுகிறார் தமிழோவியன் பதினேழு வயது இளைஞனான நிலையில் தமிழோவியனின் பாராட்டத்தகுந்த பணி இது.

அச்சுவாகனமேற்றி பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுவதற்கான பொருளாதார வசதிகள் இல்லாத நிலையில், தெளிவத்தையில் ''உலகம்'' என்ற கையெழுத்து சஞ்சிகையை நடத்தி, தோட்டத்தில் படித்த இளைஞர்கள் எழுதுவதற்கான களத்தை உருவாக்கித்தர தமிழோவியன் முயன்றிருக்கிறார்.

மலையகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக மலையகத்தின் வெவ்வேறு நகர்களில் ஆர்வத்தை மூலதனமாகவும் அயராத உழைப்பை ஆதாரமாகவும் கொண்டு பத்திரிகைளை வெளியிடும் முயற்சிகளில் துடிப்புமிக்க இளைஞர்கள் அக்காலப் பகுதியில் செயல் புரிந்துள்ளனர். இவர்களின் அற்ப ஆயுள்களிலேயே மறைந்துபோய்விட்டாலும் அந்த சஞ்சிகைகளுக்கெல்லாம் தனது ஆக்கங்களை வழங்கி அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதிலும் சமூகப்பற்றுணர்வாளர்களிடையே நல்லிணைப்பை ஏற்படுத்துவதிலும் தமிழோவியன் முன்னணியில் நின்றிருக்கிறார்.

தலவாக்கொல்லை இல.நாகலிங்கம் வெளியிட்ட ''தீ'', கண்டியிலிருந்து க.ப.சிவம் வெளியிட்ட ''மலைமுரசு'', கும்பாள்வலை நெ.பி.பழனிவேல் வெளியிட்ட ''ஈழத்தென்றல்'', பசறையிலிருந்து குறளன்பன் வெளியிட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''குறிஞ்சி'', பதுளையிலிருந்து எம்.முத்தையாபிள்ளை வெளியிட்ட ''கலைஒளி'', கண்டியிலிருந்து ரா.மு.நாகலிங்கம் வெளியிட்ட ''செய்தி'', பதுளையிலிருந்து வெளியான ''அல்லி'', கொழும்பிலிருந்து வெளியான ''அஞ்சலி'', ''கதம்பம்'', ''தமிழின்பம்'', தேனமுதம்'' கண்டியிலிருந்து அந்தனிஜீவா வெளியிட்ட ''கொழுந்து'', கே.வி.இராமசாமி வெளியிடும் ''அகிலம்'', மற்றும் ''மலைப்பொறி'', மலைஒலி'' ஆகிய இதழ்களுடன் மட்டக்களப்பிலிருந்து செ.இராசதுரை வெளியிட்ட ''தமிழகம்'', செங்கலடி எப்.ஜி.ஜெயசிங்கம் வெளியிட்ட ''முரசம்'' ஆகிய சஞ்சிகைகளுடன் ஆக்கங்களை வழங்கி நேசஉறவு பேணிவந்திருக்கிறார் தமிழோவியன்.

மலையகத்தின் வெவ்வேறு நகர்களிலிருந்து வெளிவந்த இந்தப் பத்திரிகைகளுடன் சம்பந்தங்கொண்டவர்களும் தத்தம் தோட்டப் பகுதிகளில் சமூக ஈடுபாடு கொண்டுழைத்தவர்களும் முன்பின் அறிமுகமில்லாதவர்களாக இருந்தாலும் மலையக முன்னேற்றம் என்ற பொதுவான சரடில் இழைக்கப்பெற்ற மணிகள் போலவே திகழந்தனர். பொதுவாக தோட்டப்பாடசாலைகளிலும் சிறிது வசதி வாய்ப்பிருந்தவர்கள் நகர்ப்புறங்களுக்கும் சென்று க.பொ.த. (சாதாரண தரம்)வரை படித்துவிட்டு, அதற்குமேல் கல்வியைத் தொடர மலையகத்தில் மார்க்கங்கள் தெரியாத நிலையிலும், குடும்பப் பின்னணி இடந்தராத நிலையிலும் அவர்கள் தொழிற்சந்தைக்குள் இறங்க வேண்டியதாயிற்று. பிரஜாவுரிமைகள் அற்றநிலையில் அரசுத்துறைகள் என்றென்றைக்குமாக அடைந்துகொள்ள முடியாத நிலையில் தோட்டத் துறை சார்ந்த அல்லது தனியார் நிறுனங்களிலேயே இவர்கள் தொழில் தேட நேர்ந்தது. இந்தத்தொழில்கள் ஏதோ வயிற்றைக் கழுவிக்கொண்டு போகிற சகாயத்தைச் செய்தன ஐம்பதுகளில் மலையக இயக்கங்களில் - இலக்கியங்களில் - பத்திரிகை நடத்துவதில் ஈடுபாடு காட்டி உழைத்த இளைஞர்கள் அத்துணை பொருளாதார வாய்ப்புகள் இல்லாத நிலையிலேயே இந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். வெளிநாட்டு நிதிகளில் இயங்கும் தொண்டு நிறுவனங்களோ, பணபலமோ, மத்தியதரவர்க்க அனுசரணையோ, அரசுரீதியிலான ஆதரவோ இல்லாதநிலையில் மலையகம் என்ற வேள்வியில் தமது பேருழைப்பை மாத்திரமே ஆகுதியாகச் சொரிந்துள்ளனர். இத்தகைய ஒரு அர்ப்பணிப்பின் தொடர்ச்சியாகவே பதுளையில் தமிழோவியனின் சமுதாயப் பணிகள் இன்றும் செயற்பட்டவண்ணமுள்ளன. பதுளை கலை இலக்கிய வட்டம் என்ற அமைப்பின் இயக்கி இன்றும் மலையகத்தின் இளையதலைமுறையினர் மத்தியில் சமூகப்பற்றையும் இலக்கிய உணர்வையும் விதைத்துச் செல்லும் பெரும்பணியை தமிழோவியன் செய்து வருகிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 4

ஐம்பதுகளில் துடிப்போடு கவிதைத்துறையில் கால் பதித்த தமிழோவியன் திராவிட இயக்கச் சிந்தனைகளால் பெரிதும் ஆகர்ஷிக்கப்பட்டிருந்தார். மலையகத்தின் சிந்தனை மரபில் திராவிட இயக்கக் கருத்தோட்டம் நன்கு சுவறியிருந்துள்ளது.

1931ல் இலங்கையில் நிறுவப்பட்ட சுயமரியாதை இயக்கம் மலையக மக்களின் கருத்தியல் உருவாக்கத்தில் தீர்க்கமான பாத்திரம் வகித்தது. பார்ப்பன எதிர்ப்பு, சாதிய மறுப்பு, சமதர்மம், பெண்கள் விடுதலை போன்ற சிந்தனைகள் சமூகவுணர்வு கொண்ட மலையக இளைஞர்கள் மத்தியில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. சுயமரியாதை ஏடுகள் பரவலாக வாசிக்கப்பட்டன. சுயமரியாதைச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. சுயமரியாதைக் கருத்துகள் மேடைகளில் முன்வைக்கப்பட்டன.

பதுளையில் திரு.வ.ஞானபண்டிதன் சாதிய மறுப்பினைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்துவந்திருக்கிறார். 1937ல் புசல்லாவ இந்துவாலிபர் சமாஜத்தின் ஏழாவது வருட பூர்த்தி விழாவின்போது திரு.வ.ஞானபண்டிதன் ஆற்றிய தலைமையுரையில் அவர் பின்வருமாறு குறிப்படுகிறார்:

''ஜாதி இரண்டொழிய வேறில்லை'' என்ற ஔவை பிராட்டியின் திருவாக்கை ருசுப்படுத்தி ஜாதிப்பேயை நாட்டைவிட்டு ஓட்டிடவேண்டும். ஜாதி என்பது மனிதனால் தன்னலங்கருதி உண்டாக்கப்பட்டது.

1. எல்லாம் வல்ல இறைவன் எம் பெருமான்

பறையன். ஆனால் நமது ஒரே கடவுள்

2. லோகமாதாவாகிய உமையவள் பறைச்சி.

3. கணபதி யானை (ஆகவே ஜாதி இல்லாதவர்)

4. நமது குலதெய்வம் (திராவிட தெய்வம்) சுப்ரமணியன் வேடன், குறவன்.

5. மதுரைவீரன் சக்கிலியன்

6. வைரவர் நாய்

இவர்களெல்லாம் நமக்குத் தெய்வங்கள் அல்லவா? ஆகவே நம்மால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவம் கொடுத்து சகோதர்களாக்கி சுதந்திரம் பெற்று வாழ ஆசைப்படாமல் இருக்கலாமா?''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முப்பதுகளில் தீவிர சாதிய மறுப்பை பிரசங்கித்து, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கருத்தோட்டங்களை மலையகமக்கள் மத்தியில் ஊன்றச் செய்தவர்களில் பதுளை வ.ஞானபண்டிதனின் பங்கு முக்கியமானது.

பதுளையில் படித்த இளைஞர்கள் பெரியாரின் சிந்தனைமரபினை உறுதியாகக் கைக்கொண்டிருந்தனர். ஐம்பதுகளில் அண்ணாவின் தி.மு.க. கருத்துகள் பதுளையில் ஆழவேரோடியிருந்தது. நாவலர் நெடுஞ்செழியன், கவிஞர் கண்ணதாசன், நாஞ்சில் கி.மனோகரன், சி.பி.சிற்றரசு, டி.கே.சீனிவாசன் போன்ற தி.மு.க. பிரமுகர்களை அழைத்து பதுளையில் அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தனர். திராவிட நூல்கள் அனைத்தும் பதுளையில் கிடைத்தன. திராவிடக் கருத்துகளால் ஒன்றிணைந்த மலையக இளைஞர்கள் அடிக்கடி சந்தித்துத் தமக்கிடையே கருத்துப்பரிமாற்றங்கள் செய்துகொண்டனர்.

பெரியார், அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோரின் கருத்துகளிலும் பாரதிதாசன், கண்ணதாசன் கவிதைகளிலும் நனைந்தவர் தமிழோவியன். பாரதிதாசனின் கவிதைகளை அவர் எழுத்தெண்ணிப்படித்தவர்.

**''உன்னைக் குருவாக உள்ளத்தில் பதித்திட்ட**
**என்னைக் கவிபாட வைத்த புரட்சிக்கவிஞரே!**
**முன்னும் பின்னும் முத்தமிழாளுக்கு மலர்தூவ**
**நின்துணிவே எந்த னுக்குத் துணை!''**

என்று பாரதிதாசனையே குருவாக வரித்துக்கொண்டது பற்றித் தமிழோவியன் எழுதிய கவிதை இது.

''அந்தக் காலத்திலிருந்தே தாங்கள் ஒரு பாரதிதாசன் பக்தர் என்பதை நான் அறிவேன். பாரதிதாசனை முதல்முதலாக இலங்கை மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்தவன் நான்தான் என்ற வகையில் எனக்குப்பெரும் மனநிறைவு உண்டு. பாரதிதாசனுடைய கவிதைநலன் பற்றிய எனது கட்டுரைகள் 1944ஆம் ஆண்டில் தினகரன் பத்திரிகையில் வெளிவந்தன அதற்கு முன்பதாக யாரும் பாரதிதாசனைப் பற்றி இலங்கையில் எந்த ஒரு பத்திரிகையிலும் எழுதியதில்லை. எனவேதான் தாங்கள் பாரதிதாசனை ஆதரித்து எழுதிய கருத்துக்களை விருப்போடு வெளியிட்டேன்.

''எண்சீர் விருத்தங்களில் பாரதிதாசன் ஒரு மன்னன். அவர் பாணியில் தாங்கள் எழுதிய 'தலைமுடி இழைக்கும் வஞ்சம்'' கவிதை அருமையாக அமைந்திருந்தது. கடந்த வாரம் சிந்தாமணியில் அது பிரசுரிக்கப்பட்டது.....

''தாங்கள் கவிதையில் மட்டுமின்றி, வசன நடையிலும் ஓர் அழகும் அமைதியும் இருக்கின்றன. தொடர்ந்து எழுதுங்கள்'' என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் தமிழோவியனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் (14.06.84) குறிப்பிட்டிருப்பவை தமிழோவியனின் பாரதிதாசனின் ஈடுபாட்டை நன்கு வெளிப்படுத்துவதாகும்.

## 5

மலையகநாட்டார் பாடலின் வளமான மரபில் தொய்ந்த தமிழோவியனின் கவிதைகள் நாட்டார் மரபின் செழுமையில் புஷ்பித்திருப்பதை மிக எளிதாகக் கண்டு கொள்ள முடியும். மலையகத் தொழிலாளர் சமுதாயத்தில்.அவர்களின் ஆசைகள், ஏக்கங்கள், கனவுகள், இயலாமைகள், கஷ்டங்கள், சந்தோஷங்கள், நிறைவுகள் அனைத்திலும் கரைந்துபோன தமிழோவியன் காலாந்தரமாய் அந்த மக்கள் கூட்டத்தின் ஆழ்மனத்தில் பாதாள கங்கையாய் - அருவித்தாரையாய் - தீப்பிழம்பாய் - பனிப்பாளமாய் குளிர்ந்தும் தகித்தும் செறிந்திருக்கும் நாட்டார் மரபின் செழுங்குருத்தாகத் திகழ்கிறார். தமிழோவியனின் கவிதைகளின் தனித்துவச்சிறப்பிற்கு இந்த நாட்டார் மரபின் ஊற்று பெருந்துணை புரிந்திருக்கிறது.

**"பாதையிலே வீடிருக்க**
**பழனிச்சம்பா சோறிருக்க**
**எருமே தயிரிருக்க**
**ஏண்டி வந்தே கண்டிச்சீமை?"**

என்ற நாட்டார் பாடல் மரபில் வேரோடிய தமிழோவியனின் நெஞ்சத்திலிருந்து பீறிடும் கவிதை வடிவம் இது:

**"வெட்டிப்பயல் மகளே!**
**வீறாப்போ உந்தனுக்கு?**
**வெட்டிப் புதைத்திடுவேன்**
**வீட்டை விட்டுப் போனியனா?"**

**"பிள்ளைகளைத் தேற்றாமல்**
**பிதற்றுகிறாள் ஏதேதோ?**
**வெள்ளைக்காரன் மனைவியோ நீ**
**வேலையாளோ யானுனக்கு?**

பஞ்சம் பிழைக்க வந்த இடத்திலிருந்து தங்கள் துயர் நீங்கி தாயகம் புறப்பட்டுவிடலாம் என்ற நம்பிக்கை சிதைந்துபோன நிலையை மலையக நாட்டார் பாடல்கள் அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளன.

**"அடி அளந்து வீடு கட்டும் நம்ம**
**ஆண்டமனை அங்கிருக்க**
**பஞ்சம் பொழைப்பதற்கு**

www.tamilarangam.net



பாற்கடலை தாண்டி வந்தோம்
பஞ்சம் பொழைச்சு நம்ம
பட்டணம் போய் சேரலியே
கப்பல் கடந்து
கடல் தாண்டி இங்க வந்தோம்
காலம் செழிச்சு நம்ம
காணிபோய் சேரலியே''

என்ற பாடலில் இழையும் சோகம் யார் நெஞ்சத்தைத்தான் உலுப்பாது?

காலங்கள் மாறியதே தவிர ஏமாற்றமும் ஏக்கமும் வஞ்சிக்கப்பட்ட வேதனையும் மலையகத் தொழிலாளர் வாழ்வில் நச்சரவமாய் தொடர்ந்த செய்தியை நாட்டார் பாடலில் மறுவாசிப்பு செய்கிறார் தமிழோவியன்.

''கூடை சுமந்து மலைமலையாய்
கொழுந்து எடுத்தே
பாடுபட்ட பெண்களது
பத்துவிரல் சுழற்சியினால்
நாடு செழிக்க வெளிநாட்டு
நாணயத்தை தேயிலையால்
கோடிக்கணக்கில் அன்று
தேடிக்கொடுத்த பரம்பரையும்
நாடற்ற மக்களாக இன்று
நாதியற்று நிற்கலாமோ?''

இந்நாட்டார் மரபு தமிழோவியன் கவிதைகளுக்கு தந்திருக்கும் ஊட்டத்தின் மற்றுமொரு பரிமாணமே பேச்சோசைப் பண்பை மலையகக் கவிதையிலே தமிழோவியன் சாதுரியமாய் இழைத்துத் தந்திருக்கும் திறனாகும். தமிழோவியன் கவிதைக்கூடாக கதைசொல்லவருகையில் இந்தச் சிறப்பினை அள்ளிக்கொண்டு வருகிறார்.

''கதரும் கள்ளத்தோணியும்'' என்ற கவிதையில் மிளிரும் பேச்சோசைப்பண்பு இதற்கு நல்ல உதாரணமாகும்.

''இப்போதோ அப்போதோ இலங்கை வந்து
இருக்கின்ற ஆளல்ல பெருமாள் கண்டீர்!
முப்பத்தி ஓராண்டாய் பிறந்த வீட்டில்
முதுகுடியின் வழிவழியாய் வாழும் ஆளை
இப்போது பிடித்துவைத்து கள்ளத்தோணி
என்றியம்பும் செயல் சரியோ என்று கேட்க
''தப்பேதும் கொள்ளாதீர், கதர்சட்டை வேட்டி
தலைமீது கட்டியிருந்த முண்டாசு முற்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்படியே கள்ளத்தோணி ஆளைப்போன்றே
அச்சாக விளங்கியதால் பிடித்து வந்தோம்!
இப்படியே கதருடுப்பு இனி உடுத்தவேண்டாம்
என்றுஇம் மனிதனுக்கு எடுத்துச் சொல்வீர்...''

## 6

டி.எச்.லோறன்ஸின் நாவல்களை ஆராயப்புகுந்த டெரி ஈகிள்டன், ''கைத்தொழிலாக்கம் உருப்பெற்றுவருவதை வெளியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவனின் சமூக எதிர்வினையாக இல்லாமல், அவற்றிலே சிக்கிக்கொண்டுவிட்ட, அந்தப் பட்டாளத்திலே ஒருவனாய் சேர நிர்ப்பந்திக்கப்பட்டவனின் எதிர்வினையாக டி.எச்.லோறன்ஸின் அனுபவங்கள் திகழ நேர்ந்ததே அவரது எழுத்தின் வளத்திற்கு ஆதாரமாய் அமைந்தது'' என்கிறார்.

வெளியாளாக அல்லாமல் - பார்வையாளனாக மட்டுமன்றிதான் எழுதப்புகுந்த வாழ்வின் நேரடித்தாக்கத்திற்குட்படும்போது எழுத்திலும் ஒளி பிறக்கிறது.

தோட்டத்தில் களஞ்சியப்பொறுப்பாளராக நீண்டகாலம் பணிபுரிந்த தமிழோவியன் சரித்திரபூர்வமாக அந்த சமூகம் முகங்கொடுக்க நேர்ந்த அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்கொண்டவராகத் திகழ்ந்தால்தான் அக்கொடுமைகளுக்கு எதிரான கண்டனங்கள் சாட்டையடியாய் வீசப்படுவதை அவரது கவிதைகளில் கேட்கமுடிகிறது.

''காட்டு மிருகமாய் தோட்டத்து மக்களை
கருதிடுங் கூட்டங்களே! - உங்கள்
கோட்டையை நொறுக்கிடும் வேட்டுகள் வைத்திட
குமுறி எழுந்தனர் பார்!
''நாட்டின் வளர்ச்சிக்கு ஊட்டமளித்தவர்
நாடற்றவ ராவதுண்டோ? - அவர்
வீட்டை இழந்தும் வாட்டமடைந்தும்
வீதியில் சாவதுண்டோ?''

காட்டுமிருகங்களைப் போல மலையகத்தொழிலாளரை நடத்திய ஒரு அமைப்பின் அகங்காரத்தை - புன்மையை - அவலட்சணத்தை நேரில் அனுபவித்த ஆத்திரத்திலே கனல் உமிழ்கிறார் தமிழோவியன்.

''வில்லினை எடடா - கையில்
வில்லினை எடடா - அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா''

www.tamilarangam.net



என்ற பாரதியின் தார்மீக ஆவேசத்தை

**"அஞ்சி யடங்கியே கெஞ்சிப் பிழைத்திடும்**
**ஆசையோ நமக்கு இல்லை! - இனி**
**நெஞ்சம் துணிந்தவர் கொஞ்சமு மடங்கிடோம்**
**நிச்சயம் வெற்றியடா!"**

என்ற தமிழோவியனின் வரிகளிலும் கேட்கமுடிகிறது.

''மிகவும் சாமர்த்தியமாக அச்சத்திற்கும் தாழ்வுக்கும் கீழ்மைக்கும் பீதிக்கும் தலைகுனிவுக்கும் அவநம்பிக்கைக்கும் அவமரியாதைக்கும் உட்படுத்தப்பட்ட லட்சோபக்கணக்கான மக்களைப்பற்றி நான் பேசுகிறேன்'' என்றார் புரட்சிப்பெருமகன் எய்ம் செஸயர் (Aime Cesaire).

மலையகமக்களும் இத்தகைய பீதியுற்ற, அச்சமுற்ற, நம்பிக்கை சிதைந்துபோன மனோவலயத்துக்குள் தள்ளுப்பட்ட நிலையைக்கண்டு தமிழோவியன் எழுதும் வரிகள் இவை:

**"தாழ்ந்த மனப்பாங்கால், தைரிய மின்மையினால்**
**வாழ்ந்த வீடுகளை வழியக் கொடுத்துவிட்டு**
**வீழ்ந்த இனமாறு விதியற்ற மக்களாகி**
**சூழ்ந்த கவலையினால் சோர்ந்து புலம்புவதேன்?**

**"கல்லுக்கும் மண்ணுக்கும் கடவுள் வழிபா டளித்தும்**
**புல்லுக்கும் கீழான புன்மைநிலை யுற்றோமே!..."**

உயர்வகுப்பு பிரிட்டிஷ் சீமான்களும் அவர்தம் இல்லத்தரசிகளும் சுவைத்து மகிழும் தேயிலையை நூறாண்டுகாலமாய் உற்பத்தி செய்து அனுப்பும் மலைகத் தொழிலாளருக்கு குடிப்பதற்குக் கொடுக்கப்படுவதோ 'லேபர் டஸ்ட்' எனப்படும் உரமாகத் தேயிலைமலைக்குப் போட வேண்டிய வெறுஞ்சக்கைதான்! என்ன விசித்திரம்? தான் உதிரஞ்சிந்தி உருவாக்கும் தேயிலையைத்தானே சுவைத்து மகிழமுடியாத முதலாளித்துவ அமைப்பின் கொடூரம் எத்தகையது? எவ்வளவு இழிந்த மனோபாவம்? தொழிலாளர்களைக் காட்டு மிருகங்களைப்போல நினைக்கும் நவீன துரைத்தனத்தின் காட்டுமிராண்டித் தனமல்லவா இது?

**"கட்டுச்சோறு கூடையுடன் மலைக்கு ஓடி**
**கதிரவனின் ஒளிகண்டு கரங்கள் கூப்பி**
**மொட்டுகளை, அரும்புகளை ஒதுக்கி வைத்து**
**முற்றிலையை கிள்ளிவீசி, கொழுந்து எடுத்தே**
**மட்டமலை, பழையமலை, புதுமலைக ளெல்லாம்**
**மயக்குமெழில் பசுமைமலர்ச் சோலை யாக்க**

www.tamilarangam.net



**கொட்டுமழை, கொடும்வெயிலில் உழைப்போர் கூட்டம்**
**குடிப்பதற்கு கொடுப்பதுவோ தேயிலைத் தூசாம்!''**

என்று கொதித்துப்பாடுகிறார் தமிழோவியன்.

## 7

**வா**க்குரிமை பறிக்கப்பட்ட அநியாயம் கவிஞரின் நெஞ்சில் ஆழ்ந்த ரணத்தைப் பதித்து விட்டதன் எதிரொலியேபோல் தமிழோவியன் இந்த நிலையை பல்வேறு கவிதைகளில் எடுத்துரைக்கிறார்.

''அதிகாரத்திற்கு எதிரான மனிதனின் போராட்டம் என்பது மறந்துபோவதற்கு எதிராக அவற்றை நினைவில் தக்கவைத்துக் கொள்வதற்கான போராட்டமே'' என்கிறார் மிலன் குண்டேரா. எனவேதான் அநீதிக்குட்படுத்துப்பட்ட சமூகம் இந்த அட்டூழியங்களை - தமக்கு இழைக்கப்பட்ட துரோகங்களைத் தனது வரலாற்றில் ஆழமாகப் பதிவு செய்து கொள்கிறது. கறுப்பு ஜூலைகள் மீண்டும் மீண்டும் நினைவு கூரப்படுகின்றன. ஆள்வோர் புனையும் சரித்திரம் வேறு. ஒடுக்கப்பட்டோரின் சரித்திரச்சித்திரம் வேறு. காலாகாலமாக அந்த சமூகமனங்களில் குடிகொண்டிருக்கும் சிந்தனைகளில் - இருண்ட சூழலுக்குள் அவர்கள் உழன்று வெளிச்சம் தேட முயன்ற எத்தனைங்களில் - எதிர்காலம் குறித்த கற்பனார்த்தங்களில் - அநியாயங்களை எதிர்த்தும், நழுவியும், ஒதுங்கியும், தம்மைப்பாதுகாத்துக் கொள்ள முயன்ற எதிர்வினைகளில் அந்தமக்கள் சரித்திரம் ரூபம் கொள்கிறது.

எனவேதான் மலையக சமுதாயத்தின் வரலாற்றைப் புனைவோர் அதன் கலாசாரத்தளங்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் அந்த மக்களின் எண்ணச் சிதறல்களை - சிந்தனைக்கோலங்களை - கிளர்ச்சி நாதங்களை நுணுகி அவதானிக்கவேண்டும். இந்த அர்த்தத்தில்தான் தமிழோவியன் கவிதைகள் மலையக சமுதாயத்தினது சரித்திரத்தை அந்த மக்களின் கலாசாரப்படுதாவில் நேரிதாகச் சித்திரிக்கும் ஆவணங்களாகப் பரிமாணம் பெறுகின்றன.

தமிழோவியனின் இந்தக் கவிதைத் தொகுப்பு இலக்கிய உலகிற்குக் கிடைத்துள்ள புதிய கருவூலம் என்பதுமட்டுமல்ல, கடந்த நான்கு தசாப்தகால மலையக சமூகத்தின் சிந்தனைப் படிமங்களின் ஒளித்தெறிப்பாகவும் அமைகிறது.

ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் மலையக சமுதாயத்தில் விரவிநின்ற மொழி உணர்வு, சுயமரியாதை, தன்மானம், கல்வி முன்னேற்றம், சமூக எழுச்சி, மூடநம்பிக்கைகளைக் களைதல் போன்ற சமூகச் சீர்திருத்தங்களே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழோவியனின் சமூகக் கண்ணோட்டமாயிருந்தது. அதுவே அவரது கவிதைகளின் பாடுபொருளாயுமிருந்தது.

தென்னிந்தியாவில் போலன்றி மலையகத்தில் சாதி அமைப்பு அத்துணை இறுக்கமானதல்ல எனினும் சாதியக் கூறுகள் சமூக வாழ்வில் இன்றும் உயிர்ப்போடுள்ளன. ''தோட்டங்களிலும் நகர்ப்புறங்களிலும் வாழும் மலையகத் தமிழர்களது சமூகவாழ்வின் பல்வேறு துறைகளில் பெருமளவு சாதியின் செயற்பாடுகள் அருகிவிட்டனவாயினும், சாதிகளுக்கிடையிலான உறவுகளில் காலப்போக்கில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளபோதிலும் சமூகத் தொடர்பாடலின் பல்வேறு அம்சங்களை சாதியே நிர்ணயம் செய்வதாயுள்ளது'' என்று ஒட்வர் ஹொலப் கூறுகிறார்.

''சாதி என்னும் சதி'' என்ற தமிழோவியனின் கவிதை தோட்டத்தில் கணக்கப்பிள்ளை வேலைபெற்று, நல்ல பெயர் சம்பாதித்த தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்த இளைஞனை, அவனது சாதியையே காட்டி வேலையிலிருந்து விலக்கி வீதியில் வீசி எறியும் கொடுமையைச் சித்திரிக்கிறது.

**''மொழிகளினால் சூடிட்டார் குலத்தைக்காட்டி**
**வேதனையும் மானமாம் உணர்வுந் துள்ளும்**
**வெந்தழலில் இளந்தளிராய்த் துடித்தான் பிள்ளை''**

என்று எழுதுகிறார் தமிழோவியன்.

**''பிறப்பொக்கும் மனிதகுலம் என்னும் விதியைப்**
**பேணியிங்கு செயலாற்றின் தாழ்த்தப்பட்டோர்**
**சிறப்பற்றுச் சிந்தை நொந்து திண்டாடி நிற்கும்**
**சீர்குலைவைச் சாதியாம் சதியுஞ் செய்மோ?''**

என்று கேட்கிறார் தமிழோவியன்.

மலையகத் தமிழர்மீதான இனவன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு அவர்கள் தோட்டங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்ட கொடுமையையும் தமிழோவியன் தன் கவிதையிலே பதிவுசெய்கிறார்.

**''வீட்டைவிட்டு தோட்டத்தாரை**
**விரட்டி யடித்தபின்**
**விருப்பம்போல செல்வங்களை**
**திருடிச் செல்வதும்**
**நாட்டிலின்று வழக்கமாக**
**நடக்கும் செய்கையாம்**
**நாட்டைவளர்க்க உழைப்பவர்கள்**
**காட்டில் தஞ்சமாம்''**

www.tamilarangam.net



என்று காடுகளில் ஒளிந்து பேரினவாதக்குண்டர்களுக்கு அஞ்சிவாழும் நிலைபற்றிக் கூறுகிறார் கவிஞர்.

இந்த வஞ்சிக்கப்பட்ட மாந்தர்களின் குரல் இலக்கியத்தின் தனிப்பெருங்குரலாக ஒலிக்கவுள்ளது. ''காலனித்துவமயப் பட்டவர்களும் நிர்க்கதியாக்கப்பட்டவர்களுமே இலக்கியப் பூகோளத்தை சுவீகரித்துக்கொள்வார்கள்'' என்ற கூற்றினை டெரி ஈகிள்டன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறிச்செல்வதை இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமுடையதாகும்.

மலையகமக்கள் வாழ்வு எப்போதுமே துயரஞ் சூழ்ந்ததாகவே திகழ்ந்தபோதும் அது துன்பக்கேணியாக மட்டுமே இருந்துவிடுவதில்லை. எல்லா இன்மைகளுக்கும் இயலாமைகளுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் ஆசைகளும் மோகங்களும் தாபங்களும் காதலும் மனஎழுச்சிகளும் மலையகமாந்தர் வாழ்வில் மலர்ச்சிகளை ஏற்படுத்தவே செய்துள்ளன. மலையகமக்களின் காதல் உணர்வுகளைக் கூறும் மலையக நாட்டார் பாடல்கள் அதியுன்னத காதல் இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

**''மாதவள் பெயரும் பொட்டு**
**மான்விழி மீனாய் வெட்டும்**
**சாதுவும் மயங்கிப் போவான்**
**சதிராடு மழகால் எனக்கோ**
**வாதையே யளித்து வந்தாள்**
**வனிதையின் நினைப்பா லேக்கம்**
**ஏதையும் மறந்தேன்! காதல்**
**எண்ணத்தில் மூழ்கித் துடித்தேன்''**

என்று காதல் நினைவை மீட்பதில் தமிழோவியனின் கவித்துவச்சிறப்பு பளிச்சிடவே செய்கிறது.

மலையகமக்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் கவிஞனின் பார்வை மேய்ந்திருப்பதை தமிழோவியனின் கவிதைகள் புலப்படுத்தி நிற்கின்றது.

## 8

பதுளை கவித்துவப்பாரம்பரியம் கொண்ட பிராந்தியம்.

**''ஏத்தமடி அப்புவல**
**எறக்கமடி ஆலிஎல்ல**
**தூரமடி நாராங்கல**
**தொடர்ந்துவாடி**
**நடந்து பார்ப்போம்''**

என்று நாட்டார்பாடல் ஒலித்த மண் அது.

www.tamilarangam.net



பஸ் நிலையத்தையே கவியரங்க மேடையாக்கி பதுளைப்பாவலன் ஜில் சுல்தான் சிங்காரச் சிந்திசைத்த நகர்.

பாரதியின் பெயரால் மலையக மாணவர்களுக்காக திரு.ராமசாமி கால்நூற்றாண்டுக்கு முன்னால் கல்லூரி நிறுவிய ஊர்.

''பாரதி'' பெயரில் சஞ்சிகை வெளிவந்த களம்.

யுகக்கவிஞன் பாரதியின் நூற்றாண்டு விழாவினை பெருஞ்சிறப்போடு நடத்தி அம்மகாகவிஞனுக்கு நேரிய அஞ்சலி செலுத்திய இடம்.

கண்ணதாசனை அழைத்து வந்து அவனது கவிதைக் கண்ணோட்டத்தை நயந்து கேட்ட இலக்கிய ஆர்வலர்கள் நிறைந்த இடம்.

கண்ணதாசன் நூலகம் நிறுவிய தோட்டம்.

திருக்குறள் மன்றம் கண்ட இடம்.

இந்த மண்ணின் தமிழோவியன் மலையகக் கவியுலகின் தலைமகனாக நிலை பெறுகிறார். தமிழோவியனை அறியாத மலையக இலக்கிய ஆர்வலர்கள் இல்லை எனலாம்.

1959ல் ''எழுத்தாளன் காதலி'' என்ற தனது இசைப்பாடலை தெளிவத்தை கண்ணதாசன் நூலக வெளியீடாக தமிழோவியன் வெளியிட்டுள்ளார்.

''பாடல்கள் மெச்சத்தக்கவை; உணர்ச்சி மிக்கவை; பொருத்தமான அமைப்பும் சுவையும் பொருந்தியவை; வாழ்க்கையை இலட்சியப்பாதையில் செலுத்தக்கூடியவை. இத்தகைய பாடல்கள் செந்தமிழ்த்தாயின் திருப்பணிச்சொத்துக்கள் என்பது மிகையாகாது'' என்று ''எழுத்தாளன் காதலி'' பற்றி ''கலைச்செல்வி''யில் வெளியான விமர்சனம் தெரிவிக்கிறது.

மலையகத்தின் கொலைச்சிந்து இலக்கியத்தின் தனிநாயகனாகத் திகழும் ஜில் சுல்தான் 1957க்கும் 1969க்கும் இடைப்பட்ட காலத்தில் பதுளையிலிருந்து 19 நாட்டார் சிந்துப் பாடல்களை இயற்றி வெளியிட்டுள்ளார்.

1967ல் வெளியான வெலிமடைக்குமரனின் ''தூவானம்'' 1960க்கும் 1967க்கும் இடைப்பட்ட ஏழு ஆண்டுக்காலத்தில் அவர் எழுதிய எழுபது கவிதைகளைத் தாங்கிவந்தது. கண்ணதாசன் நடத்திய ''முல்லை'' இதழில் தனது முதல் கவிதையை எழுதி கவிதைத்துறைக்குள் கால்பதித்த குமரன் தனது பெரும்பாலான கவிதைகள் ஈழத்தின் பல இதழ்களால் ஒதுக்கப்பட்டவை என்கிறார். மல்லிகைக் காதலனின் ஆர்வத்திலும் துணிச்சலிலும் குறிஞ்சிப்பண்ணை வெளியீடாக ''தூவானம்''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியானபோது மலையகத்தில் அது பரவலாகப் பேசப்பட்ட தொகுப்பாகத் திகழ்ந்தது.

''தூவானம்'' 1967ல் வெளியாகிய பின்னால் பதுளையின் கவிதை வெளியீட்டுக் களத்தில் நீடிக்க நேர்ந்த 28 ஆண்டுகால வரட்சியை தேக்கத்தை உடைத்துக்கொண்டு பண்டாரவளை ம.சண்முகநாதன் 1995ல் வெளியிட்ட ''வாழ வா தோழா!'' புதிய தலைமுறையின் எழுச்சிக்கு பூபாளம் இசைத்தது. 1984க்கும் 1995க்கும் இடைப்பட்ட பதினொரு ஆண்டு காலப்பகுதியில் ம. சண்முகநாதன் எழுதிய எழுபது கவிதைகளைத் தாங்கி இத்தொகுப்பு வெளியானது.

ஒரு நன்முகூர்த்தம் போன்றே ''வாழ வா தோழா!'' வெளியான மறு ஆண்டே - 1996ல் ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சு ஊவா மாகாணத்தின் 30 கவிஞர்களின் 84 கவிதைகளைத் தொகுத்து ''குறிஞ்சிக்கதம்பம்'' என்ற தலைப்பில் வெளியிட்டு வைத்தது. செ.பாலசுப்பிரமணியம் தொகுத்து வெளியிட்ட ''குறிஞ்சிக் கதம்பம்'' மலையகத்தில் மாகாணரீதியில் கவிஞர்களை இனங்கண்டு அவர்களை அறிமுகப்படுத்தி மேற்கொண்ட முன்னோடி முயற்சியாகும். ஊவாவில் சிறக்கும் கவித்துவமரபிற்கு இத்தொகுப்பு நல்ல சாட்சியமாகவே அமைந்துள்ளது.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட ஐம்பதாண்டு காலப்பகுதியில் மலையக மாந்தர்தம் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை - எழுச்சி, வீழ்ச்சிகளை தோல்விகளை - நிராசைகளை புத்திபூர்வமாயும் உணர்வுப்பூர்வமாயும் அறிந்தும் தெளிந்தும் தொடர்ந்து கவிதை படைத்து வந்த மலையகத்தின் மூத்த பெருங்கவிஞர் தமிழோவியனின் கவிதைகள் நூல் உருப்பெறுவது மலையக இலக்கிய ஆர்வலர்களின் நெஞ்சங்களுக்கு குளுமையூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

மு.நித்தியானந்தன்

ஆகஸ்ட் 2000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முன்னுரை

தெளிவத்தை தோட்டப்பாடசாலையில் கட்டாந்தரையில் அமர்ந்து கைவிரலால் மணல் பரப்பி ஆனா, ஆவன்னா எழுதிப் பயின்று வளர்ந்தவன் நான்.

பிள்ளைகளோடு பிள்ளையாய், பள்ளிக்கூடத்தில் வெறுந்தரையில் வரிசையாக அமர்ந்து, தோட்ட நிருவாகத்தால், இலவசமாக ஆக்கிப் பரிமாறப்பட்ட சோற்றை பகல் சாப்பாடாக ஒரு நாளும், ரொட்டியை மறுநாளும் வாங்கிச் சாப்பிட்டவன் நான் என்பதைச் சொல்ல வெட்கப்படவில்லை.

காலம் என்னைக் கவிதை பாட வைத்தது.

''நாடற்றவர்'' பரம்பரை எனும் கேடுற்ற பட்டம் எனது மலையக சமுதாயத்தை ஓட ஓட விரட்டியதால் உண்டான உறுத்தல், கிண்டிவிட்ட உரிமை வேட்கையே என்னைக் கவிஞனாக்கியது.

சுமார் 45 ஆண்டுகளின் பதிவுகளாகப் பரிணமித்திருக்கும் என் கவிதைகள். மலையகத் தமிழினத்தின் வளர்ச்சியையும் தளர்ச்சியையும் கூறிச் செல்லும் வரலாற்று வரிகளாக அமைய வல்லன.

மலையகத் தமிழர்கள் சந்தித்த சோதனைகள், சோகம் தரும் தடைகள் என்பன இன்றைய தலைமுறையினருக்கு பழைய சரித்திரச் சம்பவங்களாக மட்டுமே கூடத் தென்படலாம். ஆனால் மலையக சமுதாயம் அநுபவிக்க நேர்ந்த கொடுமைகளின், சிரமங்களின் நெருப்பில் புடம் போடப்பட்டு வளர்ந்தவன் நான். அந்தத் துயரின் எதிரொலியாகவே என் கவிதைகள் அமைந்தன. எனது இனத்தின் விடிவிற்கும், வெற்றிக்குமான ஆர்ப்பாட்டப் போர் பாட்டாகவே என் கவிதைகள் சமைந்தன.

அதே நேரம் உழைக்க மட்டுமே பிறந்த அந்த சமூகக் கூட்டத்தின் உள்ளங்களிலும், உறவாடும் தன்மையிலும் அன்பு, காதல், இன்பம், மனிதநேயம் என்னும் உணர்வுகள் முகிழ்க்காமல் இருப்பதில்லை. எல்லா மனிதத் துயரங்களுக்குள்ளும் இந்த இனிய உணர்வுகளும் விரவிக்கலப்பதால்தான் மனித சமூகம் வளர்ந்து, முன் செல்ல முடிகிறது.

மலையக மாந்தர்களில் காதல் உணர்வுகளுக்கும் என் கவிதைகள் சுருதி சேர்த்துள்ளன.

மலையக சமூகத்தின் தொழிற்சங்கத்துறையிலும், அரசியற் துறையிலும், கலாசார, சமூகத்துறையிலும் கடந்த அரை நூற்றாண்டு கால கட்டத்தில் ஏற்பட்ட எழுச்சி, வீழ்ச்சிகளை தொடர்ந்து நான் அக்கறையோடு அவதானித்து வந்திருக்கிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மலையகத்தின் கண்ணியமான அரசியல் தலைவர்களோடு நான் நல்லுறவு கொண்டு வந்துள்ளேன். தலைவர் கே. ராஜலிங்கத்தின்அமைதியான போக்கும் செயற்பாடுமே எனது பொதுப்பணிக்குவழிகாட்டியது. பொதுவாழ்வில் ஒரு அரசியல்வாதியின் இயக்கத்திற்கு அற்புதமான இலக்கணமாக அமைந்தவர் அவர்.

தொழிற்சங்க வாதிகளிலே கண்ணியம் மிக்கவராகத் திகழ்ந்த அமரர் வி.கே.வெள்ளையன் மலையகம் தலைகுனிந்து வணங்கத் தக்க பண்பாளர்.

பணத்திமிரின் முன்னே அவரின் திறமை - புலமை அனைத்தும் முடக்கப்பட்ட நிலையிலும் எழுச்சியுடன் செயற்பட முனைந்தவர் அவர்!

1962-64 காலப் பகுதியில் கொழும்பில் பணியாற்றிய போது,இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கலாசார இயக்குநராக விளங்கியவர் அமரர் சி.வி.வேலுப்பிள்ளை அவர்களாவார். அப்போது அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவரின் கலை இலக்கிய நோக்கங்களையும், அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் எழுந்த அவரின் ஏக்கங்களையும் அப்போது என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

மலையகத்தின் மாபெரும் தியாகியும் -தலைவருமான கே. இராஜலிங்கமும், இலக்கியத் தலைமகன் சி.வி.வேலுப்பிள்ளையும் என்னைக் ''கவிஞரே!'' என அழைத்துப் பாராட்டும் பெரும் பேறு பெற்றவன் நான்.

கோடிக்கணக்கான தமிழ் உள்ளங்களில் புத்துணர்வு ஊட்டிய மாபெரும் கவிஞர் கோமான் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனே எனது மானசீகக்குரு.

கடந்த அரைநூற்றாண்டு காலத்தில் மலையகத்தில் வெளியான அனைத்துப் பத்திரிகைகளோடும் நெருக்கமான தொடர்புகொண்டு வந்திருக்கிறேன். மலையகத்தின் அனைத்து ஏடுகளிலும் எனது கவிதைகள் பிரசுரம் பெற்றுள்ளன.

நான் எழுதித்திரட்டி அச்சிட வைத்திருந்த அனைத்துக் கவிதைகளும் 1983 ஆடியில் பதுளையில் கோர நர்த்தனம் புரிந்த இனவெறித் தாக்குதலில், பதுளை அச்சகத்தில் பெருந்தீயில் சாம்பலாகிவிட்டது. என் மனதில் ஆழ்ந்த ரணத்தை ஏற்படுத்திய நிகழ்வு அது.

தீயில் சங்கமித்த எனது கவிதைகளுக்கு மறுவாழ்வு தந்திருக்கிறார் அருமை நண்பர் மு. நித்தியானந்தன். ஒரு கவிஞனின் குரல் வெறிநாய்களின் தீ ஜுவாலையில் அடங்கிவிடக் கூடாது என்ற அவரது தர்மத்தின் வெளிப்பாடு இது. அவர் மாணவராக பதுளையில் திகழ்ந்த போது செய்த கலை இலக்கியப் பணிகளையும், பின் பட்டதாரியாகி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பத்திரிகையாசிரியராயும், பல்கலைக்கழக விரிவுரையாளராயும் திகழ்ந்த காலங்களிலும், அவர் ஆற்றிய இலக்கியத் தொண்டுகளையும் என்னுள்ளம் எண்ணிப் பூரித்து, புளகாங்கிதம் கொள்கிறது. பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் வாழ்கின்ற அவரின் தேடல் முயற்சியும், தகவலைத் திரட்டித் தரும் வேகமும், மலையகச் சரித்திரத்தின் பால் அவரிடம் திரண்டிருக்கும் ஆர்வத்தின் அடையாளமாகவே விளங்குகின்றது.

சென்னையில் நடைபெற்ற ''தமிழ் இனி 2000...'' என்ற உலகத் தமிழ் இலக்கிய கருத்தரங்கு மாநாட்டில், எனது கவிதைகளைப் பற்றி மு. நித்தியானந்தன் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரை அவரது ஆழமான திறனாய்வுத் தகைமையை உறுதி செய்கிறது.

நான் இங்குமங்குமாக எப்போதோ எழுதிப் போட்டவைகளை, எங்கெல்லாமோ தேடிப் பிடித்து வைத்திருந்த எனது அன்பு மனைவிக்கும், மகன்மார்களுக்கும் நன்றி சொல்லத் துடிக்கிறேன்.

அமரர் எஸ்.டி.சிவநாயகம், பெரியார் அ.மு.துரைச்சாமி, முன்னாள் அமைச்சர் பி.வி.தேவராஜ் அவர்கள், வீரகேசரி முன்னாள் உதவி ஆசிரியர் செ.மு.கார்மேகம், ''செய்தி'' இதழின் உரிமையாளர் ரா.மு.நாகலிங்கம், மாலைமுரசுஆசிரியர் க.ப.சிவம், வீரகேசரி ஆசிரியர் வி. தேவராஜ், தினகரன் வாரமஞ்சரி பொறுப்பாசிரியர் அருள். சத்தியநாதன் இலக்கியவாதி அந்தனி ஜீவா, மித்திரன் ஆசிரியர் ப. சூரியகுமாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சார்ந்த கலைமகள் சின்னசாமி இலக்கியத் தொண்டர் எச்.எச்.விக்கிரமசிங்க அகிலம் கே.வி.இராமசாமி, தினக்குரல் ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச் செல்வன் ஆகிய அனைவரும் எனது அன்பான நன்றிக்குரியவர்கள்.

எனக்கு இக்கட்டான 'நெருக்கடியான கட்டங்களில் தாராளமாகக்' கைகொடுத்து உதவிய, சகோதரர்கள் வி. வீரையா பாலன், பெருந் தோட்டத்துறையில் மேலாளராக பணியாற்றிய H.S.ரத்வத்தை குடும்பத்தார் முதலியோர் என்றென்றும் நன்றிக்கு இலக்கான இனியவர்களாவர்.

என்படைப்புகளை எப்போதும் வரவேற்று, சுவைத்துவரும் வாசகர்களைப் பாராட்டி, அவர்களின் ஆதரவை தொடர்ந்து எதிர்ப் பார்க்கின்றேன்.

அன்பன் — 191 பசறை வீதி, 3ம் கட்டை

இ.ஆ.தமிழோவியன் — பதுளை (இலங்கை)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிதைகள்
# கவிதைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாடற்றவர்?

காட்டு மிருகமாய் தோட்டத்து மக்களை
கருதிடுங் கூட்டங்களே! - உங்கள்
கோட்டையை நொறுக்கிடும் வேட்டுகள் வைத்திட
குமுறிஎழுந்தனர் பார்!

❈

மேடையில் தொண்டராய் நாடக மாடியே
மேதினி சுற்றுவோ ரே! - உங்கள்
வேடத்தை களைத்து ஓடோடத் துரத்திடும்
வேளையும் வந்ததைப் பார்,

❈

நாட்டின் வளர்ச்சிக்கு ஊட்ட மளித்தவர்
நாடற்றவ ராவது ண்டோ? - அவர்
வீட்டை இழந்தும் வாட்ட மடைந்தும்
வீதியில் சாவது ண்டோ?

❈

தோட்டங்கள் செழிப்பதில் நாட்டங்கள் கொண்டு
தொல்லைக ளேற்றோரை - அனாதைக்
கூட்டங்களாய் எண்ணி ஓட்ட நினைத்திடும்
கொடுமைகள் சகிப்பது ண்டோ?

❈

செங்கதிர் அறிந்திடும் எங்கள் தமிழினம்
செந்நீர் வடித்த கதை - அதை
எங்கணும் சொல்லியே பொங்கி எழுந்தது
எங்கள் இளைஞர் படை!

❈

திங்கள றிந்திடும் மங்கை தமிழ்க்குலம்
திண்டாடிச் சமைத்த கதை - அவர்

www.tamilarangam.net



தங்கள் துணைவர்கள் இங்கடைந்த வதை
தரணியே அறியு மதை!

❈

பிஞ்சுக் குழந்தைகட்கும் கஞ்சி கொடுக்காமல்
பெரும் பாடு பட்டவர்கள் - அவர்
நெஞ்சங் கொதித்தெழும் மிஞ்சிடும் வேதனை
நெஞ்சைத் தீய்க்குங் கதை!

❈

நெஞ்ச மறிந்திட வஞ்சக மின்றியே
நித்தமும் உழைத்து வரும் - எங்கள்
வஞ்சியர் கரங்கள் கொஞ்ச மாடாவிடில்
வாடுவார் நாட்டு மக்கள்!

❈

தஞ்சம டைந்த தால் நெஞ்ச முடைந்தவர்
தலைகள் குனியு மடா! - நாமும்
வெஞ்சினங் கொண்டே துஞ்சுதல் ஒழித்தினி
வீறிட்டு எழுவோ மடா!

❈

அஞ்சி யடங்கியே கெஞ்சிப் பிழைத்திடும்
ஆசையோ நமக்கு இல்லை! - இனி
நெஞ்சம் துணிந்தவர் கொஞ்சமு மடங்கிடோம்
நிச்சயம் வெற்றி யடா!

❈

(மலையரசு - 1961ல் வெளியானது)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பரதேசி ஆனோம்

சாக்கடையில் சந்தனத்தைச் சாற்றுகிற நெஞ்சத்தார்
பூக்கடையில் சேற்றோடு புழுதிவாரிக் கொட்டுகின்ற
நோக்குடையார்! போக்குடைந்து நொண்டிகளாய் முண்டங்களாய்
மூக்குடைந்து போனபின்னே மொட்டையராய் புலம்புவதேன்...?

தாழ்ந்த மனப்பாங்கால், தைரிய மின்மையினால்
வாழ்ந்த வீடுகளை வழியக் கொடுத்து விட்டு
வீழ்ந்த இனமாகி விதியற்ற மக்களாகி
சூழ்ந்த கவலையினால் சோர்ந்து புலம்புவதேன்?

கல்லுக்கும் மண்ணுக்கும் கடவுள் வழிபாட ளித்தும்
புல்லுக்கும் கீழான புன்மைநிலை யுற்றோமே!
சொல்லுக்குச் சொல், பழம் பெருமை சோடித்து
மல்லுக்கு நின்றமையால் மடமையிலே மூழ்கிட்டோம்

வெல்லும் வலிமை வகை கைக்குள் இருக்கையிலே
கல்லுச் சிலைகளெனக் கவலையற்று இருந்ததினால்
அல்லும் பகல்வளர்த்த மலைநாட்டில் இருக்க இடம்
பல்லிளித்துக் கெஞ்சிக்கேட்கும் பரதேசி நிலையுற்றோம்!

ஆயிரம் பிரிவுகளாய் அடுத்துக் கெடுப்பதிலே ஓயாமல் ஈடுபட்டு
ஒற்றுமையைச் சிதைத்தோரே
மாய்த்தார் துரோகிகள்! மலையகத்தார் புதுவாழ்வை
தீய்த்தார்! கெடுத்தார்! தேன்சொட்டும் பூங்காவை!

அக்கரைக்கு கப்பலேற்ற அனுதினமும் பணங்கேட்டு
அக்கறையாய் "பாடுபடும்" ஆள்சேர்க்கும் சங்கங்களால்
முக்காடு போடும்நிலை மலையகத்தில் பெருகியது
எக்காலம் நீங்குமோ இது?

(செய்தி வார இதழ் - 1966)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரந்தருக இறைவனே...!

உயிர்பிழைக்க உணவைத்தேடும்
உலகிலுள்ள ஏழைகள்
வயிறுநனைக்க உணவுகிட்ட
வரந்தருக இறைவனே...!

குடியிருக்க வீடுவாசல்
குடிசையின்றி வீதியில்,
குடும்பத்தோடு படுத்துறங்கும்
கொடுமையான காட்சிகள்,
இடம்பெறாமல் எல்லோருக்கும்
இல்லமிங்கே கிடைத்திட
உடனடியாய் மனைகள்தோன்ற
உதவ வாரும் இறைவனே!

இனந்தழைக்க அடிமைநீங்க
உரிமைகேட்கும் மக்களின்
மனங்களிக்கும் விடுதலையை
மறுத்திடாமல் கொடுத்திட்டால்
கலகம் யுத்தம் தோன்றிடாது!
கடும்பசியும் வறுமையும்
விலகிஓடும் உலகில்என்று
விளங்கச்செய்க இறைவனே...!

பொய்யும்புரட்டும் அரசியலாய்
போற்றுகின்ற செய்கையை
வையத்தார்கள் விட்டொழிக்க
வல்லவனே உதயந்தா...!

பதவிக்காக கொள்கைமாறும்
பச்சோந்தி போக்கினை

www.tamilarangam.net



உதறிவிட்டு தலைவர்களும்
உண்மையாக மக்களின்
நலங்கருதி நாட்கள்தோறும்
நல்லதொண்டு புரிந்திட
உளமிரங்கி அருள் பொழிவாய்
உலகைஇயக்கும் இறைவனே...!

❉

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நரகம்

கவிந்த இருள் கலையவில்லை!
காலையும் பிறக்கவில்லை!
குவிந்திருந்த மலர்விழிகள்
கொஞ்சந் திறந்ததையா...!

ஆவிநிகர்ப் பிள்ளைகளும்
அடுத்தடுத்து உறங்குகையில்
கூவியசேவலின் குரல்கேட்டு
எழுந்த பெண்ணாள்!

கதவைத் திறந்தாள்!
கண்டாள் இருட்காட்டை!
உதறியதால் துடித்தஉடல்
உயிர்வாட்டும் கொடும்பனியால்!

''ஆயா! ஆயா!'' என்றே
அழுதெழுந்தாள் கைப்பிள்ளை!
''தாயே! பொறம்மா! - என்...
தங்கம்!'' என்றோடி அன்னாள்

தூக்கியணைத்து துயில்வதற்கும்
தாலாட்டுப் பாட;
''தூக்கங்கெடுதே பிள்ளையைத்
தூரஎறி!'' எனுங் கணவன்...

வாக்கைக் கேட்டவளும்
வாடிமனம் வருந்தி
தேக்கிய குமுறலுடன்
தொட்டபணி முடிக்கையிலே...!

www.tamilarangam.net



"அப்பா! அப்பா!" என்றே
அடுத்ததோர் பிள்ளையழ
அப்பாவோ எழவுமில்லை!
அவளோடித் தேற்றுகையில்

❉

"அடுப்பிலே நெருப்பில்லை!
அதைப்பார்!" எனத்தட்டி
துடிப்புள்ள மூத்தமகன்
தூண்டிவிடத் தன்தாயை;

❉

"பெற்றாளுக்கே தெரியும்
பிள்ளைகளின் பெருமையடா!
உற்றநின் தகப்பனுக்கோ
உறங்குவதே அருமையடா!

❉

சுற்றியுளார் வேலைக்குச்
சுறுசுறுப்பாய் ஓடுகிறார்!
பற்றிய அடுப்பில்லை!
பாவியான் என்செய்வேன்?"

❉

கொட்டினாள் முத்தம்மா!
கோபத்தால் இப்படியும்!
எட்டியே பிடித்தான்
எழுந்திட்ட அவள்கணவன்!

❉

உதைத்தான் மென்மலரை!
ஓடோடப் புடைத்தான்!
பதைத்தாள்! பரிதவித்தாள்!
பாவியவன் விடவில்லை!

❉

"வெட்டிப்பயல் மகளே!
வீறாப்போ உந்த னுக்கு?
வெட்டிப் புதைத்திடுவேன்!
வீட்டைவிட்டுப் போனியனா...

❉

www.tamilarangam.net



பிள்ளைகளைத் தேற்றாமல்
பிதற்றுகிறான் ஏதேதோ?
வெள்ளைக்காரன் மனைவியோநீ...?
வேலையாளோ யானுனக்கு?"

❈

என்றலறியவன் அண்டை
எல்லொரும் வந்தவுடன்
ஒன்றுந்தான் பேசவில்லை!
ஓடினாள் வேலைக்கே!

❈

தோட்டத்திலே தாய்கள்படுந்
துயரத்தை என்சொல்வேன்!
கேட்டாலே மனங்குமுறும்,
இந்தக்கேடு என்றுமாறிடுமோ?

❈

(1960ல் ''மலைப்பொறி''யில் வெளியானது)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உரிமைக்கு ஒரு போர்

கூடைசுமந்து மலைமலையாய்
கொழுந்து எடுத்தே,
பாடுபட்ட பெண்களது
பத்துவிரல் சுழற்சியினால்,
நாடுசெழிக்க வெளிநாட்டு
நாணயத்தை தேயிலையால்,
கோடிக் கணக்கில் அன்று...
தேடிக்கொடுத்த பரம்பரையும்;
நாடற்ற மக்களாக இன்று
நாதியற்று நிற்கவாமோ...?

காடற்ற தோட்டங்களாய்
காட்சி யளிப்பதற்கே;
மண்வெட்டி கத்திமுள்
அலவாங்கு ஏந்தியன்று
பண்படுத்தி நிலத்தை
தேயிலைப் பயிரை
நட்ட இனத்தை,
புண்பட்டு போகும்படி
புறக்கணித்தல் நன்றியாமோ?
கண்ணற்றோர் செயலாக
கற்றோர்கள் நடக்கலாமோ...?

கம்பிளி ஐந்துரூபாய்
கருப்புக்கம்பிளி பத்துரூபாய்
வேட்டி நாலுரூபாய்!
வெள்ளைவேட்டி ரூபாய்ஏழாய்
பம்மாத்து பலசெய்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரியகங்காணி மார்களன்று
சும்மா பயமுறுத்தி
காட்டிய இடத்திலெல்லாம்
கைநாட்டு போட்டே
ஒட்டாண்டியாகி யன்று,
உருக்கு லைந்த பரம்பரையை
காட்டிக் கொடுத்துவரும்
கருங்காலி கும்பலினால்
வாக்குரிமை இழந்தோம்!
வாழும் குடியுரிமை இல்லை!
தேக்கமடைந்து இதனால்
திக்கற்றோர் ஆக்கப்பட்டோம்!
நாடாளு மன்றத்தில் – மலை
நாட்டார் வீற்றிருக்க
கூட்டாகப் போராடவே
குமுறி எழுந்திடுவோம்!

*(முன்னாள் அமைச்சர் செ.இராசதுரை மட்டுநகரி லிருந்து வெளியிட்ட 'தமிழகம்' மாத இதழில் 1956ல் வெளிவந்தது)*

www.tamilarangam.net



# தலை நிமிர...

கடலிடை முத்து! இன்பக்
காவியத்தீவு! தனது
உடலிலே மரகதப் பட்டை
உடுத்திய இலங்கை!என்று
கடலினைக் கடந்தே வந்தோர்
களிப்புடன் கூறும் வண்ணம்,
திடமிகு தமிழர் வளர்த்த
தேயிலை மணக்கும் நாடே!

❉

உச்சியால் வானை முட்ட
உயர்ந்து ள்ள மலைநடுவே
பச்சைப் பட் டாடை கிழித்துப்
பாய்ந்திடு மருவி ஓட்டி
இச்சைசே ரெழிலைக் காட்டி
இதயத்தி லமைதி கூட்டி
மெச்சிடும் வளங்க ளும் நிறைந்த
மென் தென்றல் வீசும் நாடே!

❉

(வேறு)

கண்டி, மாத்தளை தொட்டுக்
கம்பளை நுவரெலியாவுடன்
அண்டியுள்ள அட்டன்நகர்!
அடுத்துள்ள நாவல்நகர்,
கொண்டுள்ள ஊர்களுடன்
கூடியுள்ள பதுளைநகர்...
கண்டுள்ளங் களிப்பவளே
கவலைதீர் மலைநாடே!

❉

சிங்கநிகர் தமிழினமும்,
சிங்களரும், பிறஇனமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கொன்றாய் வாழ்ந்து
    இன்புறவே அருள்காட்டிப்
பொங்குங் கவலையுடன்
    பொருமும் மலைத்தமிழரிடம்
தங்கியுள்ள குறைநீக்கித்
    தலைநிமிர வழிதருவாய்...!

(மலைமுரசு மாத இதழில் 1960ல் வெளிவந்தது)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கதராடையும் கள்ளத்தோணியும்

வெள்ளைநிறக் கதர்வேட்டி சட்டை யணிந்து,
விழிமூடி இறைவணங்கி, விபூதி பூசி,
பிள்ளைக்கும் பெண்டுக்கும் உடைகள் வாங்க,
பெருமாளாம் தொழிலாளி தோட்டம் விட்டு,
கள்ளமில்லா உள்ளத்தில் களிப்பு பொங்க,
கடைவீதி வந்துபல கடைகள் சென்றான்!
அள்ளிபல துணிகளையும் அழகு பார்த்தே
ஆவலோடு சேலையுடன் சட்டை பெற்றான்!

மீதியுள்ள சில்லறையில் இனிப்பு பண்டம்
மிகுமன்பு மகனுக்கு வாங்கிக் கொண்டே
வீதியிலே சுமையோடு நடக்கும் போது
விரைந்து வந்த பொலிசார் தடுத்தவனை
ஏதேதோ கேள்விகளை கேட்டு, உருட்டி
ஏதுமறியா தோட்டத்தானை காரில் ஏற்றி,
நீதிவழி இலங்கையனா? என்று காண,
நிறுத்திட்டார் காவல் நிலையத்தில் அந்தோ...

பிறந்தஇடம், வளர்ந்தஇடம், வாழும்தோட்டம்,
பெண்டாட்டி பிள்ளையின் விபரம் கேட்டார்!
பிறந்தஇடம் பெற்றோர்கள், மறைந்த நாட்கள்
பிறவிளக்கம் அடுக்கடுக்காய் அளந்து கேட்டார்!
மறந்தவையை நினைக்காமல், மனதில் நின்ற
மற்றவையை உரைத்திட்டான்! தங்கள் தொழிலில்
சிறந்தவர்கள் என்பதை நிலைநாட்டும் நோக்கில்
சிந்தித்து பார்க்காமல் "கள்ளத்தோணி" என்றே...
தொலைபேசி வழியாக செய்தி சொல்ல
தோட்டத்துரை திகைத்திட்டார்! தலைமைக் கணக்கரோடு
நிலைபேசி பெருமாளின் பிறந்ததேதி பெற்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேராகப் பொலிஸ் நிலையம் வந்தார்!அலையாக விழிகளிலே
கண்ணீர் சொட்ட
அழுகின்ற பெருமாளின் முதுகில் தட்டி,
மலையாக வீற்றிருந்த காவற் தலைவரிடம்
மலைக்கும்படி சான்றுகளை எடுத்துப் போட்டார்!

"இப்போதோ? அப்போதோ? இலங்கை வந்து
இருக்கின்ற ஆளல்ல பெருமாள் கண்டீர்!
முப்பத்தி ஓராண்டாய் பிறந்த வீட்டில்
முதுகுடியின் வழிவழியாய் வாழும் ஆளை
இப்போது பிடித்துவைத்து கள்ளத் தோணி
என்றியம்பும் செயல் சரியோ?" என்றுகேட்க ;
"தப்பேதும் கொள்ளாதீர்! கதர்சட்டை வேட்டி
தலைமீது கட்டியிருந்த முண்டாசு முற்றும்...

அப்படியே கள்ளத்தோணி ஆளைப் போன்றே
அச்சாக விளங்கியதால் பிடித்து வந்தோம்!
இப்படியே கதருடுப்பு இனிஉடுத்த வேண்டாம்!
என்றுஇம் மனிதனுக்கு எடுத்துச் சொல்வீர்!
எப்படியோ நடந்திட்ட குறைக்கு எல்லாம்
எவ்விதமும் பொறுப்பாளி நாங்கள் அல்லோம்,
இப்போதே பெருமாளை அழைத்துச் செல்க!,
எனக்கூறி பெருமாளை விடுதலை செய்தார்

*(1958ல் சுதந்திரனில் வெளியானது)*

www.tamilarangam.net



# படுகொலைக்குப் பாயிரம்

மூன்றாங் கட்டை கண்ணையா முதலாளியார்
ஈன்ற எழிற்புதல்வன் செல்லையா எனும் இளைஞன்!
நேர்வாகுக்கு எடுப்பான நெளிநெளியாம் முடியோடு; பார்ப்போரைக் கவரும்படி,
வெள்ளை வேட்டியுடன், வெள்ளைநிற ஆவாரமும் அணிந்த வாலிபனாய்;
உள்ளத்தைக் கொள்ளை கொள்ள பதுளை வீதிகளில் எல்லோரும்
அறிந்தவனாய் வலம்வந்த செல்லையாவை;
பொல்லாத இனவெறியால் ஐம்பத்தெட்டா மாண்டில் பதுளையிலிருந்தே
மூன்றாங் கட்டைக்கு வரும்போது,
எதுவிதத் தவறிழைக்காத இறைபக்தி கொண்டவனை,
ஈவுஇரக்க மின்றி 'இந்தகொட' வயற்காட்டில்,
பாவிகள் வெட்டிக் கொன்ற பயங்கரத்தை என்ன சொல்வேன்?
தார்பூசி இனவெறியர் பதுளையிலே தமிழெழுத்துப் பேர்ப் பலகைகளை
அழித்திட்ட அந்த நாட்களிலே
''தமிழ் வாழ்க!'' என்று எழுதிய தாள்களையே குமுறிய நெஞ்சத்துடன் நானும்
பெரி கந்தசாமியும் வேகமாக இரவில் பதுளை வீதிகளில் ஒட்டியதால்,
சாகவேண்டிய கட்டத்தைச் சந்தித்தோம் ஐம்பத்தெட்டில்!
என்னைப்போல் உருவத்தில் ஒன்றாய் இலங்கியதால்,
அன்னவனை யான் என்றே ஆள்மாறி கொலை செய்தார்.
இனக்கலவரம் ஏற்படுத்திய வன்செயலும் நின்றவுடன்;
மனக்கலக்கத்தோடு பாரதி கல்லூரிக்கு வந்தபோது
பெரும்பான்மை இனத்தவர்கள் என்னைச் சூழ்ந்தபடி திரும்பவும் தப்பி
வந்தாயா? நண்பா!''
- என்று, கதையைச் சொல்லி என் கை பற்றித் தழுவியதும், பதைபதைத்த
நெஞ்சத்துள்ளே பார்த்தேனே செல்லையாவை,
ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டும் பாடியதோ தமிழினப்
படுகொலைக்கு?

*(1958ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தில் 3ம் கட்டையைச் சார்ந்த கண்ணையா செல்லையாவை, 'இந்தக் கொட'யில் வைத்து கொலை செய்து - வயற்காட்டில் போட்டிருந்தது பற்றிய உண்மைச் செய்திகள் இவை.)*

குப்பமுத்து சுந்தரத்தின் குடும்பத்தையே ஆடிக்கலவரத்தில் கொப்பளித்த
இனவெறியில் கொன்று கொளுத்தியதை
இப்போது நினைத்தலும் இதயந் துடிக்கின்றது!

www.tamilarangam.net



அப்போது வீரகேசரியின் நிருபராக விளங்கிய மகன் கணேசனின் மனைவி, மக்கள்
முன்னே அகம் பதறியழ அரக்கர் குணம் படைத்தோர்கள் வெட்டிக் கொன்றார்கள்!
அன்னவனின் தம்பி கட்டிளங் காளை இராஜேஸ்வரன் என்பானையும் உற்ற மனைவி தேவியும்,
ஒரே மகன் கௌசிக்கும் சுற்றி நின்று தடுத்தும் சுட்டுப் பொசுக்கினார்கள்!
கைவிரலில் பாய்ந்த தோட்டாவால் கௌசிக் ''ஐயோ அப்பா!''வென
அலறிவிழுந்தபோதும் அட்டனிலிருந்து மகள் யோகேஸ்வரியைப் பார்க்க
கட்டிலா காதலோடு ஓடிவந்த மருமகனாம் நாகரத்தினம் என்பவரையும்
நாயாக வெட்டிச் சுட்டு தேகத்தின்மேல் டயர்போட்டு தீமூட்டிச் சிரித்தார்கள்!
மகன்மார்கள் இருவரோடும்,
மருமகன் நாகரத்தினத்தோடும் தகனமாக்கிய ஆடிக்கலவரம் தலைவிரித்தாடியதால்;
அங்குமிங்கும் அகதியாகத் தஞ்சமாகிப் பின்னம்; ''எங்குளார் தந்தை, தம்பியர்கள், தங்கை?''
- என, ''இந்தக்கொட''ப் பாலத்தின் பக்கத்திலே இருந்த; சொந்த வீட்டுக்குச் சென்ற சுந்தரம்-சௌமியனோ,
கண்டதெல்லாம் சாம்பலாகக் கண்ணீர்பெருகியபடி
''உண்டிங்கோ தெய்வம்?''- என உளம் தளர்ந்து முகாம் வந்தார்!.

செட்டிக் கதிரேசன் கோயில் செல்வங்களையும் சிலைகளையும் முற்றாகக் கொள்ளையிட்டே மூட்டிவிட்டார் தீப் பிழம்பை,
திக்கெல்லாம் பேர்விளங்கும் திருவருட்தேவியாம் ரொக்கில் காளியம்மனின் தங்கநகைகள் சொத்துக்களையும் திருடிச் சுருட்டினார்கள்!
தெய்வங்களையும் நொறுக்கினார்கள்! உருகிய நெஞ்சத்தாரை உதைத்துத் துரத்தினார்கள்!
எல்லோருக்கும் நலமளித்த வைத்தியர் சிவஞானத்தின் இல்லத்தையும்
கொள்ளையடித்து அடித்தவரை விரட்டினார்கள்!
கல்லடிவேலன் மகன் வழக்கறிஞர் நடராஜாவின் இல்லத்தையும் தீயிட்டே, இருந்ததையும் அபகரித்தார்கள்!
ஒளியாமண்டி நாகரத்தினத்தின் உடைமைகளைச் சூறையாடி விழிகலங்க
துன்புறுத்தி வீட்டைவிட்டு ''ஓடு'' என்றார்.
அள்ளிவழங்கிய இரத்தினசாமியின் மொடன் படமாளிகைக்கு கொள்ளி
வைத்து கொக்கரித்தோர் கும்மாளம் போட்டார்கள்,
நல்லபேரோடு வியாபாரத்தால் தழைத்து வந்த
செல்லசாமி நாடாரின் குடும்பத்தையே அழித்தார்கள்!
உதவிகள் புரிந்தபடியே உரிமைப்போர் தொடுத்திட்டபதுளை
மாநகரத்து மாமனிதர் ஞானபண்டிதனின் செல்லம்மாள் வாசிகசாலையுடன்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறந்த கட்டிடங்களையும்
பொல்லாத இனவெறியால் தரைமட்டமாக்கினார்கள்,
பண்டாரவளைக் கோயிற் பண்டாரத்தையும் இளைஞனையும்
துண்டாக வெட்டித் துடிதுடிக்க எரித்ததை எல்லாம்
எந்தத் தெய்வமும் எழும்பித் தடுக்கவில்லையே ஏன்?
என வெந்த உள்ளங்கள் படும் வேதனைக்கும் பதிவேது?
அண்ணன் கந்தையாவின் 'மொடன்' அச்சகத்தையும்,
நண்பன் சற்குருநாதனின் 'பதுளை' அச்சகத்தையும்,
என்றன் கவிதைகளோடு ஆடிக்கலவரத் தீக்கு
அன்று உணவாக்கிய அட்டூழியங்களை விரிவாகப்
பாடினால் பெரிய வரலாறாகும்! அதனாலே
ஏடெழுதுவோர் பொறுப்பாகட்டும் இனி...!

www.tamilarangam.net



# "அகதித் தமிழர்"

நிலங்கடந்து, நதிகடந்து, கடல் கடந்தும்;
நேருக்குநேர் போர்தொடுத்து வெற்றி கண்டு
பலங்கொண்ட தமிழர்களாய் புகழ் பெற்றதாலே
பண்டுள்ளோர் 'மறத்தமிழர்' என்ப்பேரும் பெற்றார்.
செந்தமிழர், ஒண்டமிழர் வண்டமிழர் என்றும்
சிறப்பான செயல்களினால் பாராட்டப் பெற்றும்;
பைந்தமிழர் நற்றமிழர் என்று ஆன்றோர்
பலவாறு தமிழர்களுக்குப் பேர்கள் சூட்டினார்.

பரம்பரையாய் வாழ்ந்த சொந்த நாட்டைவிட்டு
பயந்தோடி உயிர்பிழைக்க பயணமாகி இன்று,
வரம்புமீறி பிறநாட்டில் வலிய தஞ்சமாகி,
வயிற்றுப்பசி தீர்ப்பதற்கு அலைமோதி தவிக்கும்
'புலம்பெயர்ந்த தமிழர்' எனும் புது வர்க்கத்தை
புவியனைத்தும் புகல்கின்றார் "அகதித்தமிழர்" – என்றே.
வலம்வந்து வையத்து நாடுகளில் வாழ;
வழக்காடும் அகதித்தமிழர் எனப் பூரிப்பாயே!

www.tamilarangam.net



# தூசி

கட்டுச்சோறு கூடையுடன் மலைக்கு ஓடி
கதிரவனின் ஒளிகண்டு, கரங்கள் கூப்பி,
மொட்டுகளை, அரும்புகளை ஒதுக்கி வைத்து
முற்றிலையை கிள்ளி வீசி, கொழுந்து எடுத்தே,
மட்டமலை, பழைய மலை புதுமலைக ளெல்லாம்
மயக்குமெழில் பசுமைமலர்ச் சோலை யாக்க,
கொட்டுமழை, கொடும்வெயிலில் உழைப்போர் கூட்டம்
குடிப்பதற்கு கொடுப்பதுவோ தேயிலைத் தூசாம்!

❁

தரமான தேயிலைத்தூளை சலித்து மிஞ்சும்,
தரமில்லாத் தூசியினை குவித்து வைத்து,
உரமாகத் தேயிலைமலைக்குப் போட வேண்டியதை,
உடல்முழுதும் ஒட்டிக் கொள்ளும் சொனையதனை,
ஒருமுறைக்குப் பலமுறை சலித்து எடுத்து,
ஒருசுவையும் சாயமும் தராக்குப்பையினை,
தருகின்றார் "லேபர் டஸ்ட்"* என்றே!-இந்த
தரங்கெட்ட தூசிதான் தொழிலாளர்க்குண்டாம்!

❁

தோட்டத் துரைமார் தினந்தோறும் அன்பளிப்பாய்,
தெரிந்தவர்க்கு வழங்கும்தூள் பலகிலோ வாகும்!
தோட்டத் தொழிற்சாலையிலே வேலை செய்யும்
தொழிலாளர்களை ஏமாற்றி நிதம் சேவையாளர்
கூட்டாகத் திட்டமிட்டுத் தேயிலைத் தூளை,
கொள்ளையிட்டு பலநூறு கிலோ விற்பதாலே,
ஈட்டியுள்ள செல்வமோ லட்சம்! லட்சம்!
இரவுபக லுழைப்போர்க்கே "லேபர் டஸ்டாம்"!

❁

வாசமொடு சுவையூட்டும் தேயிலைத் தூளை,
வகைதொகையாய் உருவாக்கித் தரும் தொழிலாளர்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மோசமாக நடத்திவரும் துரைத் தனத்தின்
    முழுத்துரோகச் செயலனைத்தும் தூள் தூளாக்கி,
தாகம்வரும் போதினிலே நல்ல தேநீர் பருக,
    தகுந்தரகத் தூளினைத் தொழிலாளர்க் களிக்க,
ஏகமனதாகவே ஓர்முடி வெடுத்தே, அரசார்
    இன்றே அதைச் சட்டமாக்க வழி வகுப்பீர்!

* Labour Dust

*(வீரகேசரி குறிஞ்சிப்பரல்கள் பகுதியில் வெளிவந்தது)*

www.tamilarangam.net



# அச்சம் தவிர்

அச்சம் தவிர் தோழி – வீணாய்
அஞ்சி விலகிடாமல்,
நிச்சயம் வெற்றிஎன – நீயும்
நெஞ்சாரப் போராடுவாய்!

விண்ணில் குடியிருக்க – மனிதன்
விரைந்து முன்னேறுகையில்;
மண்ணில் குடியிருக்க – மகளிர்
மனமும் கலங்கலாமோ?

கூடையை முதுகினிலே – தினமும்
கொழுந்தோடு சுமந்துபடி
மேடுபள்ள மெங்கும் – மலை
மீதெல்லாம் அலைகின்ற...

தோட்டத்து தாய்க்குலத்தின் – மனத்
துணிவினைப் பார்த்துநீயும்
வாட்டத்தைப் போக்குதற்கு – நெஞ்சில்
வலிமை கொண்டெழுவாய்!

கட்டிய நாயினைப் போல் வீட்டுக்
கதவினை மூடிக்கொண்டே
எட்டி ஒதுங்கிடாமல் – நாடு
எங்கும் நடைபோடே!

வேலை தேடியலைய – அழகை
விலை பேசும் ஆடவரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலை முறித்தடக்க - இன்றே
கனன்று குமுறிஎழு!

வஞ்சகம் ஏமாற்றுக்கு - பயந்து
வாடி மடங்காமல்
நெஞ்சிலே அச்சம் தவிர் - வாழ்வில்
நிம்மதி நிலைத்து நிற்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலை

இருள் படர்ந்த இல்லத்துக்குள்—விளக்கொளி
ஏற்றவும் விருப்ப மின்றி—மனத்தில்
இருள் படர்ந்து குமைய;—மூலையில்
இருந்து தலை குனிந்தே!

அருள் படர்ந்த முகத்தினோடு—தாய்மை
அழ கொளிர் உருவத்தோடு—என்முன்னே
இருளைக் கிழித் தெழுந்தாள்—அன்னை
என்தலை நிமிர்த்திக் கேட்டாள்!

''கண்ணீர் பொங்கி வீழும்—உமது
கவலை தோய்ந்த முகம்—எனது
எண்ணத்தைத் தாக்குதப்பா!—அதனை
என்னென்று நீ யுரைப்பாய்?''

என்னும் மொழி கேட்டேன்!—அவளை
எவளெனப் பேர் கேட்டேன்!—''என்னை
இன்னும் தெரிந் திலையோ?—சுதந்திரம்''
என்பெய ரென்று ரைத்தாள்!

'சுதந்திரம்' என்ற ஓசை—என்னுள்
சுருக்கென்று பாய;—நிமிர்ந்து
இதந்தரு முகத் தொளியைக்—கண்கள்
இமைக்காது நோக்கி யுரைப்பேன்;

கொட்டு முழக்க மிட்டு—உன்னைக்
கொண்டாடு மிவ் வரசார்—வெடிகள்
சுட்டு வலம் வருவோர்—எங்களைச்
சுற்றியே விலங் கிட்டார்!

www.tamilarangam.net



உன்னைப் பெற்ற வுடன்—தமிழரின்
உரிமை எலாம் பறித்தார்—நடந்த
பின்னைக் கொடுமைக் கெல்லாம்—உனது
பேர்கூறி(த்) துணை நின்றார்!

தங்கள் இனத்தினர் மட்டும்—உன்னருள்
தாராள மாகத் துய்க்க—மலையக
எங்கள் இனத்துக்கு(ம்) மட்டோ—உன்னொளி
எட்டுணையும் காட் டார்!

மான மெல்லா மிழந்து—தமிழின்
மாண் புரிமை துறந்து—தமிழர்
ஈன மடைந்து வாழ்தல்—உனக்கும்
ஏற்றதோ சொல்லு மம்மா?

சொல்ல நாள் விரியும்—துன்பத்தால்
சோர்ந்து விட்ட தமிழர்—படும்
அல்லல் அழிவ தென்றோ?—சுதந்திர
அருள் பெறுவ தென்றோ?

கேள்விகள் இப்படி யான்—பற்பலக்
கேட் டழுதவுடன்—சுதந்திரம்
கேவி யழுது சொன்னாள்—அதைக்
கேட்டது மின்ப முற்றேன்!

''ஒற்றை விரல் காட்டிச்—சூரியனின்
ஒளியை மறைப்ப துண்டோ?—அரசின்
இற்றைத் தடைகள் சூழ்ச்சி—என்னை
இனிமேலும் பிரிப்ப துண்டோ?

தொல்லையால் தமிழர்களும்—இன்று
தோல்விகள் பெற்றிடினும்—இங்கு
ஒல்லையில் வெற்றி காண்பார்—விடுதலை
உரிமை நலங்கள் மீட்பார்!''

*(சுதந்திரன் - பத்திரிகையில் 1962ல் வெளியானது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறிய வெளிச்சம்!

கைவிரல்கள் சிவந்து பிளக்க
களைக்காது கொழுந்து கொய்து
மெய்தொங்கும் கூடை நிறைத்து
மேலும் கீழுமாய் சுமந்தே
தையலர் ஒருநாட் பேருக்குத்
தவித்து இங்கே உழைப்பதுபோல்
வையத்தில் வேறெங்கு முழைக்கும்
வனிதையர் வருந்துவதே இல்லை!

❈

பச்சிளங் குழந்தைகளை "பிள்ளைகள்
பாதுகாக்கு" மகத்தில் நிறுத்தி
உச்சிமலை முகடுகளில், கொழுந்தை
உடல்வியர்க்கப் பறித்து - நிறுத்தே;
ஓட்டமும் நடையுமாகப் பிள்ளைகள்
உறங்கிடும் காப்பகம் வந்தே
ஊட்டுவார் பாலை! அரைவயிறாய்
ஓடுவார் மீண்டும் மலைக்கே!

❈

மஞ்சள் வெயில் தழுவத் தன்
மழலையோடு மனைக்குள் நுழைய
நெஞ்சம் நிறைந்த மக்கள்
நினைத்ததைக் கேட்டு நிற்பார்!
வஞ்சியின் மனமோ பதறும்
வாழ்க்கைத் துணைவன் வெறுப்பாய்
"கொஞ்சாதே! முகத்தைக் கழுவு!
குடிக்கத் தேநீர்தா!" - என்பான்.

❈

சமைப்பதும் கணவன், மக்கள்
சாப்பிட்டபின் மீதி உண்டே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இமைமூடி அயர்ந்து, சற்றே
இரவின் சுகம் மருவி - மறுநாள்
விடியுமுன் விழித்து; எந்திரமாய்
வீட்டு வேலைகளுடன் வேலைக்கே
துடித்தபடி ஓடுவதே தோட்ட
தொழிலாளப் பெண்கள் வாழ்வாம்!

பணிசெய்யும் பிறமாதர் பொழுதை
பரவசமாய் களிப்பது போல்
அணியணியாய் கொழுந்து கிள்ளும்
அரிவையர் குலமும் ஒன்றாய்
கூடிஓர் இடத்தில் அமர்ந்தே
குவலயப் புதுமைக் கேற்ப
நாடிநல் மகிழ்ச்சியில் திளைக்க
நல்வழி இன்றே செய்வோம்!

வாரத்து விடுமுறை நாளில்
வனிதையர் நெஞ்சை உறுத்தும்
பாரத்தை அகற்றும் இனிய
பல்சுவைக் கலை நிகழ்ச்சிகளை
ஆர்வமாய் கண்டு களிக்கும்
அரங்கத்தை தோட்டங்கள் தோறும்
தீர்மானித் தமைப்பதோடு விளையாட்டுத்
திடல்களையும் உருவாக்க வேண்டும்!

*(''தினகரன்'' - மலையகப் பகுதியில் வெளியானது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கோபுரங்களை நோக்கி...

குன்றுகளின் கொடுமுடியில்
குடியிருக்கும் மலையகத்தார்,
"ஒன்றுமே அறியாதார்!
உலகமே தெரியாதார்!"
என்ற கணக்கதுவும்
தப்புக் கணக்கென்றே
ஒன்றுபட்டு தோட்டத்தார்
உணர்த்திடவே எழுந்திடுவார்!

"நாட்டின் நடப்பறியான்!
நாகரிகம் புரியாதான்!
தோட்டக் காட்டான்
கோழிக்கறிக்கு - மாசி
போட்டான்!" எனுங்கூற்றைப்
பொய்யாக்கிப் புவியறிந்த
கூட்டமென உணரவைக்க
கொடிஏந்தி நடைபயில்வார்!

அடிமைத்தனத்தின் இன்றும்
அவமானச் சின்னமாய்
நெடிய லயங்களாய்
நிலைகெட்டு காட்சிதரும்
பழைய கூடாரங்களைப்
பயமின்றி உடைத்தெறிந்து,
அழகிய மனைகளமைத்து
அகமகிழ்ந்து குடியிருப்பார்!

வாரத்திலே ஆறுநாட்கள்
வேலைசெய்யும் வாய்ப்பதனை;

www.tamilarangam.net



சீராகப் பெறுவதற்கே
சேர்ந்தெல்லாம் போராடி
மற்ற உழைப்பாளர்போல்
மகிழ்வோடு வாழ்வதற்கும்
உற்ற சூழ்நிலையை
உருவாக்கி முன்னேறிடுவார்!

உழைப்பிற்கு ஏற்றபடி
ஊதியத்தைப் பெற்றவராய்,
தழைக்கும் வழிதனிலே
தலைநிமிர்ந்து நடைபோட்டு,
கணனியுக வேகத்தில்
கைகோர்த்து பயனடைந்தே
மனதில் தளர்வின்றி
மலையகத்தார் தலைஎடுப்பார்!

இலங்கைத் தீவிலுள்ள
எல்லா ஊர்களுக்கும்
கலங்காமல் சென்றங்கே
கற்றபடி தொழில்புரியும்
மனபலத்தைப் பெற்றவராய்
மலையகத்தார் வாரிசுகள்
இனங்களோடு சமத்துவமாய்
ஏற்றமெல்லாம் கண்டிடுவார்!

கூடையைச் சுமந்தபடி
கொழுந்துகிள்ளும் வேலையதே,
நாடறிந்த தம்தொழிலாய்
நம்பியிருந்த நங்கையர்கள்,
நாடுவிட்டு நாடோடி
நாலுபணந் தேடுதற்கே,
மாடாக உழைத்தங்கே
மடியாமல் மடிகின்ற...

கேடுகெட்ட தொழிலதனை
நாடாமல் இருப்பதற்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீடுதேடி வேலைசெய்யும்
வறுமையினை போக்குதற்கும்,
தோட்டங்கள் தோறும்
கைத்தொழிற் பேட்டைகளை,
கூட்டாக அமைத்ததனால்
குறைவின்றி வாழ்ந்திடுவார்!

❈

கிராமங்களும் தோட்டங்களைக்
கிட்டியே இருந்தாலும்
பொறாமையும் பிளவுகளும்
போட்டிகளும் தோன்றாமல்
நாட்டுக்கே எடுத்துக்காட்டாய்
நட்புறவும் மிளிர்ந்திடவே,
தேட்டம் குவிந்திடவே,
சேர்ந்தொன்றாய் வாழ்ந்திடுவார்!

❈

சங்கங்களால் சண்டைகளும்;
சதிச்செயலும் குழிப்பறிப்பும்
எங்களது மலையகத்தில்
இனிமேலும் தொடராமல்
வாடுகின்ற தொழிலாளர்
வர்க்கத்தில் புதுவளர்ச்சி
கூடுகின்ற நிலைமலர
குதூகலமாய் வாழ்ந்திடுவார்!

❈

விடியாமுன் தப்படித்து
வேலைக்கு விரட்டிவிட்ட
முடியாட்சி முறைஇன்று
முற்றாக மாறிவிட,
குடியாலே மலையகத்தார்
குட்டிச்சுவர் ஆனாரெனும்
கொடிய இழிவின்றி
கோபுரமாய் உயர்ந்திடுவார்!

❈

புத்தாயிர மாண்டில்
புதுவழியில் தெளிவோடு,

www.tamilarangam.net



மெத்தவும் தைரியமாய்
 மேன்மையுறும் நிலைநோக்கி
நித்தமும் ஒற்றுமையாய்
 நிம்மதியாய் மலையகத்தார்
உத்தமராய் வாழ்ந்திடுவார் உய்ர்ந்து!

*(இக்கவிதை இ.வா.தே. சேவையின் ''குன்றின் குரல்'' நிகழ்வில் இடம்பெற்றது. தெனகம சிறிவர்தனவால் சிங்கள மொழி வடிவத்தில் ''சிலுமின'' 07-05-2000 அன்று வெளியான ஞாயிறு இதழில் வெளியிடப்பட்டது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவு கண்டேன்

நல்லதோர் கனவு கண்டேன் – தம்பி
நானதில் மயங்கி விட்டேன்!
சொல்லவே இனிக்குதடா – நெஞ்சம்
சோர்வின்றி சுவைக்குதடா!
தொல்லைகள் சிறிதுமின்றித் – தமிழர்
தோய்ந்த நல்லின்பத் தோடே
வல்லமை உரிமை பெற்று – இங்கு
வாழ்ந்திடும் காட்சி கண்டேன்!

❋

தேடிய பொருள் இழந்தே – பசியால்
தேம்பித் திண்டாடி மக்கள்
வாடிய நிலையில் இல்லை – அங்கே
வாழ்கின்றார் இன்ப வாழ்வே!
நாடில்லை உரிமை இல்லை – என்றே
நம்மைப் பார்த்துத் தினம்
சாடியே விரட்டி வந்தோர் – கொடுமை
சாய்ந்ததே நம் ஒற்றுமையால்!

❋

நாட்டின் அரசில் இணையாய் – அன்னை
நந்தமிழைக் கொலு வேற்றிச்
சூட்டினார் மணி முடியும் – தமிழர்
சுதந்திர நாடு கண்டார்!
எட்டின் வழி நடந்தே – மக்கள்
ஏற்ற மடைந்தனர் கனவில்!
தீட்டினர் புது வரலாறு – உலகில்
திக்கெட்டும் தமிழினம் கண்டார்

❋

*(சுதந்திரன் 11-02-1962)*

www.tamilarangam.net



பாட்டன் பூட்டன் பாட்டிகளும்
பாடுபட்டும் உர மாகி
தோட்ட மமைத்து தேயிலையும்
துளிர்த்து வளர நீராகி
நாட்டை நாளும் காக்கின்ற
நலமும் வளமும் சேர்க்கின்ற
தோட்டக்காட்டான் பரம் பரையே!
துணிந்து நிமிர்ந்து நடப்பாயே...

தென்னந் தோட்டத் தொழிலாளர்
தினமும் றப்பர் பாலெடுப்போர்,
இன்னல் பலவால் நலிந்தாலும்,
ஏற்ற மளிக்கும் பாட்டாளி,
முன்னோர் உழைப்பின் சான்றாக
முழுமை பெற்ற தேட்டத்தை
எண்ணாது முடிவில் கைவிட்டு
எங்கே ஓட நினைக்கின்றாய்?

அச்சங் கொண்டு அடிமையாய்
அடங்கிக் கிடக்கும் வர்க்கமென
துச்சமாக எடை போட்டே
தொல்லை இழைப்போர் தலைகுனிய
திட்டம் போட்டே முன்னேறி
தீரம் வீரம் கொண்டவராய்
மட்டந் தட்ட முனைவோரை
மடைய ராக்கி உயர்ந்திடுவோம்!

கப்பல் மிதந்தால் மலையகத்தார்
கண்டிப்பாக மூட்டை கட்டி...
"தப்பிப் பிழைத்தோம்!" என்றபடி
தயக்க மின்றிபோவா ரெனத்
தப்புக் கணக்கும் போட்டவர்கள்
தவறை எண்ணித் திகைத்திடவே,
இப்போ தென்ன எப்போதும்
இங்கே வாழ உறுதி கொள்வோம்!

www.tamilarangam.net



நாங்கள் பிறந்த மலைநாடு
நம்முன்னோர் வாழ்ந்த தாய்வீடு!
எங்கும் உழைக்கும் மக்களே
எழுந்து வாரீர் ஒன்றாக!
சிங்களவர் தமிழர் நல்லுறவாய்
சேர்ந்து வாழ்வோம் மலைநாட்டில்!
எங்கள் நாடு மலைநாடு!
என்று முரசு கொட்டிடுவோம்!

*(வீரகேசரி - குறிஞ்சிப்பரல்)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவுக் கோலம்

ஆசைக் கனவுகள் ஆயிரமாம் - அதில்
வாழ்வில் காண்பதோ அணுவளவாம்
பேசும் பொன்மொழி கடலளவாம் - அதில்
பின்பற்றி நடப்பதோ கடுகளவாம்

பகலும் இரவும் மனப்படகில் - இளையோர்
பயணம் போகும் நினைப்பெல்லாம்
நிகழா தேங்கும் நெஞ்சங்களின் - துயர்
நித்தமும் தொடரும் பெருங்கதையாம்

அழகிய படைப் பெல்லாம் தனதாக்க - மனிதன்
ஆடும் நாடகம் பற்பலவாம்!
பழகியே ஏய்க்கும் துரோகமெல்லாம் - பெறும்
பதவி பணத்திற்கு என்றறிவோம்!

விண்ணில் குடியேறப் போராட்டம் - அழிவின்
விளிம்பில் ஆசையால் சதிராட்டம்
கண்ணில் கொலைகளைக் கண்டாலும் - மறைத்து
காசையே தேடமிக நாட்டம்

கல்லைக் கனி எனப் புகழ்ந்திடுவார் - சுவைக்
கனியை நஞ்சென இகழ்ந்திடுவார்!
எல்லையே இல்லா ஆசையினால் - தினம்
ஏக்கத் தீயில் கருகிடுவார்!

''இல்லை!'' என்றே பணந்தேடும் - செல்வம்
இருப்போர் செயலால் மனம் வாடும்
தொல்லை ஆசையாம் இருளகல - பொதுத்
தொண்டாம் கதிரொளி பரவட்டும்

*(1960ல் 'ஈழத் தென்றல்' ஏட்டில் வெளியானது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமைதி இல்லை

படிப்புலகில் சோதனைகள்
பலகடந்து வெற்றி என்னும்
பட்டம் பெற்றேன்!
நடிப்புலகப் போர்க்களத்தில்
நல்லதொழில் ஒன்றைத்தேடி
நாயாய் அலைந்தேன்!
தடிப்புலகப் போக்காளர்
தடையினுக்கும் தருக்கிற்கும்
தலை கொடுத்தே
கிடைத்த தொழில் தெய்வமென்று
கிஞ்சிற்றும் பிசகாமல்
செய்யும் நாளில்;
பெற்றோரின் நச்சரிப்பால்
பெண்ணொருத்தி துணையாகப்
பெற்ற இன்பம்
வற்றாத செல்வங் களாம்
வளர்குழந்தை நாலாக
வலிமை குன்றி;
உற்றாளும் நோயுற்றாள்!
உடல்மெலிய சருகானாள்
உழைக்கும் நானோ...?

www.tamilarangam.net



பற்றான மனைவியையோ,
பால்கேட்கும் குழந்தையையோ,
பார்ப்பேன் அம்மா...!
விடியுமுன்னே எழும்புவதும்,
வீட்டுவேலை செய்வதுவும்,
விரைந்து ஓடி;
கடமையினைத் தொடருவதும்;
கவலைக்குள் புரளுவதும்;
கடனை வாங்கி;
மிடிமையினை நீக்குவதாய்,
மிடிமைக்குள் மூழ்கியதே
மிச்ச மாக...
அடிமையிலே உழன்று நிதம்
அவதிப்படும் என் மனத்தில்
அமைதி உண்டோ...?

*(கும்பாள்வளை - நெ.பி.பழனிவேல் வெளியிட்ட ஈழத்தென்றலில் 1959ல் வெளியானது)*

www.tamilarangam.net



# பஞ்சப்படி

தொண்டு என்ற பேரினிலே
தோட்டத் தொழிலாளர்களை
கண்டபடி ஏமாற்றி
காசைப் பறிக்கின்றார்கள்!

பண்டு* பணம் சேர்த்தவர்கள்
பலகடைகள் திறந்தார்கள்
கண்டபலன் தொழிலாளர்
கஞ்சிக்கே தடுமாற்றம்

பஞ்சப்படி கேட்டவர்கள்
பலநாள் போராடியதால்
பஞ்சத்திற்கே இலக்காகி
பசியால் பரிதவித்தார்

வீட்டிலுள்ள நகைகளெல்லாம்
வேலை நிறுத்தற் காலத்தில்
ஈட்டுக்குக்கடைக் காரர்களுக்கு
இலாபம் தரும் புதையலாச்சு

தானே பெரியவ னென்று
தான் தோன்றி தலைவரவர்
ஏனைய தொழிற் சங்கங்களை
இணைத்தேகா செயலாலே

வெல்லாமல் போராட்டம்
வீணாகத் தோல்வியுற
பொல்லாத வறுமைத்தீ
பொசுக்கியது உழைப்போரை

www.tamilarangam.net



தஞ்சம் புகுந்த வராய்
    தலைவரும் முதலாளியோடு
கொஞ்சிக் குலாவுகிறார்
    குபேரராய் பறக்கின்றார்

ஆடுமாடு கோழிகளை
    அப்படியே விற்றவர்கள்
பாடி நிதம் ஏங்குகின்ற
    வரண்ட நிலை கண்டார்கள்

அனைத்து தொழிற்சங்கங்களும்
    அணிதிரண்டு போராடினால்
நினைத்தபடி தொழிலாளர்களை
    நசுக்குவது நின்றுவிடும்

ஒன்று பட்டால் வென்றுவரல்
    உறுதி எனும் உண்மையினை
நன்றாக அறிந்து - இனி
    நடக்கட்டும் நம் தலைவர்கள்

தோட்டத்து பாட்டாளிகள்
    தொன்றுதொட்டு ஏமாந்து வரும்
கூட்டமென்னும் ஈனக்
    கொடுமையினை மாற்றுங்கள்

*(கண்டியிலிருந்து வெளியாகிய ''செய்தி'' இதழில் பிரசுரமானது)*

✱ 'பண்டு'(FUND) பணம் - என்பது தொடக்க காலத்தில் தொழிற்சங்கத்தால் தோட்டங்களில் வசூலிக்கப் பட்டது. பின்னர் பிரச்சனைகளால் இடை நிறுத்தப் பட்டது.

www.tamilarangam.net



# இது பொறுப்பதில்லை

தோட்டமக்கள் பெற்றெடுத்த
இளைஞர் கூட்டமே!
தொல்லைகண்டு துவண்டிடாமல்
துணிந்து நில்லுங்கள்!
காட்டுமிராண்டி செயல்புரிவோர்
கலங்கி ஓடவே,
கட்டுப்பாடாய் ஒன்றுபட்டு,
எதிர்த்து வெல்லுங்கள்!

வீரமன்னன் இராவணனின்
பரம்பரை எம்மை,
விரட்டவரும் வெறியர்களை
விரட்டித் துரத்தியே,
ஊரறிய நம்வலிமையினை
விளங்க வையுங்கள்!
ஒன்றுதிரண்டால் வென்றிடலாம்
என்று காட்டுங்கள்!

கோப்பி, கொக்கோ, தேயிலையை
ரப்பர் வர்க்கத்தை,
குன்று, மலை நிலங்களிலே
முதலில் நட்டுத்தான்,
காப்பாற்றியோர் தோட்டத் தமிழர்
என்ற காதையை,
காலமென்றும் எடுத்துக்காட்டி
நன்றி கூறுங்காண்!

வீட்டைவிட்டு தோட்டத்தாரை
விரட்டி யடித்தபின்;

www.tamilarangam.net



விருப்பம்போல் செல்வங்களை
திருடிச் செல்வதும்,
நாட்டிலின்று வழக்கமாக
நடக்கும் செய்கையாம்!
நாட்டைவளர்க்க உழைப்பவர்கள்
காட்டில் தஞ்சமாம்!

திட்டமிட்டு தோட்டத்தாரை
கூட்டங் கூட்டமாய்
திசைதிருப்பி பயமுறுத்தும்
தீயோர் கூட்டத்தின்
கொட்டத்தையே மட்டந்தட்ட
இளைஞர் கூடினால்
கொள்ளையர்கள் உயிர்பிழைக்க
சிதறி ஓடுவார்!

மலையகம் எங்கள்தாயகம்
என்ற மனஉறுதியை
மாற்றஎந்த சக்தியாலும்
முடியா தென்பதை
மலையகத் தமிழர்களே...
செயலில் காட்டுங்கள்!
மாறுபட்டோர் மனந்திருந்தி
நாடிக் கூடுவார்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதுப்பரணி

புதியதாய் வரலாறு தீட்ட
புறப்படட்டும் இளையோர் கூட்டம்!
"விதியற்றோர் தோட்டத்தார்!" - என்றே
வீராப்பு பேசி வந்தோர்,
கதிகலங்கி ஓட ஒன்றாய்
காரிய மாற்றித் திரண்டால்
மதிகெட்டோர் தெளிவ டைவார்!
மலையகத்தில் மறுமலர்ச்சி தோன்றும்!

பிறந்ததும், வளர்ந்ததும், பெற்றோர்
பெருந்துயரம் பட்டு ழைத்தே,
இறந்ததும் இங்கே! தோட்டத்திலே
எலும்போடு உரமாகி பின்னும்
வழிவழி தொழிலாளர்களாய் இன்றும்
வளப்படுத்தி பெருந் தோட்டங்களை
விழிபோலக் காக்கும் மக்கள்
வேலை இன்றி அலையலாமோ?

வட்டத்திற் குள்ளேயே உங்கள்
வாழ்க்கையை முடக்கி வைத்த
கெட்ட முதலாளி வர்க்கத்தின்
கீழ்மை தரும் சதிச்செயலை
முற்றாக வேரறுப்பீர்! பேதம்
மூட்டிவரும் இனத் துரோகிகளின்
கொற்றம் குலைப்பீர்! அச்சம்
கொள்ளாத பாதை செல்வீர்!

நடமாட அஞ்ச வேண்டாம்!
"நம்நாடு இலங்கை!"- என்னும்
திடமோடு செயல்பட்டால்
தீமை செய்வோர் ஓடிடுவார்!
உடல்வலிமை கொண்டதனால்
உழைத்து வாழும் ஆற்றலுள்ள
புடம்போட்ட தங்கங்களே! திரண்டு
புறப்படுக புதுப்பரணி பாட!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெளியில் வந்து...

மன்றமமைத்து தோட்டங்களில்
முன்னேற்றங் கண்டிட,
ஒன்றுபட்டு வாலிபர்காள்
தொண்டு செய்யுங்கள்!
என்றும் பழைய லயங்களிலே
நுடங்கிக் கடக்காமல்,
இன்றுமுதல் வெளியில் வந்து
உலகைப் பாருங்கள்!

தொன்றுதொட்டு இலங்கைநாட்டில்
வாழ்ந்த கூட்டம்நாம்!
இன்றுமிங்கே குடியுரிமை
வாக்குரிமை இழந்துநிற்கிறோம்!
நன்றிகெட்டோர் நாடற்றவர்
என்று கெடுத்ததால்
குன்றுகளில் உழைப்பவராய்
தின்று பிழைக்கின்றோம்!

என்றுமிங்கே கூலிகளாய்
மடிந்து போகாமல்,
நன்றுகற்று நாகரிகம்
கொண்டு வாழுங்கள்.

*(தெளிவத்தை வள்ளுவர் மன்றத்தின் ''உலகம்'' கைஎழுத்து ஏட்டில் வெளியானது)*

www.tamilarangam.net



# களம் காண்போம் வாரீர்!

பழங்கதைபோல் புளித்திட்ட உரிமையில்லாக் கறையைப்
பாடாதப், பேசாத வாயில்லை; நாட்டில்
முழங்கால் நீரளவில் தடைபோடா மூடர்,
முடிவற்றத் தன்னலத்தால் மூண்டஇக் கேடால்
அழுகின்ற மலைத்தமிழர் படுகின்ற துயரை
அளவிட்டுக் காட்டுதற்கு எண்ணிக்கை இல்லை!
விழுகின்ற அடியுதைக்கும் வேற்றுமைக்கும் அன்றே
வித்திட்ட செயலதுதான்! மறுப்பாரோ தமிழர்?

படித்துவிட்ட இளைஞர்களும் கூட்டங் கூடிப்
பகலிரவு அலைகின்றார் வேலை தேடி!
வடித்துவிடாச் சிலையழகு கவிதை மாதர்
வளர்ந்தொரு தாயாகும் காலம் மட்டும்
அடித்துவிடாச் சித்திரமாய் 'லயத்து' வீட்டில்
அடங்கி நிலையழிகின்றார் வேலையின்றி!
பிடித்துவிட்ட இப் பிணிக்கு மருந்து ஊட்டப்
பெரும்படையே போராட்டக் களங்காண்போம் வாரீர்!

"போர்க்களமே வாழ்க்கையடா! வெற்றி தோல்விப்
போராட்டச் சேறுண்ட மனிதன் பாட்டைப்
பார்க்காமல் பிதற்றுகிறீர்! பலம்பெறுவீர்!" என்னும்
பழங்காலத் தத்துவத்தின் களத்தின்பய னறிவோம்!
ஊர்க்களத்தில் கிளம்புகின்ற பகைபோட்டித் தடையை
உடைத்தெறிய உரமில்லை! உளறுகிறான் பொடியன்!
போர்க்களமாம் வெங்காயம்! போடாபோ... வென்று
இன்றென்ன கண்டீர்?புலம்புகின்ற மேதைகளே

துப்பாக்கிக் கரமேந்தித் தோட்டாத் தோளேந்தித்
துணிவேந்தி உயிர்மறந்து சமர்புரியுந் தீர
இப்போக்கில் களப்போக்கு இயங்குவதை அறிந்தும்
இதைச்சொல்லி; அதைக்காட்டி என்னபய னுண்டு?
துப்பாக்கி கண்டாலே "அடேயப்பா..." என்று
தொடைநடுங்கிக் கதவடைப்போர் மேடையிலேநின்று

www.tamilarangam.net



ஒப்புக்கு முழக்கமிடும் 'வாய்வீரம்' விடுத்தே,
உளமோடு களங்காண வளமோடு எழுவீர்!

வாளெடுத்தல், வேலெடுத்தல் வெல்லும் வழியல்ல!
வானூர்தி நின்றுஒரு குண்டெடுத்துப் போட்டால்
ஆளில்லை; ஊரில்லை; அனைத்துங் கனலாகும்!
அள்ளுகின்ற சாம்பலாக அரைநாளில் மாறும்!
தாள்பிடித்து, வால்பிடித்துத் தன்மானங் கெட்டுத்,
தனவானாய்(ப்) பறக்கின்ற தமிழர்களே! தாங்கள்
ஆள்பிடித்து அறக்களத்தில் அணிவகுக்க வேண்டாம்!
அறிவுள்ள மனிதனாய் இனங்காத்தால் போதும்...!

மங்குகிறத் தமிழ்த்தாயின் மானங் காத்து
மனம்நிறைந்து சுதந்திரமாய்(த்) தமிழர் வாழச்
"சிங்களஞ்சேர் தென்னாட்டார் தீரர்!" என்னும்
செழுங்கவிஞன் வாக்கினையும் காப்பதற்கு நீங்கள்
சிங்கம்போல் புலிபோலும் மாற வேண்டாம்!
சீறுகின்ற இனவெறியைத் தீய்த்து மாய்க்கப்
பொங்குகிற சிந்தனையில் புடம்போட்டுக் கண்ட
புனிதவழி அறவழியில் களங்காண்போம் வாரீர்!

*(அட்டன் ஹைலேன்ஸ் கல்லூரி தமிழ்விழாக் கவியரங்கில் 1963ல் பாடியதன் ஒரு பகுதி)*

www.tamilarangam.net



# முத்தையா முரளிதரன்

பந்துவீசி சாதனைகள் படைக்கும் தீரன்!
பார்போற்றும் முத்தையா முரளி தரன்!
எந்தமிழர் தவப்புதல்வன்! இலங்கை நாட்டின்
இணையற்ற கிரிக்கெட் விளையாட்டு வீரன்!
பந்தயக் களத்தில் புகும் துடுப்பாட்டக் காரர்,
பந்தடிக்க முடியாதபடி வெளியேறச் செய்யும்
பைந்தமிழ் இளைஞன் முத்தையா முரளிதரன்
பந்து வீச்சால் இலங்கைக்கே வெற்றிசேர்ப்பான்!

தன்னரும் திறமையினால் தந்தை நாமம்,
தரணி எங்கும் ''முத்தையா''-என முழங்கடி
உன்னத வழிசமைத்த முரளிதரன் - தங்கள்
உத்தம மைந்தனெனக் கண்டி மக்கள்
சொன்னதையும் கேட்டன்று மகிழ்ந்தார்! இன்றந்த
சொல்லுக்கு விளக்கமாய் இலங்கை அணியும்
எண்ணரிய வெற்றிகளை உலக தேசமெலாம்
ஈட்டுதற்கு முரளிதரன் ஆற்றலே சிகரமாகும்!

கண்டியிலே பிறந்தவனாம் முத்தையா முரளிதரன்!
கற்றதுவும், வளர்ந்ததுவும் கண்டியிலே தான்!
தொண்டுசெயும் கொடைவள்ளல் முத்தையா என்னும்
துயரகற்றித் துணைபுரியும் குணசீலர் பெற்ற
முரளிதரன் முயற்சியுடையோன் விளையாட்டுலகில்
மும்முரமாய் ஈடுபட்டே வெற்றி கண்டோன்!
உரமான உளமுடையோன்! வரலாறு தீட்டி
உலகெலாம் புகழ்பாட உயர்வான்! வாழ்வான்!

*(''அகிலம்'' மாத இதழில் வெளியானது)*

www.tamilarangam.net



# புனிதங்கள் பூத்திடட்டும்

எல்லையிலா விந்தைகளை - உலகில்
எங்கணும்நீ படைத்தாய்!
கல்லையும் மலைகளையும் - நீர்வளம்,
காட்டையும் நீ படைத்தாய்!

ஒளிவளர் கதிரவனைப் - புவியை
ஓட்டிடும் பேரொளியை
வளியினை, நிலவினையும் - பொதுவில்
வாழ்வோருக்கே யளித்தாய்!

இத்தனை இன்பங்களை - இன்னும்
இலங்கிடும் காட்சிகளை
அத்தனையும் பொதுவாய் - அம்மா நீ
அளித்துமே இன்பமில்லை!

பேதங்கள் காட்டித் தினம் - மக்களைப்
பிரித்துக் கெடுப்ப வரும்
வாதங்கள் செய்தெங்கும் - நல்லோரின்
வாழ்வைச் சிதைப்பவரும்

எங்கும் பெருகிவிட்டார்! - கற்றோரும்
ஏமாற்றப் பழகிவிட்டார்!
மங்கும் நீதியினை - முழுதும்
மறைத்திட முயலுகின்றார்!

எண்ணிக்கைப் பெருக்கினாலே - மக்களின்
ஏற்றத்தை, உரிமைகளை
கண்ணெதிரே பறிக்கும் - வஞ்சகக்
கயமையும் பெருகிற்றம்மா!

www.tamilarangam.net



தொல்லை இழைப்பவர்கள் - உண்மைத்
தொண்டரை மறைப்பவர்கள்,
சொல்லைக் கேட்டவுடன் - நீதியும்
சுழன்று கொடுக்குதம்மா!

சிந்தை குமைந்தழும் - எங்களின்
சீர்கெட்ட மக்களுக்கு
எந்த நாளிலம்மா - தொட்ட
இன்னலைத் தவிர்த்திடுவாய்?

மனித குலத்திற் கெல்லாம் - காணும்
மனங்களில் இனிமேலே,
புனித எண்ணங்களே! - என்றும்
பூத்திட வரமருளே!

*(மல்லிகைச்சரம்)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நடிகன்/மனிதன்

கண்டால் புகழ்ந்தும் காணாவிடில் இகழ்ந்தும்
கதை கட்டித் திரியும் பிண்டத்தை
பண்டொரு மூடன் ஆராய்ந்து பார்க்காமல்
பகர்ந்தானோ மனிதன் என்றே...?

விடியுமுன் எழுந்து விதவிதமாய் பொய்பேசி
விரும்பியதைச் சுருட்டி கொள்ள
அடிவருடித் திரிந்து அதிகாரிகளை வால்பிடித்து
அனுதினமும் நடிக்கும் கும்பலை,

மனிதர்கள் என்று முதன்முதலில் அழைத்திட்ட
மானிடன் பெரும் புளுகனே...!
இனிதாக உரையாடி – இரவுபகல் நடித்தபடி,
இடரிழைக்கும் துரோகக் கூட்டம்

நாடகமாய் வாழ்க்கையை நடத்திடும் கீழ்மையால்
நாடே இன்று நாசமாகி
வீடெங்கும் குழப்பமும், வீணான பேதமும்
விளைவித்த மோசங் கண்டோம்!

இருபதாம் நூற்றாண்டில் மனித வர்க்கத்தால்
ஏற்பட்ட கொடுமை எல்லாம்
இருபத்தொராம் நூற்றாண்டும் தொடர்ந்திடாமல்
இருக்க வேண்டு மானால்

நடிகன்-என மனிதனுக்கு நாமஞ் சூட்டி
நானிலத்தார் அழைக்க வேண்டும்!
நடிகன்-எனப் பேர்மாற்ற ஐக்கிய நாடுகள் சபை
நாளையே தீர்மானஞ் செய்யட்டுமே!

*(1999ஆம் ஆண்டு நடந்த ஊவா மாகாண சாகித்திய விழா மலரில் வெளியானது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலைவர்+கங்காணி+முதலாளி

பாடு படும் பாட்டாளிகள் கூட்டம் - பஞ்சம்
பட்டினியால் காண்பதுவோ வாட்டம்!
நாடற்றவர் ஆக்கியதே சட்டம்! - அவர்கள்
நாடுயர உழைத்தற்கோ பட்டம்!

குடியிருக்கும் லயந்தானே நரகம்! - சுற்றி
குமட்டுகின்ற சாக்கடை யால் நாற்றம்!
குடிப்பதற்கும் நீர்வசதி இல்லை! - அதை
கூறிவிட்டால் துரை கடிப்பார் பல்லை!

ஓட்டை யுள்ள தகரங்களே சுரை! - லயம்
ஒழுகுவதால் மக்கள் படும் துயரை;
கூட்டம் போட்டு முழக்குவது வழக்கம்! - ஆனால்
கூரை எல்லாம் அப்படியே இருக்கும்!

ஐந்தாம் தரம் வரையேதான் படிப்பு! - கல்வியை
அதற்குமேல் தொடர இல்லை வகுப்பு!
எந்த சங்கம் முயலும் இதைமாற்ற? - ஆனால்
எத்தனையோ சங்க முண்டு ஏமாற்ற...

தோட்டத் தலைவர் தான் கங்காணி! - சும்மா
துரை பின்னால் சுற்றுவதே அவர் பாணி!
வீட்டி லுள்ள மனைவிக்குத் தினம்பேரு - தலைவர்
வீசிடுவார் கணக்கரும் பணம்நூறு!

சந்தாப் பணம் தலைவரது பையில்! - கோயில்
சல்லியும் நிருவாகமும் அவர்கையில்!
எந்தவிதக் கணக்குகளும் இல்லை! -"விபரம்
எங்கே?" என்று கேட்போர்க்கோ தொல்லை!

வீட்டில் கடை நடத்துவதே வேலை! - தலைவர்
வியாபாரத் தால் வளைக்கின்றாரே ஆளை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாட்டுப் பட்டி கார்கூட மாச்சு! - தலைவர்
மகராசன் காரும் வாங்கி யாச்சு!

தலைவர் இன்று முதலாளி யானார்! - மக்களோ
தலை வணங்கும் ஏமாளியு மானார்!
நிலைமை இது தோட்டங்களில் இன்று - தொழிலாளர்
நிம்மதியாய் வாழ்வதற்கு வழிபிறப்பதென்று?

*(செங்கலடி, திரு.எப்.ஜி.ஜெயசிங்கம் வெளியிட்ட ''முரசம்'' பத்திரிகையில் வெளிவந்தது)*

www.tamilarangam.net



# தேயிலையே தினமும் காப்பாய்

உழைக்கவே பிறந்த தமிழர்
உதிரத்தில் வளர்ந்து நன்கு
தழைக்கும் தேயிலையே! நாட்டை
தற்காக்கும் கற்பகத் தருவே!
பிழைக்கவே பாடு படும் தமிழ்ப்
பாட்டாளி மக்கள் தினம்,
செழிக்கவேநல்ல நிலையைச்
சேர்ந்திட வழியும் செய்வாய்!

''தோட்டக் காட்டான்! ஏதும்
தெரியாத தொழிலாளி!'' - என்று
வாட்டியே வதைக்க நினைத்தோர்
வலிமையும் ஒடுங்க, சட்டம்
ஆட்டிப் படைக்கும் நிலையால்,
ஆதிக்க மடங்க, நீதியை
நாட்டினாய் தேயிலையே! உன்னை
நாவாரப் போற்றியே வாழ்வோம்!

தேசங்கள் தோறும் சென்றே
தேநீராய் தமிழர் திறனை,
வாசத்தோடு உணர்த்தும் நல்ல
வகையான தேயிலையே! உன்னைப்
பாசத்தோடு காத்து வளர்த்த
பாட்டாளித் தமிழி னத்தாரின்
நேசத்தை உழைக்கும் திறனை,
நீள்புவி அறியச் செய்தாய்!

எங்கள் முன்னோர் அன்று
எத்தனையோ ஆயிரம் பேர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்கம், புலி, கரடி, கொடிய
சீறிடும் பாம்பினுக் குணவாய்,
பங்கிடப் பட்டதாலே, நீயும்
பச்சை மலையகமா யின்று,
எங்கணும் காட்சி தாராய்,
எழில் மிகும் தேயிலையே!

சேய்களைத் தவிக்க விட்டு
செந்தமிழ்த் தாய்மார் நித்தம்
தேயிலைக் கொழுந்தே உன்னை
தேர்ந்துமே பறித்து எடுக்க
நாவிலே சுவையும் சொட்ட
நல்லதோர் பான மானாய்!
பாவினால் போற்று கின்றேன்!
பாட்டாளி இனத்தைக் காப்பாய்!

*(1957ல் தோட்ட மஞ்சரியில் வெளியானது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலத்திற்கு ஒரு மனு

காலமாம் விதியே! உனது
கருணையை நோக்கு மேழையின்,
ஓலமும் கேட்டே வாழ்வில்
இனியன ஈந்து, புதுமைக்
கோலமும் வனைந்து, வெற்றிக்
கோபுர உச்சி ஏற்றி,
ஞாலமே எனது சொல்லில்
நடந்திட ஆற்றல் தாராய்...!

பஞ்சத்தில், நோயில் பசியில்
பதறிடும் எளியோர் பக்கம்
கொஞ்சமும் உனது பார்வையைக்
காட்டிடாக் குற்றம்! துரோகம்!
வஞ்சகம் மனிதஇயல்பு! நீயும்
வளர்த்திட வேண்டாம்! நுமது
நெஞ்சினைத் திறந்து நாட்டில்
நிம்மதி நிலைக்கச் செய்வாய்!

தென்றலைப் புயலாய், அமுதத்
தேனையும் நஞ்சாய் மாற்றும்,
உன்றனில் வல்லமையா லியங்கும்,
உலகினில் இரவும் பகலும்
மாறுதல் கண்டேன்! நல்ல
மாற்றமும் தேவை! தாயாய்
ஆறுதல் அளித்தும், நீதியே
அமைந்திட அரசு செய்வாய்!

கானிலே வளர்ந்த மரங்கள்
கடலிலே நீந்திப் போக
வானிலே தவழ்நிலவி லுயிர்
வாழ்ந்திடச் செய்வாய்! எனினும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊனிலே இணைந்த உயிர்
ஓடாமல் காக்கும் ஆற்றல்
ஏனில்லை உனக்கு? வெட்கம்!
எழுந்து நீ காலமே முயல்வாய்!

மனிதனின் தீமையாலே உலகு
மடிந்திடும் அழிவு போக்கி
இனிதினை இழைக்கும் படைப்பை
இயற்றிட அறிவு மளித்து
புனிதமாம் சுவர்க்க மிந்தப்
புவினனப் புகழும் நிலையில்
மனிதர்கள் மகிழ இன்பம்
மலர்ந்திடச் செய்வாய் தாயே...!

*(தினகரன் - 1967)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவே விலை குறைந்து வா!

வானப்பெருந் திரையில் செம்பரிதியின் ஒளிக்கோடு
காணப்படா முன்னம் கண்மலரும் காமாட்சிநான்!
ஊனாய், உயிராய், உறங்குமென் செல்வங்களைத்
''தானாய் எழட்டும்!'' எனத் தள்ளிச் சற்று போர்த்திவிட்டே,
சாயத்தை மறந்துறங்கும் கணவராம் என்னருமைச்
சீலர்மேல் கையூன்றிச் சமையல் செய்ய எழுந்து நான்
கதவைத் திறப்பதனால் கண்விழித்த சேவலினம்
மெதுவாய்ச் சிறகடித்தே கூவுவதும் தினம் வழக்கம்!

வீட்டு வாசலிலே வீராப்பாய் உறங்கும் நாய் - அதைக்
கேட்டபின் குரைக்கும்! கீழ்வானம் புன்னகைக்கும்!
ஏடெடுத்துப் பள்ளிக்கூடம் ஏகுமென்றன் பிள்ளைகளை
வாடவிடாது! தடுக்கப் பகலுணவும் கட்டவேண்டும்!
தேங்காயைத் திருகிடுவேன்! மாவைப் பிசைந்திடுவேன்!
பாங்காய்த் தகரத்தில் ரொட்டி தட்டிச் சுட்டிடுவேன்
தேங்காய்ப் பூவோடு தேடிசில மிளகாய்வைத்தே
தூங்கும் குழந்தைகட்குச் சம்பலும் அரைத்திடுவேன்!

தோசை, இடியாப்பம், இட்லி, பலகாரம் செய்தே
ஆசையுள்ள பிள்ளைகளோடு அமர்ந்துண்ண நேரமிலாத்
தோட்டத் தொழிலாளி நான்! தளிரானபிள்ளைகளின்
நாட்டத்திற் கேற்றபடி நல்லுணவும் சமைத்தளிக்க
வக்கில்லாக் குடும்பங்களில் என் குடும்பம் ஒன்றாகும்!
தக்கபடி சாப்பிடவும் தக்கதுணை மாவேதான்!

நேரத்தைப் பார்த்தபடி நின்று கொண்டே தின்று விட்டு
தூரத்து மலைநோக்கித் தொழில்புரிய ஓடுவோரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலைச் சாப்பாட்டிற்கும் பத்துமணி தேநீருக்கும் - பகல்
வேலையை முடித்த பின்னே வீடுவந்து பசியாற்ற - ஒரு
நாளைக்கு மூன்றுவேளை நல்லுணவாய் அமைந்திட்ட
ஏழைகளின் நல்லமுதே! இணையில்லா மாவே!
நீயோ காலையில் ஒருவிலையாய் மாலையில் மறுவிலையாய்
ஓயாமல் விலை ஏறி உயரத்தில் அமர்ந்து கொண்டால்;
காயாதோ எங்கள்குடல்? கறி, சோறு சமைத்துத்தான்
வாயார உண்டெழத் தோட்டங்களில் நேரமுண்டோ?
பாணாக உருவெடுத்துப் பசிதீர்த்த மாவேநீ...!

ஏனோதான் ஏழைகளுக் கெட்டாத பொருளானாய்?
ஆறுரூபாய், ஏழுரூபாய், என்றே தினந்தோறும்
ஏறுமுகமாகி இன்றோ பதினான்கு ரூபாயினைக்
கடந்து விட்ட மாவானாய்? கை விட்டாய் எங்களையும்?
தொடர்ந்து விலைகொடுத்தே வாங்கியுன்னை உண்டு வரும்
தோட்டத்து மக்களது தொடர்பை நீ துண்டித்தால்
''பாட்டாளி வர்க்கத்தைப் பசித்தீயில் கருகவிட்ட''
பழிசொல்லும் உனைச்சேரும்! பலபேரும் வெறுத்திடுவார்!
நலிவடைந்த மக்களது நாளாந்த உணவாகப்
பழையபடி மாவேநீ விலையிறங்கி அருகே வா...!

மலையேறி வேலை செய்யும் தோட்டத்தார்மன உறுதி
குலையாமல் காப்பதற்கும் கும்பிட்டேன்! உனைவாங்க
''அலையவிடாதே!'' என்று காமாட்சி கெஞ்சுவதால்:
குறைந்த விலைக்கே வந்திறங்கு! கொடும்பசியை நீக்கிவிடு!
நிறைந்த வயிறோடு தினமும் நெஞ்சார உழைக்கின்ற
இனம்வாழக் கருணை செய்! இல்லாமையை விரட்டுதற்கு
மனமிரங்கி ஓடிவா மாவே...!

*(வீரகேசரி - 8.7.90)*

www.tamilarangam.net



# அடிமை இருள் ஒழிய...

தோட்டத்துப் பாட்டாளி உரிமை பெற்றுத்
 தொடர்ந்திங்கு மகிழ்வுடனே நிமிர்ந்து வாழ
நாட்டத்திற் கொண்டிங்கு நன்மை சொல்லும்
 நல்லஇதழ்கலை ஒளியே! நாளும் வாழ்க!

பாட்டாளித் தமிழனத்தை இழிவாய் எண்ணிப்
 பறைசாற்றித் திரிந்தவர்கள் படித்த பாடம்
கேட்டாலே வெட்கத்தால் தலைகுனியும் அந்தக்
 கேட்டாலே வந்ததப்பா தீமை எல்லாம்

கொட்டுகின்ற மழையிலுமே கொழுந்து கிள்ளி
 கூடைநிறைச் சுமையினையும் முதுகில் தூக்கி
சிட்டுப்போல் பறந்தோடி உழைக்கு மெங்கள்
 செந்தமிழ்த் தாய்களுக்கோ உரிமை இல்லை?

எத்தனையோ ஆண்டுகளாய் உழைத்துத் தங்கள்
 எலும்பையும் இம்மண்ணுக்கே உரமாய்த்தந்தோர்
இத்தனைவரும் பட்டசுகம் என்னவென்றால்
 இழிவுதரும் ''நாடற்றவர்'' என்ற சொல்லே

இத்தகைய கொடுமையிலும் கொடுமை வாழ்வை
 எந்தப் பிறமக்களுமே கண்டதுண்டா?
எத்திக்கும் இச்செய்தி கலைஒளியால் வீசி
 ஏற்பட்ட அடிமைஇருள் ஒழிப்பாய் நீயே!

*(பதுளையிலிருந்து கலைஒளி முத்தையாபிள்ளை அவர்கள் வெளியிட்ட ''கலைஒளி'' மாதஇதழுக்கு அனுப்பி கலைஒளியில் பிரசுரமான வாழ்த்துப்பா)*

www.tamilarangam.net



# இழிவினை நிறுத்து!

சரித்திரம் புகழ்ந்து பாடும்
சமுதாயப் பணிகள் செய்ய
உரித்தான உறவில் இளையோர்
ஓரணியில் திரண்டு நின்றால்
தரித்திரம் தளர்ச்சி கண்டு
தடுமாறும் மலையக மக்கள்
சிரித்திடும் நல்வாழ்வு கண்டு
செல்வங்கள் பெற்று உயர்வார்!

வயிற்றுப் பசியைப் போக்க
வருமானம் போதாக் குறைவால்;
தயக்கமும் தாழ்மையும் கொண்ட
தனிப்பட்ட தோட்ட மக்கள்;
பயத்தோடு ஏங்கித் தவிக்கும்
பாமர மக்களாக பழைய
லயத்தினுள் முடங்கிக் கிடக்கும்
பரிதாபம் மாறிட வேண்டும்!

பிஞ்சு வயதினில் தோட்டப்
பிள்ளைகளை வீடுகளில் கடைகளில்
கஞ்சிக்கு வேலைக் கமர்த்தி
கையேந்தும் ஏழ்மையை நீக்கப்
பயன்படும் திட்டந் தீட்டிப்
பாடுபட அனைவரும் துணிந்து
முயன்றிட்டால் மலையக மெங்கும்
முகிழ்த்திடும் புதிய மலர்ச்சி!

பாவையரை வெளிநாட்டுக் கனுப்பி
பணங்குவிக்கும் பேராசை தூண்ட;
சேவைக்காலப் பணத்தை முன்னமே
செப்படி வித்தையால் பெற்று;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவைக்கு மாறாகத் தரகருக்கு
    திருகு தாளமாகக் கொடுத்தே
தேவியரை வெளிநாட்டுக் கனுப்ப;
    திரும்பியவர் "சும்மா" வருவார்!

நிறைவேறா ஆசை தாக்கி
    நெஞ்சமுங் கனன்று குமைய
குறைகளைப் புரியும் நிலைக்கு
    குலமாதர் ஆளாகிக் குடும்பத்தை
கறை படிந்த சித்திரமாக்கி
    கண்ணீர் சிந்தி நிற்கும்
முறைகேட்டை மாற்றிடவே
    முற்படல் வாலிபர் பொறுப்பாம்!

போலிகளை நம்பித் தேடிய
    பணத்தையும் ஈந்து இழந்து
கேலிக்குப் பொருளாக மாதர்
    கேவலப் படுவதை நிறுத்த
வாலிபர்கள் புதிய நோக்கில்
    வகையாகச் செயற்பட்டா லேய்ப்போரின்
வேலிகளைத் தகர்த்து தோட்டங்களில்
    விடிவினை விரைவில் காணலாம்!

*(தினகரன் - மலையகப் பகுதியில் வெளியானது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துயர் ஓவியம்

வாரத்திலே ஆறு நாள்கள் வேலை செய்தும் தோட்டமக்கள்
வறுமையிலே வாடியதைக் கண்டோம்! – இன்றோ
வாரத்திலே நாலுநாள்கள் வேலை மட்டும் கொடுத்தவரை
வாட வைத்து சாகடித்தல் நன்றோ?

மாவுவிலை, அரிசிவிலை மலைபோலே ஏறியதால்
மலையகத்தார் தவிக்கின்ற போதும்; – இங்கு
யாவருமே நல்லபடி வாழ்வதாகத் துரைத்தனத்தார்
நாடகங்கள் ஆடுவதும் சரியோ?

தேங்காய், சீனி, பலசெலவும் தானியமும் வாங்குதற்கு
தேடுகின்ற பணமும் போதாமல் – தினம்
ஏங்குகின்ற தோட்ட மக்கள் ஈடுவைத்தே நகையனைத்தும்;
ஏழைகளாய் மாற விடலாமோ?

கூடையினை சுமந்துநின்று கொழுந்தெடுத்து மாலைவரை
குடும்பங்களைக் காக்கும் தாய்மார்கள் – தம்
பாடம்பயில் பிள்ளைகளின் பசியாற்ற முடியாமல்
பதறிநிற்கும் காட்சியினைப் பாரீர்.

போராடி வேலைகேட்கும் போக்கதனால் தொழிலாளர்
பொறுமையினை விட்டுமே எழுந்தார்! – நிர்வாகப்
பேராளர் தம்போக்கை மாற்றி நடக்காவிடில்
பெருங்கிளர்ச்சி தோட்டங்களில் தோன்றும்!

*- குறிஞ்சிப் பரல்கள் வீரகேசரி (24.10.93)*

www.tamilarangam.net



# நடிகரோ நண்பர்?

கண்டும் காணாமல் கள்ளர்போல் நடந்திடும்
கனிவற்ற நண்பர்காள் கேளீர்!
உண்டு களித்தன்று உறவாடித் திரிந்ததை
ஒருகண மேனும் நினைத்தது முண்டோ?
பணமுள்ள வேளையில் என்வீட்டைச் சுற்றியே
பழந்தின்னும் வெளவாலாய் அலைந்தீர்!
குணமில்லாக் கும்பலாய் குழிதோண்டும் நீங்களும்
கோயிலுக்குச் செல்வதும் ஏனோ?

"கொடுக்கத் தயங்காத கொடைமனம் படைத்திட்ட
குணசீலர்!" என்றுமே என்னை
கெடுக்கவே புகழ்ந்ததை ஆராய்ந்து பார்க்காமல்
கிடைத்ததை தினந்தோறும் கொடுத்தேன்!
தடுக்கவே வந்திட்ட மனைவியை மீறிநான்
தர்மங்கள் செய்திட்டேன், அதனால்
இடுக்கண்ணில் வீழ்ந்திட்ட எனைத்திரும்பி பாராத
எவரைநான் நண்பரென்று சொல்வேன்?

நெருங்கிய நண்பர்க்குத் தீமைகள் நேர்வதை
நெஞ்சாரக் கண்ட பின்னே...
சுருங்கிய மனத்தினர் செய்திடும் சூழ்ச்சியால்
சுமைதூக்கும் மனிதனாய் துடித்தேன்!
பெருங்குறை பேசியே "பரிசுத்தன் தான்!" என்று,
பேர்பெற முயன்றோரின் சதியால்;
நொறுங்கிய கண்ணாடியாய் சிதறிஎன் நெஞ்சமும்
நோவதை யார்தான் அறிவார்?

நன்றியை உணராமல் நட்பையும் நினைக்காமல்
நம்பிக்கைத் துரோகமுஞ் செய்தே,
ஒன்றன்மேல் ஒன்றாக ஊறுகள் செய்வோர்க்கு
ஒத்தாசை உதவிகள் செய்வார்!

www.tamilarangam.net



கொன்றிடும் சதியினை நண்பர்க்குத் தீட்டினும்
கூறாமல் ஒதுங்கியே நிற்கும்,
ஒன்றிடா மனத்தாரின் நடிப்பினை நட்பென்றும்,
உறவென்றும் நம்பியே கெட்டேன்!

''குற்றவாளி'' என்று நல்லோரைப் பற்றியே
குறைபடத் தீர்ப்பு அளித்தே
''சுற்றவாளி தாம்'' என்று ஊரெல்லாம் சுற்றியே
சுயநன்மைக்குத் தன்னையே விற்கும்,
குற்றங்கள் அமைத்திட்ட கோபுரத்தில் குந்தியே
கொள்ளையால் பிழைப்பதை இன்று
முற்றாக மறைத்தலும், ஊரே தெரிந்ததை
முக்காடு போட்டோ மறைப்பீர்...?

*(கண்டியிலிருந்து வெளியான ''செய்தி''யில் பிரசுரமானது)*

www.tamilarangam.net



# கன்னம் சிவந்த கதை

வீட்டுக்குப் பக்கத்திலே - மலையூறி
வீழ்ந்திடும் அருவியின்பக்கம்;
பாட்டுப் பாடிக்கொண்டே - மாலையில்
பாங்காக நானுஞ்செல்வேன்!

தாமரைப்பூ முகத்தாள் - காதல்
ததும்பிடும் விழியழகி;
மாம்பழக் கன்னத்தினாள் - அன்பு
மலர்ந்திடப் பார்த்துநிற்பாள்!

எந்தன் குரலிசையில் - மனதில்
எழும்பிடும் காதலினை;
சிந்தை நிறைந்தவட்கு - கன்னம்
சிவந்திட உரைத்துவந்தேன்!

பொட்டு மெனுமழகி - இன்பம்
பொங்கிடும் புன்னகையால்;
கட்டித் தழுவி நின்றாள்! - எனது
கரங்களைப் பற்றவில்லை!

படுத்தாலும் அவள்நினைவு - எங்கு
பார்த்தாலும் அவளுருவம்
தொடுத்திட்ட பூச்சரத்தை - காதல்
தோகைக்குச் சூடல்என்றோ?

*-கலைமன்றம் (1955)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காதல் நினைவு

மாதுளைப் பழத்தின் வண்ணம்
மங்கையின் சிவப்புக் கன்னம்!
மாதுளை மலரின் சிவப்பு
மங்கையின் மதுவூறு மிதழ்கள்!
மாதுளை விதைகள் வரிசை
மங்கையின் பற்கள்! அந்த
மாதுளைப் பழத்தின் வடிவம்
மங்கையின் தனங்கள் காட்டும்!

மாதவள் பெயரும் பொட்டு!
மான்விழி மீனாய் வெட்டும்!
சாதுவும் மயங்கிப் போவான்
சதிராடு மழகால் எனக்கோ
வாதையே யளித்து வந்தாள்!
வனிதையின் நினைப்பா லேக்கம்;
ஏதையும் மறந்தேன்! காதல்
எண்ணத்தில் மூழ்கித் துடித்தேன்?
(ஒரு நாள்... ...!)

தேயிலை மலையி னூடேத்
திடுமென வீழு மருவியிற்;
சேயுரை மொழியின் சுவையைச்
செப்பிடும் பொட்டும் தனியே;
நேசமாய்ப் பார்த்தாள்! தூர-
நின்றவ னோடிக் காதற்
பாசமா யவள் கரத்தைப்
பற்றினேன்; அறைந்தாள் பொட்டு!

கெஞ்சி மன்றாடி; உண்மைக்
காதலைக் கேட்பா யென்று;
அஞ்சியே உரைத்தேன்! அவளோ-
"அதுநடக் காது" என்றென்
நெஞ்சினைச் சிதைத்தாள்! காதல்
நினைப்பையுங் குலைத்தாள்! எனினும்;
வஞ்சியின் நினைவோ இன்னும்
வற்றாமல் என்னை வாட்டும்!

*-தேனமுதம் ஆண்டுமலர் (1962)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மயக்கம்

கண்மூடிப் படுத்திருந்தேன்; உறக்க மில்லை!
கவலைகளும், பழம்நினைவு முறங்க வில்லை,
விண்மூடிக் கிடந்தஇருள் துயில் கிழித்து
வெள்ளைமழை கொட்டிவரும் நிலவைப் போலப்;
பெண்ணோடி வந்தெனது கரம்பிடிப் பாள்!
பேசாத கதைகள்பலப் பேசியணைப் பாள்!
மண்மூடி மறைவுற்ற இன்பக்கோ ட்டை
மறுபடியும் முன்னெழும்பும்; இன்ப வாழ்க்கை!

பூவினிலும் மென்மை யவள்மேனி! ஆமாம்;
பூக்களிலும் புதுமைப்பூ ஆவாள் மங்கைப்(!)
பாவினிலும் சுவை பயக்கு மன்பாள்! அதனால்!
பாக்களிலும் புதுப் பாட லாவாள்! எங்கும்
மேவுகின்ற தென்றலிலும் மென்மை இன்பம்;
மிகவாகத் தருமவளே புதுமைத் தென்றல்!
ஆவியிலும், உணர்விலுங் கலந்த கன்னி
அழகோடு உறவாடிக் காண்பேன் இன்பம்!

மனச்சுமையும் மறைந்துவிடும்! கனவின் மோக
மயக்க மதும் கூடிவிடும்! இன்ப ஆட்டத்
தனிச் சுமையில் மூழ்கி மனம் அமைதி காணும்!
தனிமைத் துயர் மாறிவிடும்; தவிப்பும் நீங்கும்!
கனிச் சுவையில் மிகச் சுவையாள் கரத்தைப் பற்றிக்;
களிவெறியின் சுவைமாந்திப் பறப்பேன் வானில்!
தினந்தினமு மெனதுளம் இரவில் இது போலும்
திண்டாடி அலைவதுவும் மயக்கம் தானே!

*-தமிழின்பம் (1961)*

www.tamilarangam.net



# சொல்லில் அடங்காத சுகம்

குன்றுகளில் ஊறி வரும் - பளிங்கு
குளிர் புனல் நீரோடையில்
நின்றி ருப்பேன் நிதமும் - அழகு
நிலா முகத்தைக் காண...!

வண்டு போல் விழியாளை - இன்பம்
வார்த்திடும் சுவை மொழியை
கண்டு களித்து கதைக்க - நானும்
காலத்தை மறந்து நின்றேன்!

பொட்டு மெனும் மங்கையை - இன்பம்
பொழியும் ரதியின் தங்கையை
கட்டி யணைத்து மகிழ - தினமும்
கடுந்தவம் புரிந்து வந்தேன்!

கொய்யாப் பழம் ஒன்றை - பொட்டு
குழைந்து நீட்டும் போது
கையோடு மெய் சேர்த்தே - கன்னியின்
கனிஇதழ் சுவைக்க லானேன்!

மெல்லியலாள் மேனி பட்டே - நான்
மெய் மறந்து பெற்ற சுகத்தை
சொல்லவே முடிய வில்லை! - அடடா!
சொர்க்கமும் அது தானோ...?

தேயிலைக் கொழுந் தெடுக்கும் - அந்த
தேவியின் அன்பு உறவில்
தோய விடாமல் தொடர்ந்தே - அவளை
தொலைதூரம் அனுப்பி விட்டார்!

www.tamilarangam.net



# ஜீவநாளங்கள்

கொழுந்து கிள்ளும் கோதையர்க்கே மாலை சூடுங்கள்! – அவர்கள்
கோடி செல்வம் தேடித்தரும் திறனைப் பாடுங்கள்
விழுந்தெழுந்து தளர்ந்திடாமல் மலைச்சரிவிலே – கொழுந்தை
விரைந்தெடுக்கும் விரலசைவின் அழகைக் கூறுங்கள்!

தேடிவந்து போட்டிப்போட்டு விலையுயர்த்தியே – பல
தேசத்தாரும் விரும்பிக்கேட்டு வாங்கும் தேயிலை;
நாடில்லாத நங்கையின் நல்லுழைப்புத் தான்! – இந்த
நாட்டை நன்கு காப்பதுவே அவர்கரங்கள் தான்...!

தேயிலை மலைமுழுதும் வளர்ந்த புல்லுக்குள் – ஆளைத்
தீண்டிக் கொல்லும் பாம்புக்கெல்லாம் அஞ்சிடாமலே
தாய்க்குலத்தார் புகுந்து நித்தம் தளிர்கொய்வதால் – சுவை
தரம்மிகுந்த தேயிலையும் கப்பல் ஏறுதாம்...!

காலைவெயில் பரவுகையில் தேயிலையைத் தொட்டால் – பகற்
கட்டுச்சோற்றை அவிழ்க்கும் மட்டும் அமரவே மாட்டார்!
மாலைவெயில் மேனிதொட மனை திரும்பிடும் – தோட்ட
மாதர்களின் முகமலர்ச்சி மாறுவதே இல்லை...!

*- அந்தனி ஜீவாவின் 'கொழுந்து' முதல் இதழில் (1987) வெளிவந்தது)*

www.tamilarangam.net



# வனிதை நீ நடிகை தானோ...?

பள்ளியில் பயிலும் போதே
　　பழகினோம் நாமும் ஒன்றாய்!
துள்ளிடும் காதல் உணர்வை
　　தொடர்ந்து வளர்த்து உறவாய்
உள்ளத்தில் நிறைந்தாய்! என்னுள்
　　உதித்திடும் உணர்வால் கிளர்ந்து
அள்ளியு மணைத்தேன்! அன்று
　　அறியாத சொர்க்கம் தந்தாய்!

துங்ஹிந்த நீர்வீழ்ச்சி சென்று,
　　தோளிலே சாய்ந்து நின்று,
அங்கத்தில் சூடேற்றி புதிய
　　ஆனந்த சுகமும் அளித்தாய்!
மங்கையே! உண்மைவிழிகள்
　　மனதிலே பதித்த கனவில்
சங்கமம் ஆகியானும் தினம்
　　சஞ்சரித்தேன் இன்ப வானில்!

கண்டவர் நம்மை ஒன்றாய்
　　கதைபல கட்டிய வேளை;
பண்டைய இலக்கியம் காட்டும்
　　பண்பான காதலி போன்றே
என்றும் உங்களோடு வாழ்வேன்!
　　எவர் தடுத்தாலும் பிரியேன்!
ஒன்றாக இல்லறம் காண்போம்
　　உயிர்மேல் ஆணை என்றாய்!

அன்பே! காதலியே! நீயும்
　　அதனையும் மறந்து என்னை
துன்பக் கனலில் தள்ளி,
　　தொடர்ந்துமேன் கருக விட்டாய்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாதியில் தாழ்ந்தவன் எனக்கு
சம்சாரமாக நீயும் வந்தால்,
பேதமும் பார்க்கும் பெற்றோர்,
பெருமிடர் புரிவார் என்றேன்.

அஞ்சாதீர்! நானே உங்கள்
அடிதொடரும் மனைவி! என்று,
நெஞ்சிலே சாய்ந்து தழுவி,
நின்பிறந்த நாளில் சொல்லி,
கெஞ்சினாய்! கொஞ்சினாய்! இன்றோ
குலபேதம் காட்டி என்னை
வஞ்சித்து நஞ்சாய் பிரிந்தாய்!
வனிதைநீ நடிகை தானோ?

*(பாசறையில் குறளன்பன் வெளியிட்ட குறிஞ்சி (1961ம் ஆண்டு) இதழில் வெளியாகியது)*

www.tamilarangam.net



# இன்பச் சுவடி

வண்ணக்குடை பிடித்து - புன்னகை
வாயிதழில் விரித்து - என்றன்
கண்ணுக்குள் விளையாடும் - காதற்
கன்னியும் வருகின்றாள்!

வேலை முடிந்ததென - கதிரோன்
விதவிதக் கோலமிட - மலர்ச்
சோலைஎன் மனையருகே - இன்பச்
சுவடியும் வருகின்றாள்!

தெய்வ தரிசனம்போல் - அழகுத்
தேவி தரிசனத்தாள் - இன்ப
ஒய்யார நடை பயின்றே - உயிர்
ஓவியம் வருகின்றாள்!

காலைமலர்ச்சி யவள் - எனது
கனவின் வடிவமவள்! - புதுக்
கோலம் வனைந்த மகள் - என்னைக்
கொஞ்சிட வருகின்றாள்!

விடாத வேட்கையினால் - மூண்ட
வேதனையைத் தீர்க்க - எவரும்
தொடாத வாலிபத்தின் - சுவையில்
தோய்ந்திட வருகின்றாள்!

*- (கொழும்பிலிருந்து வெளியான கதம்பம் இதழில் பிரசுரமானது)*

www.tamilarangam.net



# மோகம்

நெஞ்சுக்குள்ளே நெஞ்சாக நின்றாடும் தாரகையே
நின்தனக்கே என்மனத்தைத் தந்தேன்! – உன்னை
நினைத்தபடி அணைத்திடவே வந்தேன்! – நீயோ
கொஞ்சங்கூடப் பார்த்திடாமல் குறுநகையும் புரிந்திடாமல்,
கோபமுடன் கதவடைத்து சென்றாய்! – காதல்
கொழுந்தினையும் ஏனொடித்துக் கொன்றாய்?

ஆடுகின்ற அரங்கமெல்லாம் ஆனந்தமாய் நான்பாட
ஆசிரியை போட்டிடுவார் கைத் தாளம்! – உன்
அபிநயங்கள் கொட்டியதே காதல்மேளம்! – இன்று
ஓடுகின்ற மானானாய்; ஒளிகின்ற மயிலானாய்;
உறவு கொண்டு பழகியது மேனோ? – காதல்
உத்தமிக்கும் இது அழகு தானோ?

நாடறியத் தம்பதியாய் நாமிருவர் கரம்பிடிக்கும்
நாளதனை நினைத்தபடி பறந்தேன்! – என்னை
நடுத்தெருவில் நிறுத்தியதால் நொந்தேன்! – மக்கள்
ஏடறியும் காவியமாய் எம்கதையை பாடுதற்கே
எண்ணியதால் கண்டதுவோ ஏக்கம்! – இனி
என்றனக்கும் ஏதுஅன்பே தூக்கம்?

அரங்கேறா ஆரணங்காய் ஆடலை நீ பயிலுகையில்,
அன்போடு வளர்த்துவந்த உறவு! – இது
அறுந்துவிட்டால் பூண்டிடுவேன் துறவு! – கலை
வரங்கொடுத்த கவர்ச்சியினால் வாலிபரை ஏமாற்றுகின்ற
வனிதை உன்நாடகத்தை கேட்டே – மனம்
வருந்தி தினம்பாடுகிறேன் துயர்ப்பாட்டே!

*(பதுளையிலிருந்து வெளியான ''அல்லி'' பத்திரிகையில் வெளியானது (1965))*

www.tamilarangam.net



# தோல்வி முடிவல்ல!

செக்கச் சிவந்த உடல் - அழகு
சிரிக்கின்ற பேரிளமை
மிக்க உடல் வலிமை - நிறைந்த
மெய்யழகன் ஒருவன்!
தக்கவழி நடந்தான் - தினமும்
தளராமலே உழைத்தான்!
மக்களும் பெற்றோரும் - கண்டு
மனங்குளிர வளர்ந்தான்

காலையும் விடியும் முன்னம் - முத்து
கண் விழித் தெழுந்தே;
வேலைபலவும் செய்தே - பசுவை
விருப்புடனே காப்பான்!
பாலைக் கரந்து வந்தே - அன்னையிடம்
பாசமுடன் கொடுத்து;
வேலைக் களம் நோக்கி - உண்டு
விரைந்தோடி செல்வான் காளை...!

அடக்கம், அன்புடைமை - பணிவு
அறிவின் நல்லவழி...
நடக்கும் இளையமகன் - ஒழுக்கம்
நன்கும் ஓம்பும் தம்பி!
கெடுக்கும் மனமுடையோர் - முத்துவைக்
கேட்டாலே பதுங்கிடுவார்!
அடிக்கும் கொள்ளைக் கூட்டம் - அவனை
அண்டிட அஞ்சிச்சாகும்!

இக்குணங் கொண்ட மைந்தன் - காதல்
இன்பத்தில் மூழ்கிவிட்டான்!
பக்கத்து லயத்திலுள்ள - கன்னிப்
பைங்கிளி பூங்காவனம்
சொக்கி மயங்கி விட்டாள் - அவனது
சொத்தாக சுவை விரித்தாள்

www.tamilarangam.net



திக்குத்திசை நின்று - தோட்டமே
    திரண்டிதைப் பேசிடவே...

கன்னிப் பூங்காவனத்தை - வேறு
    காளை ஒரு வனிடம்
என்ன நினைத்தாரோ? - பெற்றோரும்
    இழுத்துக் கொடுத்துவிட்டார்!
''என்னுயிர்(க்) காதலியை - மற்றவன்
    ஏற்றிடப் பொறுப்பதுவோ?
என்னஅவ மானம்...?'' - என்றே
    ஏங்கித் துடித்தான் முத்து!

ஆழ்கடல் நடுவில் - வீழ்ந்த
    அனாதை மனிதனைப் போல்...
''வாழ்வே முடிந்த''தென்றும் - இன்பமே
    வரண்டு விட்ட ''தென்றும்
தாழாதமனத் துயரில் - தவித்து(த்)
    தணல் மலரான முத்து;
கீழான முடிவு செய்தான்! - ''தற்கொலைக்
    கிடங்கினுள் குதிப்ப''தென்றே!

அந்திக் கருக்கல் நேரம் - வீட்டு(க்கு)
    அருகுள்ள மரத்தினையே-
சந்தித்த தென்விழிகள்...முத்துஅங்கே
    சாக முயலக் கண்டேன்...!
சிந்தனை, செயல் மறந்தே - ஓடோடி
    ''செய்தது என்ன?'' வென்றே...
முந்திக் கயிறு பறித்தேன் - அவனை
    மன்றாடி அழைத்து வந்தேன்!

முத்து மொழிந்த கதை - நானும்
    முன்னம் மொழிந்த காட்சி!
இத்தரத்தில் காதல் - உலகம்
    இளமையைக் கொல்லுதையோ...!
மெத்த படித்தோரும்; - செல்வ
    மேன்மை உடையோரும்

www.tamilarangam.net



பத்தினித் தூய்மை கெட்டுக் - காதலின்
பண்பறத்தை(ச்) சிதைத்தார்!

அறத்தில் இல்லறமே - இந்த
அவனியில் சிறந்த அறம்!
திறத்தில் திருவுருவில் - கனிந்து
திகழ்கின்ற இளைஞர்களே
வெறுத்தல் விடுத்தெழுவீர்! - பெற்றோர்
விரும்பும்வழி ஓர்துணையை
மணத்தல் நலமாகும்! - உங்கள்
வாழ்வும் பலமாகும்!

காதல் கடவுளருள் - அதைக்
கண்டித்தே மறுக்கவில்லை!
சாதலைச் சஞ்சலத்தை - நெஞ்சத்தில்
சாற்றுவ தேன் முடிவில்?
காதலில் தோல்வி கண்டே - மடிந்தோர்
கணக்கும் பலகோடி...
வாதம் புரிவோரே...! - இதற்கும்
பதிலுண்டோ சொல்லிடுவீர்!

*-''தீ'' இதழில் வெளியானது*

www.tamilarangam.net



# லயத்தானை மணப்பாயா...?

மெல்லிய பூந்தென்றலாய்
மென்மலர் மேனியளாய்
மிளிர்ந்து எந்தன்,

உள்ளத்தில் நிறைவாகி,
ஊறிவரும் உணர்வாகி,
உயிர் ஓவியமாய்...

புன்னகைத்து உரையாடி
புத்தின்பம் என்னுள்ளே
பூக்க வைத்த...

பெண்ணழகே! நீயுமேன்...?
''பேரன்பு!, காதல்!'' என்று
பிதற்று கின்றாய்...?

'தோட்டக்காட்டான்' என்தந்தை!
'தொழிலாளி' என்தாய்!
தொடர்ந்து நீயும்;

காட்டுகின்ற அன்புறவு,
காதலெல்லாம் மெய்யாகக்
கரம் பிடிக்க...

கூலிக்கார மாமனோடும்,
கொழுந்தெடுக்கும் மாமியோடும்,
குடும்ப மாக...

தாலிகட்டி லயத்தில்வாழ
தையலே நீசம்மதமா?
தருவாய் பதில் - ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீடுகட்ட நிலமுமில்லை!
வீடுவாங்கப் பணமுமில்லை!
வேலை செய்து,

தேடுகின்ற பணமுந்தான்
தேவைக்கே போதவில்லை!
தெரிந்த பின்னே...

நாடுவாயா என்துணையை?
நாலுபேர் முன்னேநாம்...
லயத்தா ரென்றே...

பாடுவாயா புரட்சிக்கீதம்?
பதில்வேண்டும் இதற்கென்றே
மடல் கொடுத்தேன்!

புத்தகத்தில் பதிலைவைத்தே
பூவையவள் நீட்டியதும்
புரட்டிப் பார்த்தேன்!

“அத்தான்! லயத்தில்வாழ
சம்மதமே!” - என்றில்லை!
அதனால் எந்தன்,

சித்தமும் கலங்கியது!
சிந்தையும் குமுறியது!
செயல் மறந்தேன்!

பித்துப் பிடித்தவனாய்,
பெருங்கனலில் வீழ்ந்தவனாய்,
பிரிய லானேன்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாதி என்னும் சதி

பரமசிவம் என்கின்ற பேரைக் கொண்ட
பண்பாளன்! நல்லபடி பயின்ற காளை!
பரம்பொருளாம் திருவருளின் கருணை போலும்
பனைமரம்போல் வளர்ந்திருந்தான் பவளக் குன்றாய்!
வரந்தெடித் திருக்கோயில்கள் ஊர்கள் முற்றும்
வலம் வருவார் நிலையினிலே பரமசிவம்
உரந்தேக்கி உள்ளத்தில் தோட்டந் தோறும்
ஓயாமல் அலைந்திட்டான் வேலைதேடி...!

பெற்றவர்கள் கையிருப்புஞ் சந்தைச் சேறாய்
போவதிலும், வருவதிலும் கரைந்து போகப்,
பெற்றவளின் பொன்நகையை ஒன்று ஒன்றாய்
பரமசிவம் தொழில்பெறவே ஈடுவைத்துப்
பெற்றானே ஒருவேலை தோட்டத்திலே, அதுதான்
பெண்களையே மேய்க்கின்ற ''கணக்கப்பிள்ளை''!
உற்றாரோ தோட்டத்தில் யாருமில்லை! குலத்தில்
உயர்ந்தவனே''! என்றதினால் கொடுத்தார் வேலை

பெண்களுடன் தொழிற் புரியும் இளைஞனாலே
பெரியதுரை கட்டளையால் மணமும் பூண்டான்
கண்களுடன் இமைமூடும் காலம் போகக்
கடமையிலே கவனமெல்லாம் பதிய வைத்து
எண்களிலே பெருந்தொகையாம் சம்பளத்தை
எடுக்கின்ற பெரியவராம் கணக்கப் பிள்ளைக்கு
கண்களும், நெஞ்சமுமே புகையும் வண்ணம்
கணக்கப்பிள்ளை பரமசிவம் புகழைப் பெற்றான்

பெரியதுரை, சின்னத்துரை பெரிதுமு வந்து
பேச்செல்லாம் பரமசிவம் செயல் வியந்தார்
பெரியவராம் கணக்கப்பிள்ளை மனத்துள் இந்தப்
பேச்செல்லாம் குண்டுகளாய்ப் பாய்ந்து நின்று

www.tamilarangam.net



பெரியகிலி கொளச்செயும் நிலையைப் போக்கப்,
பெரும்பாடு பட்டவராய் முயன்று நின்று
உரியவழி பார்த்து நிதம் சதி புரிந்து
உள்ளுக்குள் குழி தோண்ட அலையும் போதே...

எரிகனலில் பட்டமரம் சாய்ந்தாற் போலும்
எப்படியோ பரமசிவம் தாயு மங்கே...
நரிமனத்தார் பெருங்கணக்கார் பூனைக்கண்ணில்
நடுவழியில் அகப்பட்டார்! நாச நாக்கர்
குறி நோக்கிக் கதை கொடுத்து ஊரைக்கேட்டும்
கொடுத்தவழி, எடுத்தவழி சுற்றங் கேட்டும்
அறியாமல் அறிந்திட்டார் அவர்கள் சாதி
அன்பினிப்புச் சொற்களினால் வெற்றி கொண்டார்

சாதியிலே தாழ்ந்தவனே பரமசிவம்! இந்தச்
சங்கதியைத் தோட்டத்தார் தெரியும் வண்ணம்
ஓதிவிட்டார்! ஓயாமற் கச்சைகட்டி
ஓர்பிரிவைத் தன்படையாய்த் தூண்டி விட்டு
மோதவிட்டார்! பரமசிவம் முகமும் தாழ
மொழிகளினால் சூடிட்டார் குலத்தைக் காட்டி,
வேதனையும் மானமாம் உணர்வுந் துள்ளும்
வெந்தழலில் இளந்தளிராய்த் துடித்தான் பிள்ளை!

ஆட்களுடன் பொல்லாப்பு, பூசல் இதனால்
ஆங்காங்கே தலைதூக்கும் காலம் பார்த்து
வேட்டு வைத்தார் மேலாளர் இடத்திற் சென்று
வேலைபெற சொன்ன பொய்யை வெளிச்சமாகக்,
காட்டிட்டார், கணக்கப்பிள்ளை! பெரியதுரை
கண்சிவக்க, முகஞ்சிவக்கக் கனன்று கூலி
ஓட்டிட்டார் ஓராளை! பரமசிவத்தை
உடனே தன் அலுவலகம் வரவுஞ்செய்தார்

வந்தவனை வாய்வலிக்கத் திட்டி விட்டே
வருத்தமுடன் அவன்திறனைப் புகழ்ந்து முற்றும்
நொந்தவர்போல் வெளியேற்றப் பத்திரத்தை
நோகாமல் அவன் கையில் நீட்டிவிட்டு
"எந்தஒரு தோட்டத்திலுந் தொழிலிருப்பின்
எனக்கெழுதும், உடனடியாய்ப் பிடித்துத்தாரேன்!
வந்தவழி சென்றுவிடு ஓர் மாதத்துள்! இந்த
வாசல் வந்து மிதியாதே! போ! போ!" என்றார்

www.tamilarangam.net



பேச்சற்று நெடும்மரம்போல் நடந்தான்! மீண்டும்
பேசுவதால் ஆவதென்ன? தொழிலே போச்சு!
மூச்சற்று வீழ்ந்திருப்பான்! அவனை நம்பி
முழுவடிவுக் களஞ்சியமாம் மங்கை நல்லாள்
தாயாகும் தவப்பேற்றைத்தாங்கி வீட்டில்
தவழ்கின்ற குழவிபோல் நடத்தல் தோன்றி
சாயாத மனநிலையைச் சாயச் செய்யும்
சஞ்சலத்தை எதிர்நோக்கி நடந்தான் காளை!

வள்ளுவனைப், புத்தனை, ஏசுவை, நபியை
வையத்தில் கொண்டாடி வணங்கிப் புகழ்ந்தும்
விள்ளுவதை விட்டோமோ? இல்லை! விளங்கும்
வேற்றுமையைத் தவிர்த்தோமோ? அதுவுமில்லை!
பிறப்பொக்கும் மனிதகுலம் என்னும் விதியைப்
பேணியிங்கு செயலாற்றின் தாழ்த்தப்பட்டோர்
சிறப்பற்றுச் சிந்தை நொந்து திண்டாடி நிற்கும்
சீர்குலைவைச் சாதியாஞ் சதியுஞ் செய்மோ?

*(ஈழத்தென்றல் - 1961)*

www.tamilarangam.net



# ஆயிரம் துணையாமோ?

முத்தன் என்னும் மலையிளைஞன்!
    மூவிரு மாதங்கள் மணமுடித்து!
நித்தம் தளரா உழைப்பாளி!'
    நேர்மை நாடும் குணசாலி!
சித்தம், சிந்தை ஒருங்கீர்க்கும்
    சிறந்த அழகி அவன் துணைவி!
பத்தினிப் பெண்ணும் தாயாகும்
    பாங்கை நினைந்து மகிழ்ந்திருந்தான்

கொத்து மலராய், முழுநிலவாய்
    குழந்தை பிறக்கும் எண்ணத்தில்
முத்துப் பல்லாள் மனைவியின்பால்
    மோக மன்பில் திளைத்திருந்தான்
தத்தித் தவழும் மழலைக்குத்
    தந்தை யாகும் புதுக் கனவில்
மெத்தத் திளைத்த முத்தனுந்தான்;
    மேதினி மறந்து நடக்கையிலே....

விறகு வெட்டும் வேலைக்கு
    விட்டார் அவனைக் கணக்கப்பிள்ளை
முறைப்போ மறுப்போ காட்டாமல்
    முகத்தில் சுளிப்பும் விரிக்காமல்
கோடரி வாங்கி நடைபோட்டுக்
    கூறிய மலைக்கு முத்தன் சென்று
மாடது போலே மலைக்காமல்
    மரத்தினை வெட்டத் தொடங்கினனே!

பக்கம் நின்ற ஓர் மரத்தைப்
    பாய்ந்து பயந்து மலையப்பன்...
மிக்க விரைவாய் வெட்டிடவே
    மின்னல் வெட்டாய் அம்மரமும்
திக்கு மாறியே முத்தன் மேல்
    திடீரென்று வீழ்ந்தது காண்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பக்கம் நின்ற மலையப்பன்...
பதறிக் கதறி ஓலமிட்டான்...!

மலையில் உழைத்த தொழிலாளர்
மழைபோ லோடிக் கூடியங்கே...
நிலையைக் கண்டு துடிதுடித்தார்!
நெஞ்சில் வலிமை ஏற்றிக்கொண்டு
மரத்தின் அடியில் நசுங்கியுள்ள
மறவன் முத்தன் மேனியதை
உரத்தைக் கொடுத்து எடுத்தவர்கள்
உடனே மருந்தகம் ஓடினரே!

உடலில் சற்று உயிர்மூச்சு
உள்ளது கண்ட மருத்துவரும்
ஓடித் துடித்துப் பணிபுரிந்தார்
ஒன்றும் முன்னேற்றம் காணவில்லை...!
நாடித் துடிப்பும் அவன் மனைவி
நாடிநின்றது எனு முண்மை;
ஓடியே வந்த மனைவிகண்டு
ஓடிய உயிரும் உரைத்ததம்மா....

வயிற்றில் வளரும் குழந்தையினை
வளர்க்கும் முறைமைஉரைத்ததையும்
பயிற்றிக் கல்வியில் உயர்ந்திடவே
பள்ளிக் கனுப்ப நினைத்ததையும்
இயம்பி இயம்பி அவன் துணைவி
இறந்தவனைத் தழுவி யழுதவிதம்
இயம்பினால் சோக நாடகந் தான்!
'எல்லாம் விதி' என முடித்தார்கள்

தோட்டம் நடத்தும் மேலாளர்
துக்கம் கேட்டு விதவையிடம்
'வாட்டம் நீக்க இயன்றமட்டும்
வழிகள்செய்வேன்...' என்றியம்பிக்
காட்ட லானார் முகச்சோகம்...!
கர்ப்பிணி நம்பி வீடுவந்தாள்...

www.tamilarangam.net



காட்டு முதவி மலைஎனினும்
    கணவன் துணைக் கிணையாமோ...

நாட்கள் மாதங்கள் பலவாக
    நங்கை ஈன்றாள் ஆண்மதலை...!
ஆட்கள் இல்லை உதவிக்கும்...!
    அத்தைக்கிழவி யாதுசெய்வாள்...?
'காட்டு இறைவாகருணை!' என்றே
    கலங்கித் தவித்தாள் குலக்கொழுந்து,
கேட்டு உதவி துரையின் பால்
    கிழவியும் மாது மழுதபின்னே...

வேண்டா வெறுப்பாய் மேலிடத்தார்
    விதவைப் பெண்ணைக் கூப்பிட்டே
'மாண்டு போன முத்தனுக்கு
    மனமிரங்கித் தோட்டத்தார்
ஈந்த பணமும் ஆயிரந்தான்...
    இழப்பிற் கீடு ஈது!' என்றே
ஈந்தார்! ஏற்றாள்...! எனினுமவள்
    இதயம் சிறிதும் மகிழவில்லை!

*(வீரகேசரி - 4.11.66)*

www.tamilarangam.net



# கருகிய மலர்

விண்ணோடு கதைகள் பேசி
விளங்கிடும் தோட்டக் காட்டில்
மண்ணோடு புரண்டு கிடக்கும்
மலர்களாம் குழந்தை கட்கே
எண்ணோடு எழுத்தி ரண்டை
எடுத்தோதும் இலகுப் பிள்ளை
கண்ணோடு கருத்தையுந் தான்
கவர்ந்தனன் 'சிட்டு' என்பாள்

பட்டான சிட்டு மேனி!
பகலவன் நிறத்தை வெல்லும்
கட்டான உடல் வருந்தக்
கரங்களால் கொழுந்து கிள்ளி
சிட்டாகப் பறந்து உழைத்தாள்,
சிறப்பாக் குடும்பம் வாழச்
செட்டாக செலவு செய்தும்
செம்மையாய் திகழ்ந்தாள் மங்கை!

இல்லத்தார் தண்ணீர் கேட்க,
இடையிலே குடமும் ஏந்தி
மெல்லத்தான் பள்ளிக் கூடம்
மிரண்டுமே அடைந்த இரவில்,
பொல்லத் தனத்தான், அந்தப்
போக்கிரி ஆசான் அவளை
இல்லத்துள் இழுத்து தனது
இச்சையைத் தீர்த்துக் கெடுத்தான்!

நடந்ததைப் பெற்றோரி டம்
நவிலவே பயந்தி ருந்தாள்!
கடந்தன மூன்று மாதம்!
''கருவிலே குழந்தை கண்டாள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிந்தது குலப் பெருமை!
மூண்டது இழிவு!'' என்று
கடிந்தனள் தன் செயலை!
கவலையால் உறக்கங் கெட்டாள்!

வாட்டிய கொடுமை நீங்க
வந்ததோர் முடிவின் படியே,
வீட்டிலே பெற்றோர், மற்றோர்
விழிமூடி உறங்கும் இரவில்
தோட்டத்துள் சென்று உடலில்
துணிவோடு எண்ணெயை ஊற்றி
மூட்டினாள் தீயை... ஐயோ,
முழுமலர் கருகிற் றம்மா...!

*(1961ல் குறிஞ்சியில் வெளியானது)*

www.tamilarangam.net



# அக்கரைகள் பச்சை இல்லை

ஏழுமலை தோட்டத்தில் வாழும் ஒருகுடும்பம்
வேலுப்பிள்ளை கணக்கர்! வேலம்மாள் வீட்டரசி!
தோட்டக் கணக்கருக்கோ நாட்டம் கடமையிலே!
வாட்டம் இருவருக்கும் தேட்ட மில்லாமையால்!

(வேறு)

அதனால்;
நிதியைத் தேடிட மதியும் தூண்டிட
பதியும் சதியும் விதியை நொந்தனர்!
இரவில் அமர்ந்த இருவரும் தம்நிலையை
ஒருவருக் கொருவர் திறந்து உரைத்தார்!
"பக்கத்து வீட்டார் மிக்க வசதியோடு
திக்கெல்லாம் சுற்றி எக்காள மிடுகிறார்!
இருட்டு அறையிலே சுருட்டி நுடங்கி;
குருட்டுக் குடும்பமாய் குதூகல வாழ்வை
வீணாகப் போக்கித் தானாகக் கெட்டோம்!
ஏனோ பணத்தைக் காண மறந்தோம்!
பாடுகள் பட்டே தேடிய தென்ன?
வீடா? நிலமா? மாடா வாங்கினோம்?
ஊரார் அறியப் பேரைச் சொல்ல
சீராய் நான்கு பேர்களைப் பெற்றோம்
மூத்த மகளைப் பார்த்த மாப்பிள்ளை
காத்திருக்கின்றான் திருமணம் முடிக்க
தங்க நகைகளை மங்கைக்கு அணிய
எங்கே பணம்? உங்களை நம்பினால்;
ஒன்றும் நடக்காது! இன்றே நானும்,
சென்று வெளியூர் நன்றாய் உழைப்பேன்!
மாதமும் சம்பளத்தை தோதாக அனுப்புவேன்!
ஏதேனும் செலவிடாது பாதுகாத்து வையுங்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எந்தன் நகைகளை தந்தேன்! உடனே
தந்திர மாகவே தொந்திர வின்றி;
பயணம் போக ஏற்பாடு செய்க!''
நயனம் துடிக்க நயந்து இவ்வாறு -
இல்லாள் சொல்ல உள்ளங் கனிந்தோன்
நில்லாமல் அன்னவள் சொல்லை நிறைவேற்ற;
பறந்தாள் வேலம்மாள் பணத்தைக் குவிக்க
சிறந்த செல்வம் நிறைந்து இனியும்
அனைத்தும் நலமாய் நடக்கு மென்றே
நினைத்த கணவன் திளைத்தாள் கனவில்!
மனைவியும் சென்று மாதங்கள் இரண்டு
பணமும் வருமென்று தினமும் பார்த்து
கணவன் ஏமாந்தே மனமும் தளர்ந்தான்!
உணவையும் வெறுத்தான் துணைவியை நினைத்தே
கிட்டே இருந்தவள் எட்டிச் சென்றதால்
கட்டிலா அன்பை முற்றாக உணர்ந்தான்!
சுற்றி நின்றே பற்றுடன் கேட்கும்
பெற்ற பிள்ளைகளுக்கு உற்ற பதிலென்ன?
வேலுப் பிள்ளையும் நூலாய் மெலிந்தார்!
மேலும் கீழும் ஆலாய் பறந்தார்!
பிள்ளைகள் பாசத்தை அள்ளித் தெளிக்கும்
உள்ளத் துணர்வைச் சொல்லில் சுமந்த
மடல்கள் இரண்டு உடனே வந்தன...
''இடர்கள் தாக்கி முடங்கி விட்டாளோ?
இறைவா...! அவளுக்கும் குறையும் நேர்ந்ததோ?
கரையில் லாத கவலையில் கரைந்தான்!
துரையைக் கண்டே விடுமுறை பெற்று
விரைவாய் கொழும்பிற்கு விரைய முயன்று
அரைகுறை யாகப் புறப்படும் போது
தோட்ட அலுவலகம் நீட்டிய தந்தியை
காட்டினான் மலையான் கணக்கரிடம் வந்து
பார்த்த வேலுப்பிள்ளை பதறித் துடித்தார்!
மூத்த மகளோ... மூச்சற்று வீழ்ந்தாள்!
வேலம்மாள் பிணமாய் விமானத்தில் வருவதாய்
ஓலமிட்ட பிள்ளைகள் உயிரும் துடித்தன!
மாடியில் தவறாய் விழுந்தவள் உயிரும்
ஓடிப் போனதாய் வந்த செய்தி
பொங்கும் மனங்களைப் பொசுக்கித் தீய்த்து!
எங்கும் இருப்போனே... எல்லாம் அறிவான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனிதம் தழைத்தோங்கும் மலை

மேகத்திரைச் சேலையிலே கதிரவனின் பொற்கதிர்கள்
வேகமாய்த் தங்க ஓவியங்கள் தீட்டி விளையாட
கட்டுச் சோறும் கூடையுமாய் நடந்து, வந்த கருப்பாயி,
எட்டிக் கண்ணோட்டம் விட்டாள்! அழகுமலைத்
திட்டுக்கப் பாலிருந்து போத்தலுடன் வந்தாள் பொடிமெனிக்கே!
சிட்டுப்போல் பெரியக்கா, சீலாவதி, சிலம்பாய் எனக்
கட்டடங்கட்டமாக வந்து கை வைத்தார் ஆறாம் மலையில்!
'பொட்டும்' கொழுந்தெடுத்து 'பொலியோ பொலி!' என்றாள்!

''பெரியக்கா! பிரேமலதா! பேச்சாயி! மூக்காயி! எல்லாம்,
சரியாக நிரைபிடித்து கொழுந்தெடுங்கள்!'' என்றங்கே
பொன்னையா கங்காணி போட்ட சத்தம்; மலைமுகட்டை
விண்ணை முட்டி, ஆறாம் மலையையே அதிரவைத்தது.

றம்பண்டா கொடுத்த போத்தலினை பொடிமெனிக்கே
அன்போடு நீட்டினாள் பொன்னையா கங்காணியிடம்,
''வள்ளியக்கா! என் மகளின் மாரியம்மா நேர்த்திக்கடனை
வெள்ளிக்கிழமை நிறைவேற்ற வேண்டும்!'' என்று
விரத மனத்தோடு பிரேமலதா விண்ணப்பிக்க; சாக்குகாரப்
பரதன் அதனை ஆறாம் மலையே பறைசாற்றி மகிழ்ந்தான்!
''பிரேமக்கா பண்டாரத்தைப் பார்த்து ஏற்பாடு செய்கின்றேன்,
நேராகக் கோயிலுக்கு நீங்களெல்லாம் வருக'' என்றான்.

''நாரங்களை பன்சலையில் நானும் தீப மேற்றவேண்டும்!'' மென
சீரங்காய் சொல்ல சீலாவதி 'சேர்ந்து போவோம்!'' என்றாள்,

''ஆடிப்பூசையை இந்தமுறை அழகாகக் கொண்டாடுவோமெனக்
கூடிக்கொழுந்து கொய்யும் குலமாதர் கூறினார்கள்
இந்தத் திருவிழாவில் காவடி எடுத் தாடவேண்டும்!
எந்தன் மாரியம்மாளுக்கு மாவிளக்கு போடவேண்டும்! என்று
சிந்தாமணியிடம் சொல்லி நந்தாவதி மகிழ, மறுதிசையில்
ஐந்தாம் திகதி ஆராயிமகள் சடங்கிற்குப் போக வேண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று சீலாவதியும் ஏகம்பாளைத் துணைக்கழைத்தாள்
ஒன்றுபட்டு உறவாடி ஓரினமாய்த் தோட்டங்களில்
இன்று மகிழ்வோடு இன்புற்றுதொழில் புரிவோரை
இன்று பிரித்துவைக்க (சிலர்) இனவாதம் பேசுவதேன்?

பண்டாரமெனிக்கா பரதன் பிள்ளைக்கு நாளைக்
கொண்டாடும் பிறந்த நாள் விழாவுக்கு நாமும்
கண்டிப்பாய் போகவேண்டும் காமாட்சியக்கா - என்பார்,
பண்டாவின் வீட்டுத்தானம் நாளைக் கென்பார்,
தோட்டங்களில் இவ்வாறு சிங்களவர், தமிழரினம்
நாட்டமுடன் நட்போடு நல்லபடி வாழ்கின்ற
இனிதான காட்சிகளை இனவெறியர் பார்க்கட்டும்,
புனிதமடைந்து புத்தி தெளியட்டும்! நல்லுறவு
கனியவாழும் பாட்டாளிவழி நடந்தால், நாட்டில்
மனிதம் தழைத்தோங்கும் மகிழ்ந்து!

*(ஊவா மாகாண சாகித்திய விழா மலர் - 1992)*

www.tamilarangam.net



# வெறி

மென்மை உடல் மேலெங்கும் தங்கப்பொங்கல்!
மின்னுகிற புதியஎழில் மலர்ந்த மங்கை!
நன்மை உள்ளம்! நல்லகுணம்! நல் லொழுக்கம்!
நாற்படைகள் கொண்டுதன் நலம் வளர்த்தாள்!
தின்மை செய்யும் காமுகரின் தீய நோக்கைத்
தீய்த்துவிட அவள் உமிழும் அனற்சொல் ஒன்றே!
புன்மை செய்யும் போக்கிரிகள் போட்ட திட்டம்
பொடியாக உடைத்தவளும் போனாள்... அந்தோ...!

வட்டமிட்டு வல்லூறாய்ச் சுற்றி நாளும்
வனிதையினை மனைவியாக வரித்துக் கொள்ளத்
திட்டமிட்டுத் திடஉறுதி பூண்ட ஒருத்தன்...
தில்லுமுல்லுத் தினமிழைத்தும் தோல்வி கண்டான்!
"கெட்டுவிட்டோன்! பெண்கெடுப்போன்! வெறியன்!" என்றும்
கேவலத்தின் மொத்தஉரு வாக அலைந் தோன்;
மட்டுப்பட்டு மானங்கெடப், பெண்கள் நகைக்க,
மனந்துணிந்தே கூடையினால் போட்டாள் பூசை!

அடிபட்டுப் பிழைத்த நாகம் கருவம் வைத்து
அடித்தவனை ஒருநாளில் கடித்தல் போலே...
இடிபட்டுக் கூடையினால் இழிவ டைந்தோன்
ஏளனத்தால் மனதுக்குள் கனல் எரித்துப்
பிடிபட்ட ஓர்வழியாம் மந்திரத் தால்...
பித்தனவன் பெண்ணவளைக் கெடுப்பதற்கே
அடிபோட்டு(ச்) செயல்பட்டான்! மந்திரக் காரன்...
ஆட்டிவிட்ட 'பம்பரம்' போலானான் மூடன்!

நெருப்பெரிய வானலையில் காலை தோன்றி
நீள் வையம் 'பரபரக்க' நேரிழையாள் நெஞ்சம்;
விருப்புந்த வேலைக்களம் நோக்கி அன்னாள்
விரைவோடு வரும்வழியில் மறைந்து நின்றோன்
திருப்புமவள் முகப்பூவில் சாம்பல் போட்டே
திருடன்போல் தேயிலைக்குள் ஓடி விட்டான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெருப்படைந்த(ப்) பிள்ளைபோல் மங்கை அஞ்சி
நிலைமயங்கி உடல்வியர்த்து அலறி வீழ்ந்தாள்!

அலறல் ஒலி செவிமடுத்தோர் ஓடி வந்தே
அழகுமலர் பெட்டகத்தின் நிலையைக் கண்டு
அலறிமிக மனமிரண்டார்! அணைத்துத் தூக்கி
ஆங்குள்ள மருத்துவ மனையிற் சேர்த்தார்!
உளறியவள் சொல்லுருவம் ஒன்றைத் தானும்
உருப்படியா யொருவருமே கேட்க வில்லை!
குளறியதன் உட்பொருளை இறையவன் கேட்டான்!
கோதையவள் உயிர்துறந்தாள் பயத்தினாலே!

உடல்பசித்து வெறிபிடித்து அலையும் கெட்ட
உளமழிந்த ஆண்குலமே உணர்வீர்! இன்னும்
அடம்பிடித்து மதம்பிடித்து அவனித் தெய்வ
அன்னைகுல மங்கையரைக் கொல்லும் செய்கை
விடல்வேண்டும்! இல்லை எனில் பெண்கள் பாவ
வேகத்தில் தூளாகும் ஆண்கள் வாழ்வும்!
மடல் வரைந்த ஓவியத்தைத் கிழித்துப் பார்த்து
மகிழ்கின்ற விலங்கியலை ஒழிப்பீர் நாட்டில்!

*('தீ' இதழில் வெளியானது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பழி சூழ் உலகு

வாழைமலைத் தோட்டத்தில் கண்ணீர் வடித்து
வறுமைத்தீயில் மலராகித் துயரில் வெந்தே
வாழும்நிலை தடுமாறி வயிறும் காய்ந்து
வடிவிழந்த வள்ளியவள் கதையைக் கேளீர்!
பாழுங்கட்டுச் சாராயம் போதைப் பித்தில்
பகலிரவும் குடித்தவனின் உடலும் நோயில்,
வீழும்நிலை எய்தியது! குடலும் வெந்து
வேறாகி வெளியேறக் கணவன் மாண்டான்!

விதவையவள் வள்ளிக்கும் உயிரைப் போன்று
விளங்குமெழில் சின்னஞ்சிறு குழந்தை கட்டும்,
உதவிசெய்ய ஒருவருக்கும் இதயமில்லை! ஆனால்
ஒருவர்பின் ஒருவராகக் கடனைக் கேட்டே,
பதறியவள் மனமுடையத் துயரம் மூட்டி,
பழிகூட்டும் இழிசெயல்கள், வம்பும் கூட்டி,
எதுவிதக் குறைகளும் புரியாத் தாயை
எண்ணாமற் "கற்பிழந்தாள்!" - என்றார் கொடியோர்!

ஒருநாளும் தவறாமல் கொழுந்து கிள்ளி,
உடல்மெலிந்து, பலங்குன்றி, எலும்பாய்த் தோன்றி,
ஒருநாளைக் கொருவேளை "ஏதோ" உண்டு,
உற்றதன் குழந்தைகளின் பசியைத் தீர்த்து,
வரும்நாளில் "கைப்பிள்ளை" வலிமை கெட்டு,
வாய்நனையக் குடிப்பதற்கும் தாய்ப் பாலற்று;
துரும்பான உருவாகி, இரத்த மற்றுத்...
துறந்த உயிர்ப் பிரிவாலே... அழுதாள் வள்ளி.

*(1961ல் 'மாலைமுரசு' இதழில் வெளியானது)*

www.tamilarangam.net



# மண்ணும் மசானமும்

மெய்யன் அவன் நாமம்
    மெத்தப் பருத்த மேனி
தொய்விலான் துடி துடிப்பாய்த்
    துவளாமல் உழைக்கும் மறவன்
துய்யதாம் குடும்ப வாழ்வின்
    துணைவியாய் மீனாட்சி விளக்கை
எய்தினான்...! இளமைப் பூவை
ஏற்றதால் இதயம் பூத்தான்!

'பூங்கொடி மீனாட்சி என்றால்
    முற்றிலும் மெய்மை என்னும்
தீங்கிலா மெலிந்த மங்கை
    தேன்மேனி சான்று சொல்லும்
ஓங்கிய இல்லறப் பிணைப்பின்
    உண்மையாம் மழலைச் செல்வம்
தேங்காமல் ஆண்டுக் கொன்றாய்
    தெய்வத்தால் ஈன்று நைந்தான்!

கட்டுடல் கணவன் மனதைக்
    களிப்புறச் செய்யும் மனைவி
கெட்டாளோ? நலம்பெற்றாளோ? - என்று
    கேட்டிடான் மெய்யன்! - எனினும்
மட்டிலா உறவை மட்டும்
    மறக்காமல் காத்த பெண்ணாள்
தொட்டாலும் வீழும் நிலையில்
    தொழிற்செய்ய மறந்தாள் இல்லை!

முதற்தேதி தொடங்கிப் பதினைந்து
    முடியும்(முன்) புல்லு வெட்டி...
முதலாக முடித்து, மலைக்கு...
    முந்துவாள்! கொழுந்து கிள்ளிப்
பதறிடும் பிள்ளைகள் எழுவர்
    பசியினைப் போக்க உழைப்பாள்

www.tamilarangam.net



கதையினைச் சொல்லப் போனால்
கவலையும் கண்ணீரும் மிஞ்சும்...!

சலியாத உழைப்பாளி மெய்யன்
சம்பளம் சக்திக்- குடியினுக்குப்
பலியாய்ப் போகக்- குறையினுக்கு
அவன் குன்ற மானான்...!

நலிவான மனைவி நலத்தை
நாடாமல் திரியும் கணவன்
இழிவான நடப்பை எண்ணி
இதயத்துள் குமைவாள் மீனா...!

சேய்நலம் பேணவே தினம்
செயல்பட்ட தாயின் வயிறு
நோயுடன் சுமக்கும் பிள்ளை
பிறந்திடின் மொத்தம் எட்டு!
இருவரின் உழைப்பை நம்பி
எழுவரின் வாழ்கை ஓட்டம்
திருவருள் கருணை நோக்கால்
திண்டாடி நடக்க வேண்டும்!

கொடும்மழை 'தடதட' என்று
கொட்டிற்று அன்று ஏனோ?
கடும்புயல் வெறி யாட்டத்தைக்
காற்றுமே காட்டிற்று! பாவை
படுந்துயர் போக்க மழையில்
பறந்தனள் புல்லு வெட்ட!
நெடும்மழை சூறாவளி சற்றும்
நிற்காமல் அவளை வாட்டும்

குலக்கொடி மீனாட்சி மலையில்
குனிந்தபடி புல்லை வெட்டிப்
பலங்கெட்டு சாய்ந்தாள்; உதவப்
பக்கத்தில் யாருமில்லை! அதனால்
நிலத்திலே கிடந்தாள்! தலையை
நிமிர்த்திட வலிவு மில்லை!
நலத்தினைப் பேணாள் உயிரும்
நனைந்தங்கே பிரிந்து போச்சே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்திப் பொழுது சாய்ந்தும்
அன்னவள் வராமை கண்டு
முந்திப் பிள்ளைகளோட மெய்யன்
முனங்கியே பின்னர் சென்றான்
தேயிலை மலையில் பெற்றவள்
பிணமாகக் கிடத்தல் கண்டு
சேய்களோ புலம்பி வீழ்ந்து
செய்வ தறியாமல் துடிக்கும்

கழுத்தினில் சுருக்கிட்டு மாண்ட
களப்பனின் ஆவியே அவளை
இழுத்தங்கே கொன்ற தென்று
இயம்பியே' 'அடக்கம்' செய்தார்!
மழையினில் வழுக்கி வீழ்ந்து
மடிந்திட்ட மீனாட்சி நிலையைப்
பிழையறப் பார்த்தோர் இங்கே
பேசுவரோ பேய்க் கதைகள்...?

*(வீரகேசரி - 16.2.69)*

www.tamilarangam.net



# கள்ளப்பேர் கணக்கப்பிள்ளை

அமிர்த வல்லித் தோட்டத்திலே
ஆணவம் கொண்ட கணக்கப்பிள்ளை
திமிரைக் காட்டி தினந்தோறும்
தேயிலைக் கொழுந்தைத் திருட்டாக
குறைத்து நிறுத்து தன்வீட்டு
குசினியில் சமைக்கும் அஞ்சலைக்கு
மறைத்துப் பேரும் போடுவதால்
மங்கையர் மனமும் குமுறியதே!

மாட்டுக்குப் புல்லை அறுத்துவரும்
மலையாண்டி எனும் தொழிலாளிக்கு
தோட்டக் கணக்கில் கள்ளப்பேர்
தொடர்ந்து போடும் கணக்கப் பிள்ளை
கடுமையான போக்க தனால்
கனன்று எழுந்த தொழிலாளர்கள்
கொடுமைச் செயலை ஒழிக்கும்படி
கூடிச் சொன்னார் தலைவரிடம்

சாராயத்திற்கும் சாப்பாட்டுக்கும் தலையைச்
சாய்த்துப் போகும் தலைவரும்
நேராய் கணக்கப் பிள்ளைஇடம்
நியாயம் கேட்டு முடிக்கவில்லை!
வேண்டிய படியே கள்ளப்பேர்
விரும்பியோர்க்குப் போட்ட கணக்கரும்
வேண்டியவாறேத் தினஞ்சுருட்ட
வெந்து நொந்தார் தொழிலாளர்!

வேகமாகக் கொழுந் தெடுத்தே
விரைந்து கூடையை நிறைத்தபடி
ஏகம்பாள் எனும் தொழிலாளி
எல்லோருடன் கொழுந்து நிறுக்கையிலே...
வழக்கம் போல எடைகுறைத்து
வஞ்சகர் கணக்கர் நிறுத்ததனால்

www.tamilarangam.net



முழக்க மிட்டபடி ஏகம்பாள்
முகத்துக்கு நேரே தராசினை

பிடித்து நிறுத்தி கணக்கரைப்
''பாருங்கள் பத்துகிலோ குறைத்ததை,
எடுத்துக் காட்டுது தராசு
ஏனிந்த அநியாயம்?'' - என்றதுவும்
தடித்தனமாக கணக்கனும், அந்தத்
தையலின் கரத்தைத் தட்டிவிட்டே
''மடத்தனமாகப் பேசாதே! இந்த
மலையில் நீதான் வாய்காரி!

நிறுத்து நானும் சொன்னதே
நிச்சயமான கணக்கு! அதனால்
மறுத்து மீறிப் பேசாதே!
மலைக்கு வேகமாய் ஓடு!'' - என்றான்
''அப்படி நானோட முடியாது!
அந்தப் பத்துகிலோ கொழுந்தையும்,
எப்படிக் குறைக்க முடியு?'' மென
ஏந்திழை குமுறிக் கேட்டிடவே

''சத்தம் போட்டுப் பேசாதே
சம்மதம் இன்றேல் வீட்டுக்குப்போ!
மெத்தப் படித்தவள் போலிங்கே
மீறி என்னை எதிர்த்தமையால்
குத்தமும் உன்மேலே தான்!
கூறுவேன் துரையிடம்! உனக்கின்று
மொத்தமாகப் பேரில்லை! அதனாலே
மூச்சுவிடாமல் வீட்டுக்குப் போ! - என்றான்

நித்தமும் திருட்டு நாடகத்தை
நினைத்தபடியே கணக்கப் பிள்ளை
வித்தகமாக நடத்தி வந்தார்
வேதனைப் பட்டார் தொழிலாளர்!
தந்திரமாகக் கணக்கரும், தோட்டத்
தலைவரும் சின்னத் துரையோடு
குந்திக்குடித்தே பணங்குவிக்க
குமைந்து உழைத்தார் தொழிலாளர்

www.tamilarangam.net



# இயேசு நாதரே, எழுந்து வாருமே!

பரிதி தோன்றி ஒளிபரப்பும் பான்மை போலவே - தங்கள்
பாதம் பட்டுப் பாரிலெங்கும் நலங்கள் மேவவே
குருதி சொரியச் சிலுவை சுமந்த இயேசு நாதரே! - இந்தக்
குவலயத்தில் அமைதி தோன்ற மீண்டும் வாருமே.

❉

உறுதியோடு உயிர்க்குலத்தைக் காத்து நின்றதால் - தங்கள்
உயிர் பறிக்க முயன்ற போதும் அஞ்சி டாமலே
இறுதி மட்டும் புனிதம் காத்த தேவதூதரே! மக்கள்
இன்னல் நீக்கி இனிமை சேர்க்க எழுந்து வாருமே.

❉

போட்டி போட்டு ஆயுதங்கள் செய்து வைப்பவர் - வாழும்
புவனமிதைக் கணப்பொழுதில் அழிக்க நிற்பதால்
வீட்டிலுண்டு உறங்குதற்கும் அஞ்சும் மக்களோ - நாட்டின்
வீதியிலே நடப்பதற்கும் அஞ்சி நிற்பதால்

❉

காட்டில் விட்ட பிள்ளைகள்போல் தத்தளிக்கிறார் - மனக்
கவலைக்கொண்டு அவலப்பட்டு நடுங்கி நிற்கிறார்!
மாட்டுக் கொட்டி லில் உதித்த தேவபாலனே...! - இந்த
மாநிலத்தோர் துயரை மாற்ற ஓடிவாருமே

❉

நிலவிலேறிக் குடியிருக்க வழி வகுப்பவர் - மக்கள்
நிம்மதியாய் வாழ்வதற்கோ வழியும் கண்டிலர்,
நிலவுகின்ற மனித பேத வெறி வளர்ந்த தால் - உலகம்
நிலை குலைந்து பிளவுபட்டுக் கலங்கி நிற்பதால்

❉

''உலகுக்(கு) ஓடி வருக!'' வென்று! யாமழைக்கின்றோம் - தேவ
உத்தமா! நற் றலைவனே! நீ விரைந்து வந்திடின்
நிலவுமிந்த உலகில் வாழும் சகல மாந்தரும் - அன்பு
நேசங் கொண்டு பாசத்தோடு சேர்ந்து வாழுவார்!

*(சிந்தாமணி - 23.12.84)*

www.tamilarangam.net



# கலைவாணி

அன்னை கலைவாணி! நின்றன்
அருளினால் ஏங்கும் ஏழை,
என்னையும் மனைவி மக்கள்,
எல்லோரையும் காப்பாயம்மா!
கண்ணொளி கருத்தும் நீயே!
கற்பனைக் கனவும் நீயாய்
எண்ணும் என் இதய வேட்கை
ஈடேறத் துணை நிற்பாயே!

ஆண்டுகள் பலவின் பின்னம்
அடியேனைக் கவிதைப் பாடத்
தூண்டிய நின் கருணை இனித்
துவளாமற் தொடர்ந் திசைக்க
நீட்டுவாய் நலக்கரத்தான்,
நிம்மதி எம்முள் மலர்ந்து,
வீட்டிலே வெளிச்சம் நினைக்க
விருப்பங்கள் நிறைப்பா யம்மா!

வறுமையும் கவலையும் நோயும்
வாட்டு மென் குடும்ப நிலையில்
பொறுமை நீகாட்டாது நல்ல
பொருள் வளஞ் சேர்த்து, நீ
இனியன நிலைக்க வைத்து
இன்னலில் தவிக்கும் என்றன்
பணிகளும் வெல்ல நித்தம்
பக்க பலமாக நிற்பாயம்மா!

*(அஞ்சலி -1962)*

www.tamilarangam.net



# தந்தை செல்வா

இலங்கையில் தமிழர்கள் இடரின்றி வாழ்ந்திட
ஏற்றநல் வழிகள் சொன்ன
கலங்காத வைர நெஞ்சம் படைத்திட்ட
கண்ணியவான் தந்தை செல்வா...!
பலமிக்க அறப்போர் வழியினைப் பின்பற்றி
பல்வேறு போராட்டம் தொடுத்தே
களங்கண்ட வீரனாய் தமிழர் நலங்காக்க
கடைசிமட்டும் உழைத்த தலைவன்

மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான், மலைநாட்டான் என்கின்ற
மனம் நோகும் பேதங்களை,
விட்டொழித்தாலே இலங்கையில் தமிழனுக்கு இனியும்
விடிவுண்டு என்று ரைத்த;
அரசியல் ஞானியாம்! அடக்கம்மிகும் மேதையாம்
அண்ணல் செல்வநாயகத்தின்
உரமான கொள்கையில் உறுதியுடன் நின்றாலே
உண்டிங்கு தமிழர்க்கு வாழ்வே!

பதவிக்கும் பணத்திற்கும் தன்னின மக்களை
பணயம் வைக்காமல் என்றும்
உதவிக்கும் பணியாமல் உரிமைக்குப்போராடிய
உத்தம தந்தையே செல்வா
கூட்டாக அணிதிரண்டு இலங்கைத் தமிழர்கள்
கொடியுயர்த்த பாடு பட்ட
நாட்டினர் மதித்திடும் நல்லதோர் தலைவனை
நாமினிக் காண்ப தென்றோ...?

www.tamilarangam.net



# புனிதர் ராஜலிங்கம்

கதராடை வெண்மை ஒளிர் அழகுமேனி!
கவர்ந்திழுக்கும் புன்சிரிப்பும் பூத்த முகம்!
மதிநுட்பத் திறன் காட்டும் வரிந்த நெற்றி!
மக்கள் நலம் நாடிஓடும் புனிதநெஞ்சம்!
எதிரான போக்கினரைத் தன்பக்க மீர்க்கும்,
இனிய பண்பு கொண்டவராம் ராஜலிங்கத்தை,
சதியான மாரடைப்பும் எமனாய் வந்தே,
சாய்த்து விட்ட செய்தியினை நம்புவேனோ?

பள்ளி வாழ்வை முடித்தவுடன் சங்குவாரிவந்து
படிப்பதற்கு வசதியின்றி தோட்டப் பிள்ளைகளும்
வெள்ளைத்துரை கூட்டத்தால் வேண்டு மென்றே
வெறுமனே அலையவிட்ட அவலம் நீங்க,
படிப்பதற்கு வவ்வாப்பிட்டியில் பள்ளி யமைத்தார்!
படிப்பிக்கும் ஆசானாய் தானே திகழ்ந்தார்!
நடிப்பதனால் தலைவராக நடமாடுவோ ரிடையே
நற்தொண்டால் தலைவரானார் ராஜலிங்கம்!

புசல்லாவ சரஸ்வதி மகா வித்தியாலயமே
புனிதன் அவன் கல்வித்தொண்டின் விளக்கமாகும்
இசைபாடி மாணவ மாணவிகள் இன்றும்
இராஜ லிங்கத்தின் நாமம்வாழ்த்திப் போற்றும்படி
பகலிரவாய் தொழிலாளருக்கே பாடுபட்டும் - தனக்குப்
பணந்தேடி வைக்காத ராஜலிங்கத்தின் பண்பும்
அகத்தூய்மையும் கொண்டவராய் யார்வருவார் இனியும்?
அதனாலேயே ராஜலிங்கம் அருந்த லைவரானார்!

நாவலப்பிடியின் பேராளராய் நாற்பத் தேழில்
நாடாளுமன்றத்திலே நுழைந்த ராஜலிங்கம்;
கேவலமாய் தோட்டத்தாரை நடத்த முயன்று,
கேடுசெய்த அரசினையே எதிர்த்து நின்று,
தீவிரமாய் வாதாடி, போராடி வந்தார்!
தீனர்களின் தலைவனாகத் தொண்டு செய்தார்!
நாவினிக்கும் பேச்சாலே நகைச்சுவை துள்ள
நாளெல்லாம் காந்தியமாய் வாழ்ந்தோர் எங்கே?

www.tamilarangam.net



சங்குவாரி பெரிய கங்காணி காளிமுத்துவின்
சாதனைகள் படைத்த மகன் ராஜலிங்கத்தை,
தங்களது தலைவரென நாற்பதுகளில் மக்கள்
தலைமேலே தூக்கி வைத்தே போற்றலானார்!
குடியுரிமை, வாக்குரிமையைத் தோட்டத்தார் இழுக்க
குள்ளநரித்தனமாக சேனநாயக்க முயன்ற போது;
இடிஎனவே முழங்கியவர் தலைவர் இராஜலிங்கம்!
எல்லோருக்கும் உரிமைக்கோரி நாட்டில் ஆர்ப்பரித்தார்

ஜெனிவாவில் உலகத் தொழிலாளர் மன்றத்தில்
செயல்வீரர் ராஜலிங்கம் ஐம்பதுகளில்
துணிவாக இந்திய வம்சாவழி மக்களினம்
தொடர்ந்து இந்தநாட்டினிலே வாழ்வதற்கே
வாக்குரிமை, குடியுரிமை வேண்டு மென்றே
வரலாற்று சான்றுகளை எடுத்துக் காட்டி;
ஊக்கமுடன் வாதிட்டார்! அதனைக் கேட்ட
உலகத்தொழிலாளர் உண்மைநிலை யறிந்தார்!

ஐம்பத் திரண்டில் நடந்த அறப்போராட்டத்தின்
ஆணிவேராய் இயங்கியவர் தலைவர் ராஜலிங்கம்!
சம்பளத்தை எதிர்பார்த்துப் பொதுச்சேவை செய்யா
சத்தியத்தின் காவலராம் சாந்த சீலர்!
கம்பளி ஐந்துரூபாய்! கருப்புக்கம்பளி ரூபாய்பத்தென
கைநாட்டு வாங்கிய கங்காணிகள் முன்னே;
"தம்பலமே தொழிலாளர் விழிப்பு!" - என்ற
தலைவர் ராஜலிங்கத்தை எமனும் கவ்வினானோ?

பேர்பெற்ற எழுத்தாளர் கல்கி - இவரின்,
பெருந்தியாகப் பணிகண்டே மனம் மகிழ்ந்து,
ஊரறிய "மலைநாட்டுக் காந்தி" - என்றே,
இவரை உயர்வாகப் புகழ்ந்ததை மறப்பதுண்டோ?
பாரதி கல்லூரியின் இரண்டா மாண்டின்
பயன்மிகுந்த நிறைவு விழாவின் இப்பெருமக்களை
நேராகச் சந்தித்து நான் உரையாடிய
நிகழ்வதும் என் நெஞ்சில் கனியு தையா!

*(தலைவர் கே.இராஜலிங்கம் - 1963ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மறைந்தபோது பாடிய இரங்கற்பா)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தியாகி வெள்ளையன்

கண்டியிலே புகழ்பூத்த திருத்துவக் கல்லூரியில்
கற்பதிலே முதன்மை பெற்று,பேரும் பெற்று,
தொண்டாற்ற முன்வந்த வி.கே.வெள்ளையனும்,
தொழிற்சங்கப் பணியிலே தொடர்ந்து நின்றார்!
இலங்கை இந்தியக் காங்கிரஸ் இயக்கத்திலே
இணைந்திட்ட இளைஞரான தோழர் வெள்ளையனோ...
நலங்களற்ற தொழிலாளர் நன்மை காண
நாளெல்லாம் பம்பரமாய் போராடி உழைத்தார்!

தமிழ்மொழியில் ஆங்கிலத்தில் தடையின்றிப் பேசும்
தனித்திறமை பெற்று யர்ந்த தலைவரானார்!
அமர் இராஜலிங்கத்தின் அன்பைப் பெற்றே,
அல்லற்படும் தோட்டத்தாரை விழிக்கச் செய்தார்!
பதவிவெறி போட்டியினால் தலைவர்களுக் குள்ளே
பகைவளர்ந்து காங்கிரசும் இருகூறான போது;
இதொகாவின் தூணாக இயங்கியவர்! அதன்
இணையிலாப் பொதுச்செயலாளராகப் பொறுப்புமேற்றார்

எதிரணியார் வாயடைக்கத் தோட்டங்கட் தோறும்
எக்காள மிட்டவீரர் வெள்ளையனை - மக்கள்
மதித்தபடி இதொகாவில் சேர்ந்து வளர்க்கலானார்
மலையகத்தின் தலைவராகக் கீர்த்தி பெற்றார்
கற்றவரைக் கண்டாலே தொழிற்சங்கத்தார்
கடுகடுத்து முகஞ்சுளித்து ஒதுங்கும் நாளில்;
கற்றவரை வரவேற்று கரங்குலுக்கி - நட்பும்
கனிந்திடவே உரையாடி கலந்து அறிந்த
அற்புதப் பண்பாளர்! அழகு முகத்தார்!
அனைவரையும் கவருகின்ற தோற்ற முடையார்!

நற்பணியால் தோட்ட மக்கள் நன்மைபெற்ற,
நாட்களை நினைத்துப் போற்றல் நன்றியாகும்,
தன்மானம் காத்து நின்ற வெள்ளையனை
தலைவனாக மலையகத்தார் தொடர்ந்த போது,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்பான தொண்டனாக நடந்து கொண்டார்!
அதனாலே தன்நலத்தார் பொறாமை கொண்டார்!

அவமதிப்பை, அலட்சியத்தை, வெறுத்து ஒதுக்கி
அமைதியாக அறிவின்வழி தனிச்சங்க மமைத்தார்
கவலையின்றி நகரங்கள் தோட்ட மெங்கும்
கட்சியினை களைக்காமல் வளர்த்து வந்தார்!
திருமணமே புரியாமல் தனித்து உழைத்து
தேயிலைத் தோட்டத்தார் நல்வாழ்வை என்றும்
பெறுவதற்கே; தியாகஞ் செய்த வெள்ளையன்பேரை
பெருமைமிகு தொழிற்சங்க வரலாறுபேசும்

*(தொழிற்சங்கத் தலைவர் வி.கே.வெள்ளையன் அமரரான வேளை பாடப்பட்டதாகும்)*

www.tamilarangam.net



# தலைவர் தொண்டமான்

சரித்திரம் புதிதாகப் படைத்த
    சாகா வரம்பெற்ற தலைவன்!
தரித்திரர் மலையகத்தார் என்னும்
    தாழ்வினை அகற்ற உழைத்த
உத்தமர் தொண்டமானின் பொய்
உடலமும் சாய்ந்து போச்சு...?
தத்தளிக்கும் மலையகத் தமிழர்
தலைநிமிரச் செய்தோன் எங்கே?

அரும்பெரும் தலைவன் எங்கள்
    அனைவரின் வாழ்வும் உயர
அரும்பணி யாற்றிய மூர்த்தி
    அவனியைச் சுற்றி வந்தோன்!
அன்றாடம் உழைத்துப் பிழைக்கும்
    அடிமைத் தொழிலாளர் வர்க்கம்
இன்று நல்வாழ்வு காண
    இடைவிடாது போராடி நின்றோன்!

இந்திய வம்சாவழி மக்கள்
    என்றென்றும் உரிமை யோடே
சிந்தை மகிழ்ந்து இலங்கையில்
    சிறப்போடு வாழ வேண்டுமென
முந்தித் தலைமை ஏற்று
    மும்முரமாய் பாடுபட்டு எங்கள்
சிந்தையில் நிலைத்த தலைவன்
    சிரமும் சாய்ந்ததோ அம்மா...?

ஆளப் படுவோர் மலையகத்தாரென்னும்
    அ வலப்படும் நிலையை மாற்றி
ஆள்பவர் மலையகத்தார் என்னும்
    அத்தியாயம் தீட்டிய தலைவன்

www.tamilarangam.net



மூச்சடங்கிப் போனதாலே இன்று
முழு மலையகமும் மனம் பதைத்து
பேச்சடங்கிக் கதறி எழும்
பெருந்துயரம் நிகழல் சரியோ...?

இலங்கையில் ஐம்பதாண்டு காலம்
எங்களின் ஒரே தலைவனாகத்
துலங்கிய சௌமிய மூர்த்தி
தொண்டமானின் பேரிழப்பால்
கலங்கிடும் தமிழினத்தின்
காக்குங் கரமாய் விளங்கிய
நலங்காத் தோன் மறைந்து விட்டார்
நமக்கினி யார் துணையோ?

*-கந்தேகெதர - சார்ணியா மகாவித்தியாலயத்திலிருந்து ஆற்றிய இவ்விரங்கற்பா கண்டி மலையகச் சேவையில் நேரடியாக ஒலிபரப்பானது. (31.10.99)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கவிஞர் சி.வி.

ஆங்கிலத்தில் கவிதை யாத்தே
அன்றைய தோட்ட மக்களின்
தேங்கிய அடிமை வாழ்வை
தீராத அவல நிலையை,
ஏங்கிய இதயங் குமுற
எல்லோரும் அறிய செய்து,
ஓங்கிய புகழும் பெற்றார்
உத்தமர் வேலுப் பிள்ளை!

நாடாளு மன்றத்தில் அன்று
நம்மவர் உரிமைகளைப் பறித்த
கூடாத சட்டத்தை அரசும்
குரோதமாய் நிறைவேற்றிய போது,
கனலென கிளர்ந்த எங்கள்
கவிஞனாம் வேலுப் பிள்ளை
இனங்காக்க முழக்க மிட்டதை
எல்லோரும் வியந்தே புகழ்ந்தார்.

"நாடற்றோரோ நாங்கள்? இந்த
நாட்டிலேயே வாழ்வோம்!" – என்று
கேடுற்ற தோட்ட மக்களுக்காக
கேட்டவர் உரிமை அன்று,
"வீடற்றவர்" "வாழ்வற்ற வாழ்வு" – என
வெளிவந்த அன்னாரின் கதைகள்
தேடுவாரற்றுக் கிடந்த மலையகத்தாரின்
தேம்பிய நிலையைக் காட்டும்

மடக்கும்புரை பெரிய கங்காணியின்
மைந்தன் வேலுப்பிள்ளை! தான்
நடக்கும்போதும் நண்பர்களோடு கூடி
நாளாந்தம் உரையாடும் போதுங்கூட,
அடக்கமும், சிரிப்பும் இனிமையும்
அறிவுரையும் ஆனந்த அநுபவமாகும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'எடக்கு மொடக்காக இயங்கியே
எவருக்குந் தீமை செய்யாப் பெரியார்

தொழிற் சங்கத் தலைவர்களில்
தொண்டுக்கே முதலிடம் தந்தோன்!
பழியற்ற பண்பான தலைவர்!
பாட்டாளியின் துயர மறிந்தே
பாடியவர் வேலுப் பிள்ளை!
பற்பல இலக்கிய மாலைகள்
சூடியவர் தமிழ் அன்னைக்கே
சுதந்திர வேட்கை மிக்கவர்!

மலைநாட்டுக் கலைமன்றம் அமைத்து,
மலையகத்தார் எழுத்தாற்றலை
நிலைநாட்டி அறிமுகஞ் செய்த
நல்லவர்! "கதை"யும் தந்தவர்!
தலைமகனாய் மலையக இலக்கியத்தை
தனித்துவமாய் வளர்த்த கவிஞர்!
கலைஞானம் மிகுந்த மேதை!
கனிந்த பண்பாடு கொண்டோன்!

இனவெறி வன்செயலால் தமிழர்
இரக்கமின்றி கொல்லப்பட்ட தாலே,
மனமுடைந்து "இனிப்படமாட்டேன்" - என
மறைந்து போனாரோ? - நமது
இனமன்று மலையகம் வந்துசேர
இரவுபகல் பட்ட துயரை
அனலாக "நமது கதை" யாக்கிய
அண்ணலே! மக்கள் கவி மணியே!

தாகூரின் தாசனாகி 'பத்மாஜனி'யை
தைரியமாய் அறிமுகப் படுத்தி
வேகமாய் இலக்கியம் படைத்த
வேலுப்பிள்ளையே! தங்கள்
"தேயிலைத் தோட்டத்திலே" - கவிதையும்,
திறமான "உழைக்கப் பிறந்தவர்" - கதையும்
ஆய்வுக்கான வரலாறாக மலையகத்தில்
அளித்திட்ட தலைமகன் நீயே...!

www.tamilarangam.net



''எழுத்து'' எனும் திறனாய்வு ஏட்டை
என்னிடம் முதலில் தந்து,
பழுத்த இலக்கிய ஆய்வாளர்களின்
படைப்புகளைப் பயிலச் செய்தோய்!
எனது ஆக்கங்களைப் பயின்றே
எப்போதும் பாராட்டி வந்த
உனது உற்சாக மொழிகளை
உரைக்க இனியாருளார் எனக்கே!

ஊரடங்குச் சட்டம் அன்றோ
உன்முகத்தை இறுதியாக நான்,
பார்க்க முடியாதபடி தடுத்து,
பாதியிலே அனுப்பியதால் மூண்ட
சோகமோ என்னை வாட்டும்!
''சும்மா'' திரும்பியதால் பற்றி
வேகும் என்நெஞ்சத் துள்ளே
வீற்றிருப்பாய் இலக்கியமாய் என்றும்!

www.tamilarangam.net



# இர. சிவலிங்கம்

கட்டிய கோட்டைக் குள்ளே
கால் பதித்த சிவ லிங்மும்,
வெட்டிய மரமாய் சாய்ந்த
வேதனைச் செய்தி கேட்டே,
கொட்டிய கண்ணீ ரோடக்
குமுறிடும் மலையக இளைஞர்
எட்டிய துணையவனை இழந்தே
ஏங்கிடும் தம்பியர் ஆனார்!

தோட்ட உட்கட்ட அமைச்சில்
தொண்டாற்ற வந்த சிவலிங்கமும்
தீட்டிய திட்டங்களெல்லாம்
தேங்கிக் கிடந்திடுமோ எனும்
வாட்டிடும் கவலை தீய்க்க
வருந்திடும் மலையக இளையோர்,
காட்டிய ஆர்வம் வளர,
கைகொடுத்த சிவலிங்கம் எங்கே...?

ஆங்கிலம் சிங்களம் தமிழில்
    ஆழ்ந்த புலமை கொண்டே
ஓங்கிய புகழு முயர்த்த
    உன்னத பேச்சாளன் என்று,
மேடைகள் தோறும் முழங்கி
    மலையக மேன்மைக்கு வித்திட்டோன்!
ஏடுகள் தோறும் எழுதியன்று
    ஏற்றதோர் முன்னணி தந்தான்!

இலக்கியம் நாடகம் கலைகள்
எல்லாத் துறையிலும் மலையகம்,
துலக்கமாய் கால் பதிக்க
துணை செய்த சிவலிங்கத்தை
இழக்கவும் மனம் வருமோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமன் செயலைப் பொறுக்கலாமோ...?
முழக்கமாய் நடமாடிய அறிவில்
மூத்தோனை சாய்த்ததோ நோயும்...?

குன்றத்தார் வாழ்வை கலையை
''குன்றின் குரல்'' நிகழ்ச்சியாலே,
அன்றுநம் வானொலி மூலம்
அனைவரும் அறியச் செய்தோன்!
இன்றும் இனி என்றும் சிவாவின்
இணையற்ற இனப் பணியால்
நன்றாக நம்மோடு வாழ்வாழ்வார்
நாமும் அவன் பணி தொடர்வோம்!

*(அமரர் இர.சிவலிங்கம் மறைந்த போது தினகரன் வார மஞ்சரியில் வெளியானது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலைவர் வன்னியசிங்கம்

அண்ணலே! தமிழர் பெற்ற
அரியநற் துணையே! உன்னை
எண்ணவே வலிமை கொண்டு
இயற்றினோம் சேவை என்றால்;
பண்ணிலே நும்பெருமை யாவும்
பாடிட நினைப்ப தெல்லாம்
விண்ணிலே திகழ் கதிரை
விளக்கினால் காட்டல் போலாம்.

❈

மின்னலாய்ப் பறந்து சென்று
மிடிமையை ஒழித்து நின்று
கன்னலாய்த் தேன் கலந்த
கவித்தமிழ்ச் சொற்கள் பேசி
இன்னலை நீக்கி மக்கள்
இன்புற என்றும் வாழ்ந்த
மன்னரே! வன்னிய சிங்கம்
மக்கள்மனதிலே நிறைந்த தங்கம்.

❈

மனத்திலே உறுதி பூண்டு
மன்றமும் நடுங்கி அஞ்ச
இனத்தினை, மொழியைக் காக்க
எழுப்பி னாய்ப்பல வாதங்கள்!
சினத்தோடு எதிர்த்த பகை
செத்திடச் செய்து தமிழ்
இனத்தினை(க்) காத்த உன்னை
இதயத்தால் வாழ்த்து வோமே!

*- 1960ல் பதுளை பாரதி கல்லூரி 3ம் ஆண்டு நிறைவு மலரில் வெளியானது.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தவத்திரு தனிநாயகம் அடிகளார்

ஞாலம் முற்றும் தமிழியல் மேன்மையை
நற்றமிழ் வல்லார் அறிந்து ஆய்ந்திட,
சீலர் அருட் தந்தை தனிநாயக அடிகளார்
செய்த பணிகளின் சிறப்புகள் மிகவாம்!
காலம் தமிழன்னைக்கு அளித்த நற்பேறாம்
கல்விமான் அடிகளார் தமிழ்த் தூதராக
பாலமாக உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை
பயன்தர முதலிலே மலேசியாவில் நடத்தினார்.

இறைநெறித் துறவியாய் இலங்கிய அடிகளார்
இரவும் பகலும் தமிழ்ப்பணி ஆற்றினார்!
குறை வந்த போது தமிழுக்கு இலங்கையில்,
கொஞ்சமும் அஞ்சாமல் குமுறி எழுந்தார்!
காலிமுகத் திடலில் ஐம்பத்தாறா மாண்டில்
கடுமையான சிங்களம் மட்டும் சட்டத்தை
ஓலமிட்டு எதிர்த்த செல்வாவின் அறப்போரில்
உரிமை கோரி பங்கேற்றவர் தனிநாயகம்!

உலக மாற்றத்தின் ஓட்டத்திற் கேற்ப
உயர்வாய் தமிழை வளர்த்திடச் சொல்லி
பலவிதத் திறமையில் பளிச்சிட்ட அறிஞர்களை
பயனுறும் பணிகளும் ஆற்றிடச் செய்தார்
புவன மெங்கும் செறிந்து சிறந்த
புலமையிற் சிறந்த தமிழ் வல்லோரை,
கவனமாக ஒன்றி ணைக்கும் மாநாடுகளை
காலந்தோறும் கூட்டிய தவப் புதல்வனாவார்!

''யாதுமூரே யாவரும் கேளீர்'' – என்றதை
யதார்த்த மாக்க முனைந்தவர் செயலால்;
ஏதெமக்கு ஊரென ஏங்கிய தமிழர்
ஏதோ சற்று ஆறுதல் அடைந்தார்.
''தமிழர் பண்பாடு'' எனும் முத்திங்கள் இதழை
தரணியில் உலாவிட்ட தனிநாயக அடிகளார்,
தமிழுக்குச் செய்த தொண்டுகள் அனைத்திலும்
தனித்துவம் மிக்க வரலாறாய்த் திகழ்வார்!

www.tamilarangam.net



# பேராசிரியர் விபுலாநந்தர்

கிழக்கெழுங் கதிராய் நாட்டில்
கிளம்பிய விபுலாநந்தர்
முழக்கிய தமிழின் மேன்மை
முழுதுல கறிந்த உண்மை!
இலக்கிய மறியும்! ஆனால்
இங்குளோ ரறியாக் குறையை
விலக்குவோம்! கவலை வேண்டாம்!
விரைந்துநீ எழுவாய் தோழா...!

அறிவியல் பட்டம் பெற்றோன்!
ஆய்ந்திடும் புலமை கொண்டோன்!
குறியது தமிழ் நலமாய்
குமுறியே பணி புரிந்தோன்!
திறம்மிகு ''யாழ்நூல்'' தந்தே
தீந்தமிழ் இசையை வளர்த்தோன்!
அறம்மிகு வாழ்வின் பாதை
அறிந்து நீ நடப்பாய் தோழா!

சிதம்பரம் நகரில் திகழும்
சீர்மிகு அண்ணா மலையார்,
இதந்தரும் பல்கலைக் கழகம்
இவர்புகழ் உயர இவரும்
ஆற்றிய தொண்டு கற்றோர்
இதயத்தில் வாழும்! சிறந்த
இலக்கியப் பேராசான் அறிவீர்!

இலங்கையில் பல்கலைக் கழகம்
இயங்கவே தொடங்கிய நாளில்;
இலங்கியநம் அறிஞர் தலைமை
இயற்றியத் தமிழ்த் தொண்டை
துலங்கிடச் செய்வோம்! அடிகளார்

www.tamilarangam.net



துணிவினைப் பெறுவோம்! நாட்டில்
நலங்கெட் டழுவோர் வாழ
நற்பணி புரிவோம் தோழா!

தோற்றத்தில் துறவியாகித், தமிழ்த்
தொண்டுக்கே உருவமா னோன்;
ஏற்றத்தை இலங்கை மக்கள்
இன்னுமோ அறிய வில்லை?
சாற்றுவோம் அடிகளார் மாண்பைச்
சரித்திரம் தீட்டிக் காட்டி
ஏற்றுவோம் புகழ்க் கொடிதான்,
எங்கள் விபுலாநந் தருக்கே...!

*- வீரகேசரி (19.7.62)*

www.tamilarangam.net



# பாரதிதாசன்

எதிர்ப்பிற்கு அஞ்சாத புரட்சிக்காரன்! தான்
எண்ணியதை துணிந்துரைத்து கிளர்ச்சி செய்தோன்!
மதிப்பிற்கும் பணத்திற்கும் கொள்கை மாறி
மதிமயங்கித் துதிபாடா பாரதிதாசன்! தன்
புதுப்புது கருத்துக்களால் பாமாலை சூட்டி;
புதுப் பொலிவு தமிழன்னை பெறவும் செய்த
மதுக்கவிஞன்! பாரதிதாசன் கவித் திறத்தால்
மாட்சிபெற்ற தமிழ்க்கவிதை உலகு கண்டீர்!

பழகுதமிழ் நடையினிலே காதற் கதையை
படம்பிடித்துக் காட்டுகின்ற எதிர் பாராதமுத்தம்!
அழகுமிளிர் இயற்கைவளர் காட்சி எல்லாம்
அற்புதமாய் மயக்குவதே அழகின் சிரிப்பு!
அன்புவழி இல்வாழ்வாம் தமிழர் சால்பை
அணிதிகழ உரைப்பதுவே குடும்ப விளக்கு!
இன்பந்தரும் காதல்,வீரம் நாட்டுப் பற்றை
இயம்புகின்ற காவியமே பாண்டியன் பரிசு!

நடிப்பதற்குச் சுவையான படித்த பெண்கள்
நயம்நிறைந்த பிசிராந்தையர், சேரதாண்டவம்போல்
படிப்பதற்கும் சுவைபயக்கும் பல நாடகங்கள்
படைத்தளித்த நல்லாசான் பாரதி தாசன்!
கருந்திரையைக் கிழித்துவரும் இளம் பரிதிபோலே,
கவிந்தஇருள் மடமையினைப் பாட்டால் ஓட்டி
பெருந்தொண்டு புரிந்தவரே பாரதிதாசன்! அவர்
பெரும்பணியால் தமிழுக்கு பெருமை கண்டீர்!

மீனோடும், மான்மருளும் விழிகள் என்றும்,
மெல்லியலார் மேனியினை மலர், பஞ்சுஎன்றும்,
தேனோடு, பாலாகும் மொழிகள் என்றும்,
தேடிப் பழம் உவமைகளையே பாடிடாமல்,
ஞானமிகும் நோக்கோடு புது உவமைகளை,
நயமாகக் கவிதைகளிலே தந்து புரட்சிக்,
கானமிசைத்த கவியரசன் பாரதிதாசன்
காலத்தை வென்றவனாய் வாழ்வான் கண்டீர்!

www.tamilarangam.net



# என்.எஸ்.எம்.ராமையா

தோட்டத்துக் கணக்கப் பிள்ளையான
தொழிலையும் உதறிவிட்டு; எழுதும்
நாட்டத்தால் கொழும்பு சென்றே;
நற்கதைகளும் படைத்தோன்! கால்
ஓட்டத்தால் வறுமைப் பட்டே
உள்ளமும் தளர்ந்தான்! நோயும்
வாட்டத்தான் மறைந்த இராமையாவின்
வாழ்க்கை ஓர் பாடமாகும்!

தலைநகர் வாழ்விலும் தொழிலாளரின்
தன்மையைத் தோட்ட வாழ்வைக்
கலைநயம் மிளிரவே எழுதிக்
காட்டிய கரமும் சோரத்;
தலையினைச் சாய்த்த தோழன்,
தனித்திறன் கொண்ட எழுத்தின்
நிலையினைப் பற்றி நினைத்தால்
நெஞ்சமும் துடிக்கு தம்மா!

''ஒருகூடைக் கொழுந்து'' நூலின்
உன்னதத் ''தீக்குளிப்பு'' அன்னோன்
பெருமைக்கு மகுடமாகும்! கதையில்
பேசிடும் பாத்திரங்கள்! அவனின்
அருமையான படைப்பாய் மலையக
ஆக்க இலக்கியமாய் என்றும்
பெரும்புகழ் கூறும்! இராமையாவின்
பேரினை நிலைக்க செய்யும்

*(இந்த இரங்கற்பா என்.எஸ்.எம்.இராமையா இயற்கை எய்தியவேளை பாடப்பட்டு; 09-09-90 வீரகேசரி வார வெளியீட்டில் இடம்பெற்றது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறிஞ்சித்தென்னவன்

குமுறுதே என் நெஞ்சம்
குறிஞ்சி-தென்னவன் மறைவைக்கேட்டு!
எமனோடும் போராடித் தோற்று
இறுதியில் உயிர் துறந்த
குமரன்போல் திகழ்ந்த நண்பன்
குரலினிக் கவி சொல்லாதோ?
''அமரன்'' குறிஞ்சி-தென்னவன் என்ற
அவலமும் தோன்ற லாச்சோ?

''தோட்டத்து தொழிலாளி யான்
தொடுத்திடும் பாமாலை பாரீர்?'' என
ஏட்டிலே பல்லாண்டு காலம்
எழுதியோன் கவிதைச் சுவையாக
நாட்டிலே கற்றோரிடம் அவன்
நாமமும் நிலவக் கண்டோம்!
வீட்டிலே வேலு எனும் பெயரே
விளங்கிற்று குறிஞ்சித் தென்னவனாக!

வெற்றிலை சிவந்த வாயும்
வேட்டியும் சால்வையு மணிந்தே
பற்றோடு இலக்கிய அரங்குகளில்
பங்கேற்று பவனி வந்த
உற்றஎன் தோழன்! தென்னவன்
உடலமும் சாய்ந்து போக
புற்று நோய் வடிவில் வந்தோ,
பொல்லாத எமனும் வென்றான்!

கண்டியில் எனது தலைமையிலே
கவிஞனின் கவிதைத் தொகுப்பை
அன்று வெளியிட்ட போது;
ஆனந்தக் கண்ணீரோடு-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நன்றி தெரிவித்த நிகழ்வை
நான் இன்றும் மறக்கவில்லை!
என்றும் மலையகத்தைப் பற்றியே
எண்ணினோன் மறைந்தா போனான்?

பட்டங்கள், பண முடிப்பு
பாராட்டு, பொன்னாடை போர்த்த வென,
கட்டங் கட்டமாகப் பெற்ற
கவிஞன் குறிஞ்சி தென்னவனும்,
மணிவிழாக் கண்டோன்! அவன்
மனம் விழைந்த இலக்கியத்தைப்
பணியாகப் படைத் தளித்தால்,
பரவசம் அவன் ஆவி கொள்ளும்,
தோட்டத்து வட்டத்துக்குள் மட்டும்
தொழிலோடு முடங்கிடாமல்; தமிழ்ப்
பாட்டெழுதும் உணர்வு துள்ள
பாடியே வலமும் வந்தோன்!
ஓட்டமாய் எம்மை விட்டோடி
உருவத்தால் மறைந்தி ட்டாலும்,
தீட்டிய அவன் கவிதைகளில்
தரிசனம் தருவான் என்றும்

- *தினகரன்*

www.tamilarangam.net

# தமிழோவியன் கவிதைகள்

மலையகநாட்டார் பாடலின் வளமான மரபில் தோய்ந்த தமிழோவியனின் கவிதைகள் நாட்டார் மரபின் செழுமையில் புஷ்பித்திருப்பதை மிக எளிதாகக் கண்டு கொள்ள முடியும். மலையகத் தொழிலாளர் சமுதாயத்தில் அவர்களின் ஆசைகள், ஏக்கங்கள், கனவுகள், இயலாமைகள், கஷ்டங்கள், சந்தோஷங்கள், நிறைவுகள் அனைத்திலும் கரைந்துபோன தமிழோவியன் காலாந்தரமாய் அந்த மக்கள் கூட்டத்தின் ஆழ்மனத்தில் பாதாள கங்கையாய் - அருவித்தாரையாய் - தீப்பிழம்பாய் - பனிப்பாளமாய் குளிர்ந்தும் தகித்தும் செறிந்திருக்கும் நாட்டார் மரபின் செழுங்குருத்தாகத் திகழ்கிறார்.

மலையகமக்களின் வாழ்வு எப்போதுமே துயரஞ் சூழ்ந்ததாகவே திகழ்ந்தபோதும் அது துன்பக்கேணியாக மட்டுமே இருந்துவிடுவதில்லை. எல்லா இன்மைகளுக்கும் இயலாமைகளுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் ஆசைகளும் மோகங்களும் தாபங்களும் காதலும் மனஎழுச்சிகளும் மலையகமாந்தர் வாழ்வில் மலர்ச்சிகளை ஏற்படுத்தவே செய்துள்ளன.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட ஐம்பதாண்டு காலப்பகுதியில் மலையக மாந்தர்தம் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை - எழுச்சி, வீழ்ச்சிகளை, தோல்விகளை - நிராசைகளை புத்திபூர்வமாயும் உணர்வுப்பூர்வமாயும் அறிந்தும் தெளிந்தும் தொடர்ந்து கவிதை படைத்து வந்த மலையகத்தின் மூத்த பெருங்கவிஞர் தமிழோவியனின் கவிதைகள் நூல் உருப்பெறுவது மலையக இலக்கிய ஆர்வலர்களின் நெஞ்சங்களுக்கு குளுமையூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

மு. நித்தியானந்தன் முன்னுரையிலிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்